விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 04 வெள்ளிக்கிழமை (19.12.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 365

ராம்கோ
RAMCO
THE RAMCO CEMENTS LIMITED
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# ஜனாதிபதித் தேர்தலில் தொடரும் சட்டமீறல்கள்


## தேர்தல் பணிகளில் இராணுவம் - கபே

(கொழும்பு)

அடுத்த மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள ஏழாவது ஜனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ள அதேவேளை, தேர்தல் பணிகளில் இராணுவத்தினரும் மற்றும் தேர்தல் நடைமுறைகளை மீறுகின்ற செயற்பாடுகளும் இடம்பெற்று வருவதாக கபே என்ற தேர்தல் கண்காணிப்பு குழு குறை கூறியிருக்கின்றது.

குறிப்பாக இராணுவத்தினர் மத்தியில் அரசியல்வாதிகள் அரசியல் பிரசார நடவடிக்கைகள்மேற்கொண்டு வருவது தொடர்பாகத் தமக்குத் தகவல்கள் கிடைத்திருப்பதாக இந்த கண்காணிப்பு குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்திருக்கின்றார். கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியாவில் இத்தகையசம்பவம்ஒன்றுஇடம்பெற்றிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்

வவுனியாவில் உள்ள இராணுவ முகாம் ஒன்றிற்குச் சென்றிருந்த இரண்டு முக்கிய அமைச்சர்கள் பிரதேச அரசியல் வாதிகளுடன் கலந்து கொண்ட அரசியல் கூட்டம் ஒன்று நடைபெற்றிருக்கின்றது. இராணுவ முகாமுக்குள் உள்ளூர் அரசியல்வாதிகளை அழைத்துச் சென்று அரசியல் கூட்டம் நடத்தப்பட்ட சம்பவ 23ஆம் பக்கம் பார்க்க....



## ரூபாய் 7 ஆயிரத்து 536 மில்லியன் வடக்கு கல்வி அமைச்சிற்கு ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு மொத்த பாதீட்டில் 7 ஆயிரத்தி 536 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

எனினும் கோரப்பட்ட நிதியினைவிட குறைவாகவே ஒதுக்கப்பட்டுள்ளதனால் இளைஞர் விவகாரங்களுக்கு எவ்வித நிதியும் ஒதுக்கப்படாததோடு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு 1000 ரூபாய் மட்டுமே அதிகரிக்க முடியும் என வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார்.

நேற்றைய வரவு செலவுத்திட்ட இரண்டாவது அமர்வில் கல்வி அமைச்சுக்கான வரவு செலவுத் திட்டத்தினை சமர்ப்பித்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதி 24ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கையை முன்னேற்றிச் செல்ல வடக்கு மக்களே ஒத்துழையுங்கள்

### முள்ளியவளையில் மகிந்த உரை



(கொழும்பு)

இலங்கையில் முப்பதாண்டுகால இருண்ட யுகத்திற்கு முடிவுகட்டி, அபிவிருத்தி முன்னெடுக்கப்பட்டுள்ள வேளையில், நாடு பின்னோக்கிச் செல்வதற்கு இடமளிக்க முடியாது என்றும் மேலும் வளம் நிறைந்த ஓர் எதிர்காலத்தை நோக்கி இலங்கை முன்னேறிச் செல்வதற்கு வடபகுதி மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் முல்லைத்தீவு முள்ளியவளையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலுக்கான வடமாகாணத்திற்கான முதலாவது பரப்புரை கூட்டத்தில் உரையாற்றிய ஆளும் தரப்பு வேட்பாளரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இனவாதம் பேசுவதாகக் குற்றம் சாட்டியுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இனவாத அரசியல் மிக மிக மோசம் என்றும் எமக்குத் தேவை சகோதர பாசம் என்றும் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிகையில், முப்பது ஆண்டுகள் யுத்தம் நடைபெற்றது. ஆனால் ஐந்து ஆண்டுகளாகவே அபிவிருத்திச் செயற்பாடுகள் இடம்பெற்றுவருகிறது. இந்த ஐந்து ஆண்டுகாலத்தில் வடகுதிக்கு பெருமளவு நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. பல அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட் 24ஆம் பக்கம் பார்க்க....

## ரூபாய் 5 ஆயிரத்து 158 மில்லியன் வடக்கு சுகாதார அமைச்சிற்கு ஒதுக்கீடு


(யாழ்ப்பாணம்)

2015 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் வடமாகாண சுகாதார அமைச்சிற்கு மீண்டெழும் செலவீன ஒதுக்கீடாக 4 ஆயிரத்து 350. 371 மில்லியன் ரூபாயும் முதலான செலவீன ஒதுக்கீடாக 808.5 மில்லியனுமாக மொத்தம் 5 ஆயிரத்து 158.871 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்தியகலாநிதி ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய வரவு செலவுத்திட்டமர்வில் வடமாகாண சுகாதார மற்றும் சுதேச வைத்தியத்துறையின் 2015 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தினை சமர்ப்பித்து உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது வடக்கு மாகாணமானது கடந்த 30 வருட கால கொடிய யுத்தத்தினால் பல் 23ஆம் பக்கம் பார்க்க....

## பெண்ணின் எலும்புக்கூடு எரிக்கப்பட்டநிலையில் மீட்பு



(கரணவாய்)

குப்பைகளால் எரிக்கப்பட்ட நிலையில் பெண் ஒருவரின் எலும்புக் கூடு ஒன்று வடமராட்சி முள்ளிப்பகுதியில் நேற்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி முள்ளிச்சந்திக்கும் யார்க்கருப் பகுதிக்குமிடையில் சுமார் 30 வயது மதிக்கக் கூடிய பெண் ஒருவரின் எலும்புக் கூடே அப்பகுதியில் புல் வெட்டிய இராணுவத்தினரால் 23ஆம் பக்கம் பார்க்க....

## காணி அபகரிப்பு தொடர்பில் அரசியல் ரீதியாகவே தீர்வு !

### இராணுவத்திடம் பேசிப் பயனில்லை – சி.வி


(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் காணி தொடர்பில் தான்தோன்றித்தனமாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் இராணுவத்திடம் பேசிக் கொண்டிருக்க முடியாது.

காணி அபகரிப்புக்கள் தொடர்பில அரசியல் ரீதியாகவே பேசித்தீர்க்க வேண்டுமென வடமாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் வரவு செலவுத்திட்ட அமர்வின் இரண்டாம் நாள் நேற்று நடைபெற்றது.

இதில் அவர் மேலும் தெரிவிக்கையில், 23ஆம் பக்கம் பார்க்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கூட்டமைப்பினரின் பிள்ளைகள் வெளிநாடுகளில் வசிக்கின்றார்கள்

## இங்கு உங்கள் பிள்ளைகள் தான் உள்ளனர்- *மகிந்த*

(கொழும்பு)

இனவாதம் பேசும் த.தே.கூட்டமைப்பின் தலைவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில், உங்களுடைய பிள்ளைகள்தான் இங்கு இருக்கின்றார்கள். அவர்களுடைய எதிர்காலத்தைப் பற்றி நீங்கள் யோசிக்க வேண்டும். கடந்த முறை எனக்கு நீங்கள் வாக்களித்தீர்கள். வளமான அபிவிருத்தியை நாங்கள் உங்களுக்கு ஏற்படுத்தியிருக்கின்றோம். எதிர்காலத்திலும் வளமான அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு நீங்கள் எனக்கு ஆதரவளிக்க வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடந்து போன இருண்ட யுகத்திற்கு திரும்பிச் செல்வதற்கு அனுமதிக்க முடியாது. குரோதம் நிறைந்த அந்தக் காலத்தை மறந்து, எல்லா மத மக்களும், எல்லா இன மக்களும், நாம் எல்லோரும் ஒன்றுபட வேண்டும். ஒருவர் மற்றவர்களுடைய கலாசாரத்தை மதத்தை மதித்து வாழ வேண்டும். அதற்காக எனக்கு ஆதவரளிக்க வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றையதினம் முள்ளியவளையில் கேட்டுக்கொண்டார்.

தற்போதுள்ள அமைதியான நிலைமையை இல்லாமல் செய்வதற்கு சிலர் முயற்சிப்பதாக குற்றம் சுமத்திய மகிந்த, தலைவர்கள் பலர் வருவார்கள், பலதையும் கூறுவார்கள். அவர்கள் இங்கு வசிப்பவர்களல்ல. அவர்களுடைய பிள்ளைகள் வெளிநாடுகளில் படிக்கின்றார்கள். எனவே இங்கு வருபவர்கள் உங்கள் மீதோ உங்கள் பிள்ளைகள் மீதோ அக்கறை கொள்ளமாட்டார்கள். இந்த நாட்டில் உள்ள எல்லா இன மக்களையும் நாட்டில் உள்ள எல்லா சிறுவர்களையும் பாதுகாக்க வேண்டிய உரிமை எனக்குத்தான் இருக்கின்றது என்று நான் நம்புகிறேன். எனவே வளமான ஓர் எதிர்காலத்தை நோக்கி நீங்கள் எல்லோரும் என்னுடன் கரம் கோர்த்துச் செயற்படுவதற்கு முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். (செ-11)

# வீதியை மூடியது வெள்ளம் மண்டைதீவில் அனர்த்தம்

மண்டைதீவு-அல்லைப்பிட்டி இணைப்பு வீதி மழை வெள்ளத்தில் மூடியிருப்பதால் அப்பாதையால் பயணிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஏற்கெனவே சேதமடைந்த இந்த வீதியில் இப்போது 2 அடி உயரத்தில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால், அப்பாதையால் பணிப்பது உயிர் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய சூழ் நிலை உருவாகி உள்ளது.

மழை வெள்ளம் காரணமாக இவ் வீதியில் அமைந்துள்ள மண்டைதீவு தில்லேஸ்வரம் சிவன் கோவிலில் பூசை வழிபாடுகளை நடத்துவதிலும் பல இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

வீதியை மூடியுள்ள வெள்ள அவலம் குறித்து வேலணை கமத்தொழில் திணைக்களத்தின் க்வனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. (ந)

# பத்திரிகை திருடன் நையப்புடைப்பு

(யாழ்ப்பாணம்)

தினசரி பத்திரிகையை தினமும் அதிகாலை வேளை திருடி வந்த திருடன் ஒருவர் நேற்றுக் காலை பத்திரிகை முகவரிடம் வசமாக மாட்டிக் கொண்டு நையப்புடைக்கு உள்ளானார்.

யாழ்ப்பாணம் றக்கா வீதியில் அமைந்துள்ள பத்திரிகை விற்பனை நிலையத்தில் தினசரி பத்திரிகையை அதிகாலை வேளை திருடுவதனை யாழ்ப்பாணத்தினை அண்மித்த பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் வாடிக்கையாகக் கொண்டுள்ளார்.

இந்நிலையில் நேற்றைய தினம் பத்திரிகை விற்பனை முகவர் அதிகாலை வேளை தினசரி பத்திரிகையினை கடையில் வெளியே வைத்துவிட்டு குறித்த நபருக்காக வெளியிலேயே மறைந்திருந்து காத்துக் கொண்டிருந்தார்.

அந் நபர் பத்திரிகையை வழமைபோல திருட வந்த வேளை பத்திரிகை முகவரிடம் சிக்கிக் கொண்டார்.

இதை யடுத்து குறித்த திருடனை பத்திரிகை முகவர் நையப்புடைத்து எச்சரிக்கையும் செய்து விடுவித்தார். (செ-11)


## கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த ஒன்றுகூடல்

21.12.2014-ல் நடைபெற இருந்த மேற்படி ஒன்றுகூடல் தவிர்க்க முடியாத காரணங்களினால் 25.01.2015-ம் நாளிற்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதனை பழைய மாணவர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

**இ.நிசாந்தன்** -செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி

(சி-9426)





## யாழ்ப்பாணத்தில் வாழும் கலையில் ஸ்ரீ ஸ்ரீ யோகா

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள ஆசிரியரால் பயிற்றுவிக்கப்படுகிறது.

**பயிற்சியின் பலன்கள்**

- ✦அமைதியான மனம்
- ✦தெளிவான சிந்தனை
- ✦மன இறுக்கத்தை போக்கும் தன்மை
- ✦ உடல் பருமன் குறைதல்
- ✦ நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்தல்

இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்.
இன்றே முற்பதிவு செய்து கொள்ளுங்கள்.

திகதி:-20.12.2014-24.12.2014
வயது:-13ற்கு மேற்பட்டோர்
இடம்:-விஸ்வேஸ்வரி மணி மண்டபம்
கன்னாதிட்டி காளி கோயில்.
நேரம்:-மு.ப 6.00-7.30; பி.ப 5.00-6.30

**தொடர்புகளுக்கு:-0774936221, 0777607008, 0772247635, 0777222133**

(8811)



## விற்பனைக்கு

இணுவில் பாலாவோடையில்
வீடுவளவு விற்பனைக்கு.
தரகர் தேவையில்லை.
இரண்டு பரப்பு ஒரு குளி

தொடர்புகளுக்கு:
**0775720236**

(8791)



## பணியாள் தேவை

உணவகம் ஒன்றுக்கு வேலையாட்கள் உடன் தேவை.

சமையலாளர்
ரைஸ் தயாரிப்பவர்
பர்ரோட்டா தயாரிப்பவர்
உணவுபரிமாறுபவர்கள் ஆண்/பெண்
சிட்டை எழுதுனர் ஆண்/பெண்

**தொடர்புகளுக்கு:-0771711215, 0771262724**

(சி-9420)



## பணியாளர் தேவை

நெல்லியடி - தூரிகை நிறுவனத்தில் பணி புரிவதற்கு சகல வேலைகளும் செய்யக்கூடிய ஆரோக்கியமான பெண் பணியாளர் தேவை

*சம்பளத்துடன் கூடிய வேலைக்கான பயிற்சி வழங்கப்படும்*

குடும்பத் தலைவரை இழந்திருப்பவர்களுக்கு அல்லது வசதி குறைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

பணிபுரிவதற்கு பொருத்தமானவர்கள் மட்டும் எமது நிறுவனத்திற்கு நேரடியாக உடன் வருகை தரவும்

*சில நிபந்தனைகளுக்கு அமையவே வேலை வழங்கப்படும்*

**தூரிகை**
மத்திய கல்லூரி வீதி,நெல்லியடி

(சி-9424)



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



## வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதி காரியாலயத் திறப்பு விழா





கௌரவ சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் வட்டுக்கோட்டை காரியாலயம் இன்று 19.12.2014 திங்கட்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது. எனவே அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்கவும்.

இடம்:-பிரதான வீதி, சங்கானை
(கூடத்தில் அம்மன் ஆலயம் முன்பாக)
நேரம்:-மாலை 4.30

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி.**

(8814)



## சேவை நலன் பாராட்டு



**திருமதி சரோஜா சிவானந்தன்**
(பிரதி அதிபர்)

எமது ஆசிரிய சேவையில் 38 வருடங்களில் யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் 28 ஆண்டுகளிற்கு மேலாக ஆசிரியராக, பகுதித்தலைவராக, பிரதி அதிபராக சேவையாற்றி இன்று 19.12.2014-இல் ஓய்வுபெறும் திருமதி சரோஜா சிவானந்தன் அவர்களின் சேவையினைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

### சேவை விபரம்

| பாடசாலை | காலம் |
|---|---|
| 1) க/கண்டி சீ.சீ.தமிழ் வித்தியாலயம் | 25.05.1977–09.09.1979 |
| 2) ப/பண்டாரவளை அ.ஆசிரிய கலாசாலை | 10.09.1979–31.12.1979 |
| 3) க/கண்டி சீ.சீ.தமிழ் வித்தியாலயம் | 01.01.1980–31.12.1980 |
| 4) நு/தலாவாக்கலை அ.ஆசிரிய கலாசாலை | 01.01.1981–31.12.1981 |
| 5) வ/நெடுங்கேணி ம.வி | 01.01.1982–30.04.1986 |
| 7) யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி | 01.05.1982–18.12.2014 |

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
பாடசாலை சமூகம்.

(8771)



**இவ்வருடம் சாதாரண தர பரீட்சைக்கு தோற்றி உயர்தர வகுப்புக்காக கணித, உயிரியல் விஞ்ஞானத் துறையினை தெரிவு செய்யும் மாணவர்களுக்கான.....**

ஒன்று கூடல்
GATHERING

THE NSA

காலம் : 22-12-2014 திங்கள் (காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 1.00 மணி வரை)
இடம் : வடமாகாண விஞ்ஞான சங்க கேட்போர் கூடம் (4வது மாடி) கூட்டுறவாளர் வீரசிங்கம் கட்டடத்தொகுதி இல-12 K.K.S வீதி யாழ்ப்பாணம். HOT LINE - 077 123 7 333

- இதுவரை காலங்களில் உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களில் 90% சதவீத மாணவர்கள் தங்கள் இலக்கினை தவறவிட்டு தோல்விக்குள்ளாகி இருக்கின்றார்கள் என்பதையும் அதற்கான காரணங்களையும் அறிந்துள்ளீர்களா ???? ....................
- உங்கள் திறமை மீது நம்பிக்கை உடையவராக இருந்தும் கடந்த வருடங்களில் சாதாரண தர பரீட்சையில் 9A சித்தி பெற்று உயர்தர வகுப்பில் பல்கலைக்கழக அனுமதியினைத் தவற விட்ட பெரும்பாலான மாணவர்களின் நிலை கண்டு அச்சம் கொள்கின்றீர்களா ???? ....................

**தங்கள் இலக்கினை வெற்றி கொள்ள விரும்புகிறீர்களா ???? ..........**

**மேலே விபரமளிக்கப்பட்ட ஒன்றுகூடலில் பங்குபற்றுவதன் மூலம் பாதுகாப்பான உயர் கல்விச் சேவை ஒன்றில் இணைந்து கொண்டு உங்கள் இலக்கினை வெற்றி கொள்ள இருக்கும் உங்களை அன்புடன் வரவேற்பதுடன் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

முக்கிய குறிப்பு

- உள்நுழைவு முற்றிலும் இலவசமானது
- தங்களுக்கு வழங்கப்படும் விண்ணப்பதாள் தொகுதிக்குரிய கட்டணம் ரூபா 100/= உடன் காலை 8.45 ற்கு முன்பாக கேட்போர் கூடத்திற்கு சமூகமளிப்பதன் மூலம் ஒருங்கிணைப்பாளர்களிற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
- இவ் அறிவித்தலே இறுதியானது.

ஏற்பாடு • உயர்தர வகுப்பு விஞ்ஞான மாணவர் ஒன்றியம் (2014-2015) தூய விஞ்ஞான திணைக்களம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
## வரவு செலவுத் திட்டம்-2015

1987 ஆம் ஆண்டில் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 168ம் பிரிவிற்கிணங்க வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் 2015ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு 2014.12.18ம் திகதி தொடக்கம் 2014.12.26ம் திகதி வரை பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இதனை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலகங்களிலும், சுன்னாகம், உடுவில், ஏழாலை பொது நூலகங்களிலும் vsps.lkஎன்ற எமது இணையத்தளத்திலும் பார்வையிடலாம் என்பதை அறியத்தருகின்றேன். (சி-9422)

தி.பிரகாஷ், தவிசாளர், வலி.தெற்கு பிரதேசசபை, சுன்னாகம், 2014.12.18

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா சுந்தரம் (ஓய்வுபெற்ற ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், உடுப்பிடடியை வசிப்பிடமாகவும், கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கனகம்மா சுந்தரம் அவர்கள் 17-12-2014 புதன்கிழமை அன்று கொழும்பில் காலமானர்.

அன்னார், காலஞ்சென்ற N.C.S. சுந்தரம்(சமூக சேவையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் கிறிஸ்ரினா குலராணி (லண்டன்), குளோரியா மகாராணி (லண்டன்), வின்சன் குலராஜா(கொழும்பு), மகாராஜா (லண்டன்), வெஸ்லி ஜெயராஜா (லண்டன்), தனுஷா (லண்டன்), காலஞ்சென்ற பூமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், ரத்தினம் ஆரோக்கியம், காலஞ்சென்ற குமாரவேலு ஆகியோரின் பாசமிகு சகோதரியும், Dr.ஜேம்ஸ்(லண்டன்), செல்வராஜா (லண்டன்), ராஜேஸ்(கொழும்பு), மகாராணி (லண்டன்), சிந்தியா (லண்டன்), பாலா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜொனத்தன், சரன், நிரோஷினி, ஜேசன், மகிளினி, ஷாமளி, ஜக்கின், லொறயின், கோட்னி, கெவின், அவ்ரில், நிலக்ஷி, டிலுக்ஷி, வரோஷன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை (20.12.2014) காலை அவரது இல்லத்தில் ஆராதனை இடம் பெற்று காலை 11 மணியளவில் மட்டக்குளிய மாதம்பிட்டி சேமக்காலையில் மெதடிஸ்த பிரிவில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

வீட்டு முகவரி:
65/376 Vystwyke Road, Craw Island,
Mattakuliya, Colombo-15. (8813)

T.p:-0778880132

தகவல்:-
குடும்பத்தினர்

## யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை

### வாகனம் ஒன்றை வாடகைக்கு வழங்கக்கூடியவர்களிடமிருந்து கேள்விப் பத்திரம் கோரல்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் அறிவியல் நகர் கிளிநொச்சியில் உள்ள பொறியியற் பீடத்தின் பாவனைக்காக மாதாந்த கொடுப்பனவு அடிப்படையில் வான் ஒன்றை வாடகைக்கு வழங்கக்கூடிய வாகன உரிமையாளரிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. வாகனத்தின் முதற்பதிவு 05 வருடங்களுக்கு மேற்படாமலும் வாகனத்தின் உற்பத்திக்காலம் 07 வருடங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். வெற்றி பெறும் மனுதாரர் எரிபொருளுடன் வாகனத்தை வழங்கும்படி வேண்டப்படுவார்.

| வாகன வகை | எரிபொருள் வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| பயணிகள் வான் (14 அல்லது 15 ஆசனங்கள்) | டீசல் (dual A/C) | 01 |

விண்ணப்பப்படிவம் விலைமனு ஆவணங்கள் மற்றும் மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/= பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் அல்லது மக்கள் வங்கியின் கணக்கிலக்கம் 162100160000880 இற்கு செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் 29.12.2014 மதியம் 12.00 மணிவரை சிரேஷ்ட உதவிப் பதிவாளர், நிர்வாகக்கிளை இடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்களைக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வாகனம் ஒன்றை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி" என அடையாளமிட்டு 02.01.2015 பி.ப 2 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் தலைவர், கேள்விச்சபை, த.பெ எண் 57, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும் அல்லது பதிவாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்பட வேண்டும்.

கேள்வி விண்ணப்பங்கள் 02.01.2015 அன்று பி.ப 2.30 மணிக்கு பரிசீலிக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆவணங்கள் பரிசீலிக்கப்படும் இடமான சபா மண்டபத்திற்கு சமுகமளிக்கலாம். கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**தலைவர், கேள்விச்சபை,**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம். 16.12.2014**

# ஓராண்டு நினைவு நாள்



**சி.பஞ்சாட்சரம்**
**தோற்றம்:- 13/10/1949**
**மறைவு:- 29/07/2013**

நீங்கள் கட்டியணைத்து
கொஞ்சி வளர்த்த
எட்டு மக்களையும்
கண்ணீர் கடலில் ஆழ்த்தி விட்டு
கண்மூடி சென்றீர்களே
ஆற்றொண்ணாது
அழுதழுது எம் கண்ணீர்
வற்றி விட்டது.
தாத்தா பாட்டியென்று தவிக்கும்
பேரச் செல்வங்களின் நிலையென்ன
சொல்ல அம்மாவே, ஐயாவே,
உங்கள் அன்பு நிழலை நாம்
இழந்து நிற்கின்றோம்.
உங்கள் ஆசிகள்
விண்ணிலிருந்து
எமக்கு கிடைக்கும்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!



**ப.ஜெயராணி**
**தோற்றம்:- 26/01/1956**
**மறைவு:- 29/12/2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்



## வாழ்க்கை வரலாறு...

06 ...அந்த அளவுக்கு அவர் நடிப்பு பிரமாதம்! என்று புகழ்ந்தார். இதைக் கேட்டு பூரித்துப் போனார் ரஜினி. தொடர்ந்து நாடகங்கள் நடத்தினார். அவர் நடிப்பை சக ஊழியர்கள் புகழ்ந்தனர்.

ஆனால், ரஜினியின் அப்பாவுக்கு மட்டும் மகன் நாடகத்தில் நடிப்பது கொஞ்சமும் பிடிக்கவில்லை. மாலை நேர கல்லூரியில் சேர்ந்து படி. பொலிஸில் சேர்ந்து பெரிய அதிகாரியாகலாம்! என்று கூறிக்கொண்டிருந்தார்.

ஆனால், ரஜினிக்கு சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டு, நாளுக்கு நாள் வளர்ந்தது. சிலர், அவருடைய கறுப்பு நிறத்தை கேலியாக குறிப்பிடுவார்கள். ஆனால் ரஜினி அதையெல்லாம் பொருட்படுத்துவது இல்லை. சினிமாவில் சேர்ந்தே தீர வேண்டும் என்று உறுதி எடுத்துக் கொண்டார்.

இது பற்றி தன்னுடைய நெருங்கிய நண்பரான புட்ராஜிடம் தெரிவித்தார். சினிமாவில் நடித்தால் நீ நிச்சயம் பெரிய நடிகனாக வருவாய். உன் ஸ்டைல் உனக்கு ரொம்ப உதவும் என்றார் புட்ராஜ். கண்டக்டர் வேலைக்கு எப்போது முழுக்கு போடுவது? எப்போது சினிமாவில் சேருவது என்று சதா யோசித்தபடி இருந்தார் ரஜினி. அதற்கான வாய்ப்பு எதிர்பாராமல் வந்தது.

பொங்களூரில் பஸ் கண்டக்டராக வேலை பார்த்த ரஜினிகாந், நீண்ட விடுமுறையில் சென்னைக்கு வந்து, திரைப்பட கல்லூரியில் சேர்ந்து, 2 ஆண்டுகள் நடிப்புப் பயிற்சி பெற்றார்.

நடிப்பு, டைரக்ஷன், ஒளிப்பதிவு, எடிட்டிங், திரைக்கதை வசனம் எழுதுதல் ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்காக, முதன் முதலாக புனேயில் திரைப்படக் கல்லூரியை மத்திய அரசு தொடங்கியது.

அதேபோல், சென்னையில் பிலிம் இன்ஸ்டிடியூட் 1973 இல் தொடங்கப்பட்டது. இதற்கு தலைவராக பி.நாகி ரெட்டியும், நிர்வாகி (கரஸ்பான்டெண்ட்) ஆக டி.வி. எஸ். ராஜாவும் இருந்தனர். ராஜாராம்தாஸ் முதல்வராக இருந்தார்.

### விளம்பரம்

இந்த பிலிம் இன்ஸ்டிடியூட் விளம்பரம் ஒருநாள் பத்திரிகைகளில் வெளியாயிற்று. நடிப்பு, டைரக்ஷன், எடிட்டிங், ஒளிப்பதிவு முதலியவற்றில் பயிற்சி பெற, விண்ணப்பம் அனுப்பலாம் என்று அதில் குறிப்பிட்டிருந்தது.

இந்த விளம்பரத்தை ரஜினி பார்த்தார். நடிப்பு பயிற்சி பெற்றால், சினிமாவில் சுலபமாக நுழைந்துவிடலாம் என்று நினைத்தார் விண்ணப்பம் அனுப்பினார்.

சில நாட்களில் நேர் காணலுக்கு வருமாறு கடிதம் வந்தது. நண்பர்களிம் விடை பெற்றுக்கொண்டு சென்னைக்கு ரெயில் ஏறினார். குறிப்பிட்ட நேரத்தில் நேர்காணலுக்கு பிலிம் இன்ஸ்டிடியூட்டுக்குச் சென்றார். அங்கு சினிமா பற்றி பல கேள்விகள் கேட்டனர். கேள்விகளுக்கு தன்னம்பிக்கையுடனும் புத்திசாலித்தனத்துடனும் பதில் சொன்னார்.

கேள்விகளை அவர் எதிர்கொண்ட முறை, ஸ்டைலாக பதில் சொன்ன விதம், தேர்வு செய்யும் அதிகாரிகளைக் கவர்ந்தன. நடிப்பு பயிற்சி பெற ரஜினியை அவர்கள் தேர்வு செய்தனர். ரஜினிக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. பெங்களூருக்கு திரும்பிச் சென்றார். தந்தையிடமும் அண்ணனிடமும் விடயத்தைச் சொன்னார்.

## திரைப்படக் கல்லூரியில் 2 ஆண்டு நடிப்பு பயிற்சி



ரஜினிகாந்த் நடிப்பு பயிற்சி கல்லூரியில் படித்தபோது நண்பர்களுடன்

ரஜினி நடிப்புப் பயிற்சி பெறுவதில் தந்தைக்கு விருப்பம் இல்லை. அண்ணன் அரைகுறை மனதுடன் சம்மதித்தார். கண்டக்டர் வேலையை விட்டுவிடாதே! நீண்ட விடுமுறை எடுத்துக் கொண்டு நடிப்புப் பயிற்சிக்குப்போ பா! என் றார்.


ரஜனியின் நண்பர்கள் மத்தியில் உற்சாகம் கரைபுரண்டு ஓடியது. எதிர்காலத்தில் பெரிய நடிகனாக வரு வாய்! என்று வாழ்த்தினார் கள். ரெயில் நிலையத்துக் குப் பெரும் திரளாக வந்து வழியனுப்பினார்கள்.

(தொடரும்)

# அதிசய உலகம்

### வெள்ளைத்திமிங்கலம்

பெலுகா திமிங்கலம் என்று அழைக்கப்படும் இந்த வகைத் திமிங்கலங்கள் அல்பினோநோய் இல்லாமல் இயற்கையாகவே வெள்ளை நிற தேவதை போல அமைந்திருப்பது ஆறுதல் தரும் விஷயம்தான்



### சீனாவில் ஏழு கால்களுடன்பிறந்த ஆட்டுக்குட்டி!



மனிதர்கள் சில நேரங்களில் ஆறு விரல்களுடன் பிறப்பதுபோல இதுவும் ஒரு சாதாரணமான விடயம்தான் என்றும் இந்த ஆட்டுக்குட்டி தொடர்ந்து உயிர்வாழசாத்தியமில்லை என்றும் கால் நடை மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டபோதிலும் மனிதர்களால் இதுவொரு அமானுஷ்ய விஷயமாகவே ஆச்சர்யமாக பார்க்கப்பட்டது!

# சமைப்போம் சுவைப்போம்

## ரவை பரோட்டா



தேவையான பொருட்கள்

ரவை - 2 1/ 2 கப்

உப்பு- தே.அளவு

ஆலிவ் ஆயில்- 2 டேபிள்ஸ்பூன்

செய்முறை:

ரவை பெரியதாக இருந்தால் அதை மிக்ஸியில் அரைத்து நைசாக்கிக் கொள்ளவும்.

ரவையுடன் உப்பு, 2 டேபிள் ஆலிவ் ஆயில் ஊற்றி தேவையான அளவு தண்ணீரை சிறிது சிறிதாக சேர்த்து மாவு மிருதுவாகும் வரை பிசையவும்.


பின்னர் அதனை எலுமிச்சை அளவு உருண்டைகளாக உருட்டி சப்பாத்திகளாக தேய்க்கவும்.

பின்னர் அதனை தோசைக்கல்லில் போட்டு மீடியம் தீயில் சிறிது எண்ணெய் ஊற்றி சுட்டு எடுக்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி

## 15வது ஆண்டு நிறைவு விழா



## 20.12.2014

இடம்:- இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி மண்டபம், நீராவியடி.

காலம்:- 20.12.2014 (சனிக்கிழமை) பி.ப. 2.30 மணி

தலைமை:- உயர் திரு. சிவஞானம் வெற்றிவேலாயுதம் (நிர்வாக இயக்குநர், வலம்புரி)

பிரதம விருந்தினர்:- பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர் - யாழ். பல்கலைக்கழகம்)

### ஆசியுரைகள்

- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் (ஆதீன முதல்வர், நல்லை ஆதீனம்)
- சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள் (தலைவர், சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம்)
- அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் (குரு முதல்வர்- யாழ். மறை மாவட்டம்)
- அதிவண. பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் (முன்னாள் பேராயர், தென்னிந்தியத் திருச்சபை)
- அல்ஹாஜ் ஏ.எம்.ஏ. அஸீஸ் மௌலவி (காஸிமி) (தலைவர், யாழ், கிளிநொச்சி மாவட்ட உலமா சபை)
- கலாநிதி ஆறு.திருமுருகன் (தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

### வாழ்த்துரைகள்

- உயர்திரு. எஸ். தட்சணாமூர்த்தி (இந்திய பிரதித் துணைத்தூதுவர்- யாழ்ப்பாணம்)
- பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா (ஓய்வு நிலை தமிழ்த்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)
- பேராசிரியர் தி.வேல்நம்பி (பீடாதிபதி, வணிக முகாமைத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்)

### நிகழ்ச்சி நிரல்

- மங்கல இசை (நல்லூர் பி.ரஜீவன் குழுவினர்)
- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- வரவேற்பு நடனம் (மாணவிகள், கலைத்தூது அழகியல் கல்லூரி, திருமறைக்கலாமன்றம்)
- வரவேற்புரை: திரு.சி.ஜி.திருமாலழகன் (வலம்புரி)
- தலைமையுரை
- ஆசியுரைகள்
- வாழ்த்துரைகள்
- பிரதம விருந்தினர் உரை
- சிறப்புரை:- ந.விஜயசுந்தரம் (வலம்புரி)
- கௌரவிப்பு : உயர்திரு. க.லோகநாதன் (மூத்த ஊடகவியலாளர்)
- வாழ்த்துப்பா : மாவை.நா.கஜேந்திரன் (பொது முகாமையாளர்- வலம்புரி)
- இசைக் கச்சேரி
  - பாட்டு :- ஆசிரியை திருமதி ஜெயபாரதி கௌசிகன் (இயக்குநர், அமிர்தவாஹினி இசைமன்றம்)
  - வயலின்:- திரு. ஏ.ஜெயராமன்
  - மிருதங்கம்:- திரு. சதா வேல்மாறன்
  - தபேலா:-திரு.எஸ்.விமல்சங்கர்
  - ஓகன்:- திரு.ஜி.சத்தியன்
- நன்றியுரை:- திரு. க.சதீபன் (செய்தி ஆசிரியர், வலம்புரி)
- நிகழ்ச்சி நெறியாள்கை: திரு. ச.லலீசன் (உப அதிபர் , ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்)

**உங்கள் அனைவரையும்**

**இருகரம் கூப்பி அன்புடன் அழைக்கின்றோம்**

**15 வருட ஊடகப் பணியில் எம்மோடு தோள் கொடுத்த அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள்**

இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.


**வலம்புரிக் குடும்பம்**

## தரம் 5 இற்கான புலமைப்பரிசில் பரீட்சை-2014

### வல்வெட்டித்துறை யா/ வல்வை சிவகுரு வித்தியாசாலையின் சாதனைச் செல்வங்களை வாழ்த்துகின்றோம்



ச.கலையமுதன் 173 | கி.கௌசிகன் 165 | கி.புனிதா 163 | ச.சிவதேவி 160



P.மதியழகன் 155 | K.ஹரிஸ் 154 | N.கயல்விழி 151 | M.விதுசன் 150

தன் முயற்சி, ஆசான்களின் அறிவூட்டல், பெற்றோரின் ஊக்குவிப்பு ஆகிய முப்பரிமாணங்களின் வெளிப்பாடே உங்கள் வெற்றி. உங்கள் வெற்றியில் அக்கறை கொண்டவர்களுடன் முதற்படியான இவ் வெற்றி முதுமாணி பட்டம் வரை தொடர வாழ்த்துகின்றோம். "FAILURES ARE THE PILLERS OF SUCCESS" இதற்கமைய துணிவே துணை என இப்பரீட்சைக்குத் தோற்றிய அனைத்துக் குழந்தைச் செல்வங்களையும் கைக்கெட்டியும் வாய்க்கெட்டாமற் போன நிலையில் புள்ளிகளைப் பெற்ற மாணவச் செல்வங்களையும் மனந்தளராது தொடர்ந்தும் கல்வியில் முன்னேற வாழ்த்துகின்றோம்.

### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

ஆ.கிருஷஜா- 146, த.சந்தியா- 141, வி.விதுஷன் 135, சி.சிறிகாந்- 133, ந.கிருஷாளினி- 133, இ.மயூரதன்- 132, வி.ஷர்மிகா- 125, ஞா. அஜித்குமார்- 124, ர.தனுஷ்- 115, ரா.ஆகாஷ்-112, ஜெ.சுதாகர்- 104, ந.தமிழினி- 103, மூ.முகுந்தன்- 102, இ.திரிஷா- 101, கி.கல்பனா-100

வாழ்த்துவோர்:- NVEPF

நடராசா வள்ளியம்மாள்,
கல்வி ஊக்குவிப்பு நிதியம்,
ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை.

## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ)

### NPGJ-0031 பாரவூர்திகள் விற்பனை செய்வதற்கான மூடிய கூறுவிலை கோரல்

எமது சங்கத்திற்குச் சொந்தமான லேடன் NPGJ -0031 இலக்க பாரவூர்திக்கு மூடிய கூறுவிலை கோரி விற்பனை செய்யப்படவுள்ளது.

**நிபந்தனைகள்:-**

01. மேற்படி பாரவூர்தியைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் தமது கூறுவிலைகளைச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் பூர்த்தி செய்து கடித உறையிலிட்டு சீல் செய்து 01.01.2015 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக பொது முகாமையாளர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,.சங்கானை என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.
02. கேள்விகளை ஏற்கவோ, மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.
03. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் லொறிக்கான கூறுவிலை விண்ணப்பம் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
04. NPGJ -0031 இலக்க லொறிக்கான உத்தேச மதிப்பீட்டுப் பெறுமதி 1250000.00 ரூபா.
05. மேற்படி வாகனத்தைப் பார்வையிட விரும்புவோர் சங்கத் தலைமைக் காரியாலயத்தின் வேலை நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 04.00 மணி வரை பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

தொலைபேசி இல:-
021 225 0126

(சீ-9395)

பொது முகாமையாளர்
சங்கானை ப.நோ.கூ.சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## தொழிற்பயிற்சி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் முழு நேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.

இக்கற்கைநெறிகள் கைதடி, காரைநகர், சுன்னாகம், வல்வெட்டித்துறை, பருத்தித் துறை, சண்டிலிப்பாய், ஊர்காவற்றுறை ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெற்று வருகின்றது.

மரவேலை தொழில் நுட்பவியலாளர் (துளபாடம்), கட்டட நிர்மாண உதவியாளர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), டீசல் இயந்திர திருத்துநர், இருசக்கர மற்றும் முச்சக்கரவண்டி திருத்துநர், குளிரூட்டி இயந்திர சாதனங்கள் திருத்துநர், விவசாய இயந்திர உபகரணங்கள் திருத்துநர், முன்பள்ளி கற்பித்தல் முறையியல் கற்கை, பெண்கள்-சிறுவர்களுக்கான ஆடைவடிப்படைப்பாளர், கணனி வன்பொருள் திருத்துநர், வீட்டுமின்னிணைப்பாளர், அலுமினியம் பொருத்துநர், அழகுக்கலை வல்லுநர், கணனி படவடிமைப்பாளர், வெளியிணைப்பு படகு இயந்திர திருத்துநர், தொழிற்சாலை மின்னிணைப்பாளர் இவ்வனைத்து கற்கை நெறிகளும் தேசிய தொழில் தகைமை(NVQ)சான்றிதழுக்கானபயிற்சிகளாகும்.

இக்கற்கைநெறிகளை கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12 ,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் தொ.பே.இல (0212227949) அல்லது எமது தொழிற் பயிற்சி நிலைய ங்களில் எதிர்வரும் 26.12.2014 ஆம் திகதி க்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ். உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ




# யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்பதை தமிழ் மக்கள் தாமாகவே தீர்மானிக்கட்டும்

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் ஆனந்தசங்கரி வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)



நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் இலங்கை சரித்திரத்தில் நடைபெறும் மிக இக்கட்டான தேர்தலாகையால் தமிழ் மக்கள் தமது தெரிவில் மிகக் கவனத்துடன் செயற்படவேண்டும். கடந்த தேர்தல்களில் குறிப்பாக இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் நடந்தவற்றை அடிப்படையாக வைத்து பார்க்கும் போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இத் தேர்தலில் தலையிடாது ஒதுங்கி இருந்து கொண்டு தமிழ் மக்களை அவர்களின் இஷ்டப்படி செயற்பட்டு யாருக்கு வாக்களிப்பது என்ற முடிவை எடுக்க அவர்களைவிட்டுவிடவேண்டுமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பை தமிழர் விடுதலைக் கூட்டணி வலியுறுத்துகிறது என கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்த சங்கரி வலியுறுத்தியுள்ளார்.இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த இரு ஜனாதிபதி தேர்தல்களில் நடந்த தவறுகளின் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு ஆலோசனை வழங்கும் தகுதியை கூட தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் இழந்துவிட்டனர். இதன் காரணமாகவோ என்னவோ அவர்கள் இப்போது மாகாணசபை, பிரதேச சபை உறுப்பினர்களுடன் பேசுகின்றனர். தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இரண்டொரு நபரே இறுதி முடிவை எடுப்பார்கள் என்றும் ஏனையவர்கள் வெறும் ஆமாம் போடுபவர்களே என்பதையும் அனைவரும் அறிவர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரை சுயநலமும் பதவி ஆசையும் பெருமளவு ஆட்கொண்டுள்ளமையால் மக்களை வழிநடத்தும் தகுதியையும் அவர்கள் இழந்து விட்டனர். அத் தலைவர்களில் அநேகர் தமது நிகழ்ச்சி நிரலின் படியே செயற்படுவதோடு தமது எதிர்காலம் பற்றிய கனவுடனேயும் தமது கட்சிகளின் எதிர்காலம் பற்றிய நினைவுகளுடனேயும் இருக்கின்றனர். தமிழ் மக்கள் மத்தியில் புத்தி ஜீவிகளுக்கும், அனுபவசாலிகளுக்கும் பஞ்சமில்லை. மக்களுக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கவும் திறமையான தலைமையை தகுதியுள்ள பலர் ஏறக தயாராக உள்ளனர். தற்போதைய தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இரண்டு மூன்று நபர்களை தவிர ஏனையோர் வெறும் ஆமாம் போடுபவர்களாகவே உள்ளனர். முக்கிய முடிவுகளை அந்த இரண்டு மூன்று பேர் மாத்திரமே எடுக்கின்றனர். உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் இவர்களுடைய முடிவுகளை ஒழுங்காக பத்திரிகைகளில் எழுதுவதோடு அம்முடிவுகளை திரும்ப திரும்ப மிகைப்படுத்தி வருகின்றனர். இலகுவாக வேலை செய்யமுடியும் என்பதால் ஆமாம் போடுகின்றவர்களை விடுத்து தமிழத் தேசிய கூட்டமைப்பினர் தகுதியானவர்களிடம் ஆலோசனை பெற்று காலம் கடத்தாது பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயல வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் தலையிடாது தமிழ் மக்களை தாமாக தாம் விரும்புபவருக்கு வாக்களிக்கக் கூடியவகையில் அவர்களை செயற்பட விட்டு ஒதுங்கியிருக்குமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பை கேட்பதற்கு தமிழர் விடுதலை கூட்டணிக்கு போதிய நியாயமான காரணங்கள் உண்டு. தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்து தமிழரசு கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியை நீக்கி விட்டு அந்த அணியில் தம்மை, இணைத்துக் கொண்டது. இதை தமது சொந்த இலாபத்துக்காகவும் ஓர் அரசியல் கட்சியாக தம்மை தக்கவைத்துக் கொள்வதற்குமாகவே அப்படி செய்தனர். எல்லாவற்றுக்கும் மேலாக புலிகள் சார்ந்த புலம்பெயர்ந்தவர்களின் ஆதரவை பெறவே அவ்வாறு செய்தனர். இதன் உள்நோககம் பற்றி அனைவரும் அறிந்ததே.

சாதாரண பொதுமக்களுக்கு இச் செயல் தமிழர்கள் அனைவரும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்ற தவறான கருத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால தமிழ் மக்கள் அநேக பிரச்சினைகளை எதிர்நோக்கியவர்கள் என்றும் பல துன்பங்களோடு வடக்கு, கிழக்கு புலிகளின் ஆதிக்கத்தில் உட்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்கள் என்பதை அவர்கள் அறிவார்கள். இன,மதபேதமின்றி அனைத்து மக்களும் பட்ட துன்பங்கள் சொல்லில் அடங்காது. அத்துடன் அவர்கள் இழந்த உயிரிழப்புக்கள், உடைமைகளின் பெறுமதிகளும் கணிக்கப்படமுடியாதவை. அப்படியிருந்தும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தமிழ் மக்களை தவறாக வழிநடத்தி சகல தேர்தல்களிலும் தம் இஷ்டப்படி வாக்களிக்க வைத்துள்ளனர்.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் இந்த துயரமான நிலை நீண்ட காலமாக நிலைத்து நிற்கிறது. மிக துன்பகரமான விடயம் என்னவெனில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தமிழ் மக்கள் புலிகளுக்கு சார்பானவர்கள் என்ற முத்திரையை குத்தி வைத்துள்ளனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் மீது உண்மையான அக்கறை இருப்பின் தாம் மௌனமாக இருந்து கொண்டு தமிழ் மக்களை தம் இஷ்டப்படி இத் தேர்தலில் செயற்பட்டு விடுதலைப்புலிகளென்று குத்தப்பட்ட முத்திரையை அகற்ற உதவுமாறு த.தே.கூட்டமைப்பை த.வி.கூ கேட்டுககொள்கிறது.காலத்துக்குக் காலம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் ஒவ்வொரு தேர்தல் நேரத்திலும் மிக சாதுரியமாக தமிழ் மக்களை விடுதலைப் புலிகளின் சார்பானவர்கள் என்பதை உண்மைக்கு மாறாக சாதித்தே வந்துள்ளனர்.

நாம் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளையும் ஒவ்வொரு தமிழ் மகனும் மிக கவனமாக பரிசீலித்து வேட்பாளர்கள் தத்தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் முன்வைத்துள்ள விடயங்களை நன்கு ஆராயந்து யாருக்கு வாக்களிக்க வேணடும் என்ற நல்ல முடிவினை எடுக்க வேண்டும். கடந்த இரு ஜனாதிபதி தேர்தல்களில் விட்ட தவறை மீண்டும் விடாமல் பகிஷ்கரிக்கும் எண்ணத்தை கைவிட்டு தமிழர்கள்தான் ஜனாதிபதியை தெரிவு செய்வார்கள் என்ற இறுமாப்பு எண்ணத்தையும் கைவிடுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி வலியுறுத்துகிறது என அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)




## பயணிகள் தரிப்பிடம் சீரமைத்த நெல்லியடிப் பொலிஸ் அதிகாரி

வடமராட்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுமித பெரேராவின் ஏற்பாட்டில் வடமராட்சி கோவில் சந்தைப் பகுதியில் உள்ள பேருந்து தரிப்பிடம் துப்புரவு செய்யப்பட்டு பொதுமக்களின் பாவனைக்கு ஏற்ற வகையில் மாற்றப்பட்டுள்ளது.

பாழடைந்து கிடந்த மேற்படி பயணிகள் தரிப்பிடம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகள் துப்புரவு செய்யப்பட்டு பயணிகளின் பாவனைக்கு ஏற்ற வகையில் புனர் நிர்மாணம் மற்றும் வர்ணப்பூச்சு வேலைகள் இடம்பெற்றன.

அதனைத்தொடர்ந்துகடந்த வெள்ளியன்று மேற்படி பயணிகள் தரிப்பிடம் திறந்து வைக்கப்பட்டது. (இ-60)

## ஆசிரிய உதவியாளர்களுக்கு அவசர கலந்துரையாடல்

ஆசிரிய உதவியாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளம் சந்தியிலுள்ள புதிய உயர்கல்லூரிக்கு அருகைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் 2009 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரிய சேவைக்குள் உள்வாங்குதல், பரீட்சைகள் நடைபெற்று முடிந்து 7 மாத காலமாகியும் பெறுபேறுகள் வெளியிடப்படாமை, வடக்கு மாகாண கல்வி அமைச்சரும், செயலாளரும் வழங்கிய வாக்குறுதிக்கு அமைய சென்ற மாத ,இம்மாத ஆசிரிய உதவு தொகையான 3 ஆயிரம் ரூபா சம்பளப்பட்டியலில் இடம்பெறாமை மற்றும் ஆசிரிய சேவைக்கு உள்வாங்காமை ஆகிய முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

எனவே 2014ல் கோப்பாய் பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலையில் பயிற்சியை முடித்து வெளியேறிய ஆசிரிய உதவியாளர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் ச.சிவகாந்தன் கேட்டுள்ளார். (இ


## வடக்கு மாகாணத்தின் தமிழ்மொழித்தின விழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள தமிழ் மொழித்தின விழா எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளதால் 2014 ஆம் ஆண்டு மாகாண மட்ட தமிழ்மொழித் தினப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளதோடு கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதால் அந்நிகழ்வில் பங்கேற்கும் மாணவர்கள் உட்பட வலயம் சார்ந்த உத்தியோகத்தர்கள், பாடசாலை, அதிபர், ஆசிரியர்கள் அனைவரும் இந் நிகழ்வில் பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என வட மாகாண கல்விப்பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார்.(இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## சந்திரன் பாஸ்கரன் (றெக்சி)

வலம்புரியின் கிளிநொச்சி
செய்தியாளர் குமார் அவர்களின்
மைத்துனர் சந்திரன் பாஸ்கரன்
அவர்களின் இழப்பால் துயருறும்
குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

வலம்புரி நண்பர்கள்.


# விசேட சலுகை

வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி எமது வாடிக்கையாளர்கள் 01.11.2014 முதல் 31.12.2014 வரை மாபெரும் விசேட விலைக் கழிவுடன் தங்களது விளம்பரங்களை எமது பத்திரிகையில் பிரசுரிக்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.

**முழுப்பக்கம், அரைப்பக்கங்களிற்கு மாத்திரமே இவ் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.**

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு:- 021 2217 603
021 5671 532

Valampuriijaffna@gmail.com



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 14 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில் A/L (லண்டன் PR)<br>தொ.இ: B/2208 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 49<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/3289 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 30 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர் (கனடா PR)<br>தொ.இ: B/2212 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 18 3/4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3291 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 24 1/2 செவ் 7 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: BSC, PHD/ விரிவுரையாளர் (லண்டன்)<br>தொ.இ: B/2214 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 33 3/4 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ: G/3292 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 17 1/2 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: BA/ அரச தொழில்<br>தொ.இ: B/2216 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 44<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA/ அரச தொழில்<br>எதிர்பார்ப்பு:- சைவபோசனம்<br>தொ.இ: G/3293 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.





## வாணி ரெக்ஸ் வழங்கும் விசேட விலைக் கழிவுகள்

எதிர்வரும் நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு சகல விதமான புடைவை வகைகளுக்கும் விசேட விலைக் கழிவுகள். 10 % - 25 % வரை ஒவ்வொரு பொருட்களுக்கும் உண்டு என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்.
தரமான தெரிவுகளுக்கு முந்துங்கள்.

வாணிரெக்ஸ்
இல. 81 பெரியகடை,
யாழ்ப்பாணம்.

தொலை பேசி :-
021 222 5578
021 222 9286



இச்சலுகைகள் 18.12.2014 முதல் 31.12.2014 வரை மட்டுமே

(சி-9401)


# இராசி பலன்

19.12.2014
(மார்கழி 04, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு,
துவாதசி முற்பகல் 10.02 மணிவரை
விசாகம் முன்னிரவு 9.47 மணிவரை
இராகுகாலம் 10.53-12.23 மணிவரை
சுபநேரம் 6.23-7.53 மணிவரை
பிரதோச விரதம்

வளவன்

**மேடம்** — ஆனைமுகனை வழிபட்டு அதிர்ஷ்ட வாய்ப்புக்களை வரவழைத்துக்கொள்ள வேண்டிய நாள், விருந்தினர் வருகையுண்டு, தொலைபேசி முலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்** — பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், கடன்சுமை குறையும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்** — வாகன சுகமுண்டு, பெருமைகள் வந்து சேர பிள்ளையாரை வழிபட வேண்டிய நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** — விருப்பங்கள் நிறைவேற விரதம், வழிபாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள், தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**சிம்மம்** — நினைத்த காரியங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், பகைவிலகும், பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், போசன சுகமுண்டு.

**கன்னி** — மக்கள் போற்றும் வழியமைய விக்கினேஸ்வரனை வழிபட வேண்டிய நாள், உடல்நலம் சீராகும், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சிதரும், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்** — வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் பெரியவர்களின் சொற்களைக் கேட்டு நடப்பீர்கள், தொழில் ரீதியான பயங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்** — ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், மனச் சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், உறவினர் வருகையுண்டு.

**தனுசு** — எண்ணங்கள் நிறைவேற கணபதியை வழிபட வேண்டிய நாள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**மகரம்** — கனவுகள் நனைவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்க நினைப்பீர்கள்.

**கும்பம்** — சந்தோசங்கள் அதிகரிக்க அம்பிகையை வழிபட வேண்டிய நாள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு.

**மீனம்** — தொழிலில் நண்பர்களிடம் கூடுதல் கவனம் தேவை, வளர்ச்சி காண வழிபாட்டினை மேற்கொள்ள வேண்டிய நாள், குடும்பத்தினரிடம் கோபமாக பேசி பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த வெற்றியை சந்தைப்படுத்தி தேர்தல் பிரசாரம் செய்யவில்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த வெற்றியை சந்தைப்படுத்தி ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடவில்லை என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மாதம நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்ட, யுத்த வெற்றியை சந்தைப்படுத்தி வருவதாக அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த வெற்றி பற்றி மக்களுக்கு நினைவூட்டும் சகல உரிமைகளும் அரசாங்கத்திற்கு உண்டு என அவர் தெரிவித்தார்.

வரலாற்றை நினைவு கூர்வதனைப் போன்றே யுத்த வெற்றி பற்றி கூறுவதில் தவறில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனா திபதியின் பிரசாரக் கூட்டங்களில் ஆண்களை விடவும் பெண்கள் அதிகளவில் பங்கேற்று வருவதாகவும் இதன் மூலம் நாடு ஈட்டியுள்ள சுதந்திரம் வெளிப்பட்டுள்ளதாகவும் யுத்தத்தின் பின்னர் அரசாங்கம் நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் சென்றுள்ளதாகத் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மகிந்தவின் வெற்றியில் பங்குதாரர்களாக முஸ்லிம் சமூகத்தினர் மாற வேண்டுமாம்



(கொழும்பு)

முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால நலனிற்கு உதவக்கூடிய வேட்பாளர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடையப்போகும் வெற்றியில் பங்குதாரர்களாக முஸ்லிம் சமூகம் மாற முடியுமென பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு திரட்டும் முகமாக காத்தான்குடி பிரதேசத்திலுள்ள உலமாக்களுக்கும் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வுக்குமிடையிலான விசேட சந்திப்பொன்று காத்தான்குடியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு நடைபெற்றது. இந்த சந்திப்பின் போதே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

காத்தான்குடியிலுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மட்டக்களப்பு தொகுதி தேர்தல் காரியாலயத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பில், உலமாக்கள், கதீப்மார்கள் மற்றும் காத்தான்குடி நகர சபைத் தவிசாளர் எஸ். எம். அஸ்பர், பிரதித் தவிசாளர் எம். ஜெஸீம், காத்தான்குடி நகர சபை உறுப்பினர்களான பாக்கீர், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பரீட் உட்பட கட்சி ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (இ-5)

# தமிழறிஞர் கா.பொ.இரத்தினம்

செந்நெல் வளர்த்தாலும் பொன் செய் பயிர்கள் வளர்த்தாலும் நிரம்பி நிற்கும் வேலணை சிவநெறி பெருக்கும் சான்றோராலும் தெரி நல் புலவர்களாலும் உயர்வு பெற்று சைவமும் தமிழும் பாலோடு தேன் கலந்தது போல ஒன்றையொன்று தழுவி ஏற்றம்பெற்ற வேலணை மண்ணில் கா.பொ.இரத்தினம் எனும் பண்டிதர் முனைவர் பேராசிரியர் என்று போற்றப்படும் கார்த்திகேசன் பொன்னம்பலம் இரத்தினம் எனும் பேரிலக்கிய கர்த்தாவும் அரசியல் வாதியுமான பெரியார் 1914 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 10ஆம் திகதி பிறந்தார்.

ஆரம்பக் கல்வியை வேலணை அ.மி.த.க. பாடசாலையிலும் ஆசிரியப் பயிற்சியை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலும் பயின்றார். தமிழிலுள்ள உயர் இலக்கண இலக்கியங்களை ஐயந்திரிபுறக் கற்றதுடன் ஆங்கில மொழியிலும் தேர்ச்சி பெற்றார். மேற்படிப்பை லண்டன் பல்கலைக்கழகத்தில் (B.A.Hons) சென்னைப் பல்கலைக்கழகத்தில் MA, B.O.L பட்டங்களுடன் வித்துவான், பண்டிதர் பட்டங்களையும் பெற்றார்.

கா.பொ. இரத்தினம் அவர்கள் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றி 21ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரையில் தமிழ்-இலக்கிய உலகில் சஞ்சரித்தவர். 19ஆம் நூற்றாண்டில் சமூகப் பண்பாட்டுத் தளத்தில் சமயமே நிலை பெற்றிருந்தது. ஆனால் 20ஆம் நூற்றாண்டில் ஈழத்து இலக்கியம் பொதுமக்களின் அன்றாட வாழ்வியலை சித்திரிக்கும் இலக்கியங்களாக மாறின.

1930ஆம் ஆண்டு காலப் பகுதியில் மாணவனாக இருந்த காலப் பகுதியில் திருக்குறள் மீது ஏற் பட்ட ஆர்வம் 60 வருடங்கள் தமிழ் மறைக்காக வாழ்நாளைச் செலவு செய்தார். உலகிலே மறைகள் எனப் போற்றப்படும் நூல்களிலே திருக்குறள் தவிர்ந்த யாவும் சமயச் சார்புடையனவாகும். ஒரு நாட்டிற்கோ ஒரு இனத்திற்கோ ஒரு காலத்திற்கோ உரியனவாக அல்லாமல் உலக மக்கள் யாவர்க்கும் பொதுவாகவும் மக்கள் கூட்டம் ஒரு குலமாக ஒன்றுபட்டு வாழ்வதற்கு வழி வகுக்கும் திருக்குறளின் உயரிய கருத்துக்களே கா.பொ. தமிழ் மறைக் கழகத்தை உருவாக்கவும் திருவள்ளுவர் திருநாளை ஆண்டு தோறும் கொண்டாடவும் அத்தினத்தில் திருக்குறள் மாநாட்டினை நடத்தவும் காரணமாகியது.

1952 ஆம் ஆண்டு தமிழ் மறைக்கழகத்தை ஆரம்பித்து அதன் வாழ்நாள் தலைவராக இருந்து குறளின் பெருமையை உலகறியச் செய்து சர்வதேசமெங்கும் வாழும் தமிழ்ப் பேராளர்களின் பாராட்டுக்களையும் ஆதரவையும் பெற்றவர். 1953 ஆம் ஆண்டில் திருகோணமலையில் ஆரம்பித்த திருக்குறள் மாநாடு 1983 வரையிலான காலப்பகுதி வரையில் ஈழ நாட்டிலே 24 மாநாடுகளை தலையேற்று நடத் திய பெருமை கா.பொ. இரத்தினம் அவர்களையே சாரும். 3 நாட்கள் தொடர்ந்து நடைபெறும் மாநாட்டிற்கு தமிழ்நாட்டு பேரறிஞர்களையும் சிறப்பு விருந்தினர்களாக அழைத்து தமிழ்கூறும் நல்லுலகிற்கு ஓர் முன்னோடியாகத் திகழ்ந்தார். இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, பிஜி, மொரீசியஸ் முதலிய நாடுகளின் பேராளர்களும் பிரபல பத்திரிகைகளும் கா.பொ.வின் பெரும் பணியை வாழ்த்தினர். 25ஆவது மாநாட்டினை தமிழக அறிஞர்களும் பங்கு கொள்ளும் வண்ணம் 1992ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடத்திய பின்னர் உலகத் தமிழ் மறைக் கழகம் என மாற்றிச் செயற்படுத்தினார்.

இலங்கையில் இனக்கலவரச் சூழலில் உடைமைகள் யாவற்றையும் இழந்து தமிழகம் புகுந்து புகலிட வாழ்க்கையை மேற்கொண்ட பேரறிஞர் கா.பொ. இரத்தினம் அவர்கள் தனிமனித நிறுவனமாக இயங்கித் திருக்குறள் மாநாட்டை நிகழ்த்தியமை இந்தியத் தமிழ்மக்கள் மத்தியில் போற்றுதற்குரியவரானார்.

திருவள்ளுவர் திருநாள் மலர், தமிழ்மறைக் கட்டுரைகள், தமிழ் மறை விருந்து, கற்பகமலர், வள்ளுவரைக் கேளுங்கள், உலகிற்கு ஒன்று எனும் தமிழ்மறை நூல்களை எழுதியுள்ளார். திருக்குறள் செல்வர், தமிழ் மறைக் காவலர், குறள் ஆய்வுச் செம்மல், குறள் நெறிச் செம்மல், திருக்குறள் செம்மல், திருக்குறள் காவலர், திருவள்ளுவர்சீரபரவுவார்போன்ற விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றார்.

கா.பொ.வின் தமிழியல் தொடர்பான பணிக்கு வித்திட்டது ரஷ்யாவில் 1960 இல் நடைபெற்ற கீழை நாட்டியற் புலவர்கள் மாநாட்டில் பங்குபற்றிக்கொண்டமையால் பெற்ற அனுபவமாகும். அதன்பின் 1963 ஆம் ஆண்டு காலத்தில் தனிநாயகம் அடிகளாரின் அழைப்பை ஏற்று மலேசியாவில் இந்தியத் துறையில் விரிவுரையாளராக பணியாற்றினார். அக்காலத்தில் உலகெங்கிலுமுள்ள தமிழர்களுடன் தொடர்புகொண்டு உலகத் தமிழர் யாவரையும் ஒரு மன்றத்தின் மூலம் ஒற்றுமைப்படுத்த வேண்டும். தமிழ்மொழியின் வாழ்வுக்கும் வளத்திற்கும் வழி வகுக்க வேண்டுமென்னும் நோக்கோடு தமிழக அரசுக்கும் தமிழ்நாட்டுப் பேரறிஞர்கள் யாவருக்கும் உலகத் தமிழ்ச்சங்கத்தை உருவாக்க வேண்டுகோள் விடுத்தார். பல்வேறு இடங்களிலும் சொற்பொழிவுகளை நிகழ்த்தியதன் பயனாக மலேசிய மக்களின் ஆதரவில் கோலாலம்பூரில் 1963 ஆம் ஆண்டு உலகத் தமிழ் மன்றத்தை நிறுவினார். கா.பொ. விற்கு பக்கபலமாக தவத்திரு தனி நாயகம் அடிகளாரும் அமெரிக்கா, இந்தியா, இங்கிலாந்து, பர்மா, ரஷ்யா, மலேசியா, தென்னாபிரிக்கா, இலங்கை போன்ற நாடுகளின் அறிஞர்களும் காப்பாளர்களாக இருந்தனர். இம்மன்றமே முதலில் நிறுவப்பட்ட உலகத் தமிழ் மன்றமாகும். இதனை நிறுவியவர் எம்மண்ணின் மைந்தர் கா.பொ. அவர்களுக்கு தமிழ்கூறும் நல்லுலகம் யாவும் கடமைப்பட்டுள்ளது.

கா.பொ. அவர்களுக்கும் தனி நாயகம் அடிகளாருக்கும் உலகத் தமிழாராய்ச்சி மன்றம் நிறுவி உலகளாவிய ரீதியில் தமிழ்மொழி பர ந்து மூலை முடுக்கெங்கும் வாழும் மக்களும் தமிழின் மகத்துவம் உணர வேண்டும் என விரும்பினர். இதன் விளைவாக 1964 இல் அனைத்துலக தமிழறிஞர்கள் இணைந்து உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தினை டில்லியில் உருவாக்கினர். 1966 இல் மலேசியாவில் தொடங்கிய தமிழாராய்ச்சி மாநாடு 1994 வரை எட்டு மாநாடுகள் நடந்தேறின. கா.பொ. அவர்கள் சிறப்பான தமிழியல் சார் உரைகளை வாசித்து தமிழுக்கு பெருமை தேடிக்கொடுத்தார். நான்காவது மாநாடு இலங்கையின் யாழ்ப்பாணத்தில் நடைபெற கா.பொ.வும் பெருமுயற்சி எடுத்தமை குறிப்பிடத்தக்கது.

இவருடைய ஆய்வுநூலான இலக்கியம் கற்பித்தல் எனும் நூல் இலக்கியத்தை கற்பிக்கும் ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் இருக்கவேண்டிய தகைமைகளைக் கூறுகின்றது. நூற்றாண்டுகளில் தமிழ் எனும் நூல் இலக்கிய வரலாற்றுக் காலப்பகுப்பினை மிகத்துல்லியமாக ஆய்வு செய்து வரையறுக்கின்றது. காவிய மணம் எனும் நூல் சங்க நூல்கள், திருக்குறள், ஐம்பெருங் காப்பியங்கள், முத்தொள்ளாயிரம், கம்பராமாயணம் முதலான நூல்களையும் ஈழத்து முன்னோடிகள் சிலரின் படைப்புக்களையும் அறிமுகப்படுத்தி விளக்குவதாக அமைந்துள்ளது.



யாஅம் இரப்பவை எனும் நூல் மக்கள் நல்லவண்ணம் வாழ வழி சமைக்கின்றது. சொற்சுவையும் பொருட்சுவையும் நடைச்சிறப்பும் மிக்கது என பலரின் பாராட்டைப் பெற்றது. உரைவண்ணம் என்னும் நூலில் கா.பொ. ஆற்றிய தலைமையுரைகள் வரவேற்புரைகள், வானொலிஉரைகள், மதுரை மாநாட்டு உரைகள், பாராட்டுரைகள், நினைவுரைகள், இரங்கலுரைகள், ஆராய்ச்சியுரைகள், திறனாய்வு உரைகள், பாராளுமன்ற உரைகள் எனும் 14வகை யான உரைகளைக் கொண்டுள்ளது. கருத்து வண்ணமும் எழுத்து வண்ணமும் இழையோடி வண்ணக் கலவையாக மிளிர்கின்றது.

இலங்கையில் இன்பத் தமிழ் என்னும் இவரது நூலில் இலங்கையில் சரித்திரம் அறியப்படாத காலம் தொடக்கம் வாழ்ந்து வரும் தமிழ் மக்களைப் பற்றியும் அவர்கள் தமிழுக்குச் செய்த பெருந்தொண்டினையும் கூறுகின்றது.

கா.பொ.அவர்கள் கொழும்பு அரசினர் கல்லூரியில் 12 ஆண் டுகள் தமிழ்ப்பேராசிரியராக பணி யாற்றியவர். இலங்கை அரச கரும மொழித் திணைக்களத்தில் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராக ஆறாண்டுகளுக்கு மேல் பணியாற்றி பதினைந்தாயிரத்திற்கு மேற்பட்ட ஆட்சிச் சொற்களை உருவாக்கினார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவராக 1957-1959 காலப்பகுதிகளில் பணியாற்றினார்.

தமிழ்மறைப்பணி, தமிழ் இலக்கியப் பணி என்பவற்றோடு நின்றுவிடாமல் தமிழர் மீதும் தமிழ் மீதும் கொண்ட பற்றினால் 1964 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பணிகளில் முழுமூச்சுடன் ஈடுபட்டார். கட்சிக்காகவிடுதலைப்பரணி எனும் இதழின் ஆசிரியரானார். 1956 இல் சிங்களம் மட்டுமே இலங்கையின் அரச கரும மொழி எனும் சட்டம் நிறைவேற்றிய போது கா.பொ. அவர்கள் சிங்களவரும் தமிழரும் ஒன்றுபட்டு வாழமுடியாது எனும் நிலையை உருவாக்க வித்திட்டது இச்சட்டம் எனக் கொந்தளித்தார்.

1965 இல் கிளிநொச்சித் தொகுதி பாராளுமன்ற வேட்பாளராக போட்டியிட்டு வெற்றிவாகை சூடினார். கிளிநொச்சிப் பிரதேச மக்களுக்கு வேண்டிய தேவைகள் பலவற்றை அக்காலத்தில் பூர்த்தி செய்தார். காணி அலுவலகம், போக்குவரத்துப் பாதை, கல்வி, பொருளாதாரம் என் பவற்றை அரசுடன் மோதிப் பெற்றுக்கொடுத்தார்.

கா.பொ. அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய காலத்தில் பன்னூற்றுக்கணக்கான கேள்விகளைக் கேட்டு பலவற்றை நிறைவேற்றிய பெருமையும் இவரையே சாரும்.

1970 இல் கா.பொ. பிறந்து வளர்ந்த ஊர்காவற்றுறைத் தொகுதியில் போட்டியிட்டு பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றி பெற்றார்.

1977 இல் ஹங்கேரி நாட்டின் சோபியா எனும் தலைநகரில் அனைத்து நாடுகளின் பாராளுமன்ற ஒன்றியத்தின் பேராளராக கா. பொ கலந்து கொண்டு தமிழர்களின் உரிமைப்போராட்டம் பற்றிப் பேசினார்.

1981 இல் பொதுநல நாடுகளின் பாராளுமன்ற 28ஆவது மாநாட்டிலும் இலங்கைப் பாராளுமன்ற பேராளராக கலந்து கொண்டு தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்தார். இலங்கை பாரா ளுமன்றத்தில் உறுப்பினராக 18 ஆண்டுகள் பணிபுரிந்த கா.பொ. அவர்களின் கடைசிப்பேச்சு 1983 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் திகதி நிகழ்த்தப்பட்டது.

எந்தநேரத்திலும் எந்த இடத்திலும் எவர் முன்னிலையிலும் எவ் வித அச்சமுமின்றி விரும்பியதனையும் கூறும் வாய்ப்பும் வன்மையும் எதனையும் கண்டிக்கும் துணிவும் கொண்ட, கா.பொ.இரத்தினம் அவர்களின் கடைசிப் பேச்சு கற்பகமலர் எனும் நூலில் 29 பக்கங்களில் வெளிவந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவருடைய இறுதிக்காலம் தமிழ் ஈழத்தில் நடைபெற்ற போரினால் கொழும்பிலிருந்து 1985ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் முற் பகுதியில் சென்னையில் வாழ ப்புகுந்து பல்வேறு இலக்கியப்பணிகளைப் புரிந்து வரும் வேளையில் 20.12. 2010 இல் கொழும்பு நகரில் இவ்வுலகை விட்டு இயற்கை எய்தினார்.

**திருமதி. ஸ்ரீபாமா கஜேந்திரன்**
**ஆசிரியை, யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கான கைவேலை பயிற்சி நெறி

(கிளிநொச்சி)

வட மாகாண கிராம அபிவிருத்தி திணைக களத்தின் அனுசரணையுடன் பெண்கள் மட்டும் பங்கேற்கும் ஆடை வடிவமைத்தல், கைவேலை ஆகியவற்றிற்கான பயிற்சி நெறி கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தால் நடத்தப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியைத் தொடர விரும் புவோர் விண்ணப்பத்தினை தயாரித்து எதிர் வரும் 29 ஆம் திகதி காலை 9 மணிக்கு கரைச்சி பிரதேச செயலக மகாநாட்டு மண்ட பத்திற்கு சமுகமளிக்குமாறும் அறிவிக்கப்பட் டுள்ளது.




பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் மாதா ந்த ஊக்குவிப்பு பணம் வழங்கப்படவுள்ளது.

விண்ணப்பதாரி தரம் 9 இற்கு மேல் கற்றிருத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சை க்கு வரும் போது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றை தம்முடன் எடுத்து வரல் வேண்டும்.

ஆறு மாதங்களைக் கொண்டதான இந்த பயிற்சி நெறி கிராம அபிவிருத்தி உத்தியோ கத்தர் ஊடாக நிர்வகிக்கப்படவுள்ளது. இப் பயிற்சி நெறியானது அடுத்தாண்டு ஜனவரி முதலாம் திகதி கணேசபுரத்திலுள்ள பராசக்தி முன்பள்ளியில் நடைபெறவுள்ளது. (2-254)

# 4 நாட்களில் 315 புதிய முறைப்பாடுகள் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் பதிவாகின

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்த ஜனா திபதி ஆணை க்குழு விசாரணைகள் நேற்று முன்தினம் நண்பகலுடன் நிறைவடைந்தன.

இந்த விசாரணை நடவடிக்கையின் போது 225 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட் டிருந்த நிலையில் 169 பேர் சாட்சியமளித் தனர்.

இதன்படி வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் நடந்த விசாரணையின் போது 14 ஆம் திகதி 52 பேர் அழைக்கப்பட்டிருந்த நிலையில் 33 பேரும், 15 ஆம் திகதி 52 பேர் அழைக்கப்பட்டிருந்த நிலையில் 47 பேரும் சாட்சியமளித்தனர்.

இங்கு 84 புதிய முறைப்பாடுகளும் பதி வாகின. இதேவேளை வவுனியா பிரதேச செயலகத்தில் கடந்த 16 ஆம் திகதி 61 பேரு க்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில் 54 பேரும் நேற்று முன்தினம் 60 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில் 35 பேரும் சாட்சியமளித்தனர். இவ் விசார ணையின் போது 231 புதிய முறைப்பாடு களும் பதிவாகின.

இதன்படி வவுனியா மாவட்டத்தில் 169 பேர் சாட்சியமளித்துள்ளதுடன் 315 புதிய முறைப்பாடுகள் ஜனாதிபதி ஆணைக்குழு விடம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இச் சாட்சியங்களில் அதிகமானவை இராணுவத்திற்கு எதிராக முன்வைக்கப்பட் டிருந்த அதேவேளை விடுதலைப்புலிகள், கருணா குழுவினர், புளொட் இயக்கம், இந்திய இராணுவம் என்பவற்றுக்கு எதிரான சாட்சியங்களும் பதிவாகின. (2-250)

# விவசாயிகளுக்கான காலபோக விதைப்பிற்கென AT-4006 நெல்லினம் அனுப்பி வைக்கப்பட்டது

முல்லை.மாவட்ட ஒருங்கிணைந்த பண்ணையாளர் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்க செயலாளர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைந்த பண்ணையாளர் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கமானது 2014-2015 ஆம் ஆண்டுக்கான காலபோக விதைப்பிற்கென யாழ்ப்பாண மாவட் டத்திற்கு மிகவும் பொருத்தமான AT-4006 4 1/2 மாத நெல் லிணத்தை கடந்த சிறுபோக வரட்சிக்காலப் பகுதியில் உற்பத்தி யாக்கி யாழ். மாவட்டத்தில் இயங்கி வரும் சீக்கோவிற்கு சிறு போக நெல் விதைப்பிற்கு வழங்கியுள்ளதாக இக் கூட்டுறவு சங் கச் செயலாளர்சரவணமுத்து மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இச்சங்கமானது 2002 ஆம் ஆண்டு கூட்டுறவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு 7 நிர்வாக உறுப்பினர்களையும் 100 விலங்கு வேளாண்மையில் ஒருங்கிணைந்த அங்கத் தவர்களையும் உள்ளடக்கி வினைத்திறன் மிக்க ஒன்றாக விளங்கி வருகின்றது.

இச் சங்கமானது விதை உற்பத்தியினையே பிரதான நோக்கமாகக் கொண்டதோடு குறை ந்த விலையில் தரமான விதை உற்பத்திகளைப் பண்ணையாளர்களுக்கு வழங்கி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவற்றில் விதை நெல், நிலக்கடலை, மரக் கறி நாற்றுக்கள், பழமரக்கன்றுகள், மரக்கறி விதைகள் என்பன அடங்குகின்றன.

நிலக்கடலை உற்பத்தி சிறப்பாக நடைபெறு வதோடு விதை நெல் உற்பத்தியாளர்களு க்குத் தேவையான விதை நெல்லை நவீன இயந்திரங்கள் மூலம் குறைந்த விலையில் சுத்திரகரிப்பு செய்து வழங்குகிறது.

அத்துடன் விதை உற்பத்தியாளர்களுக்குத் தேவையான இலகு கடன்களையும் வழங்கு கின்றது.

இச் சங்கத்திற்கு UNDP நிறுவனமானது கட்டடம். நெல் சுத்திகரிப்பு இயந்திரம், காரியா லயம், நாற்று உற்பத்திக்கு தேவையான பச்சை வீடு ஆகியவற்றுக்கான உள்ளீடுகள் போன்றவற்றை வழங்கியதுடன் ஜெய்க்கா நிறு வனமானது உணவுபகுதிக்குஆதரவுவழங்கியது.

அத்துடன் உலக உணவு விவசாய ஸ்தா பனம் நிலக்கடலை விதை உற்பத்தி, வர்த்தக நிலக்கடலை விதை உற்பத்தி, நிலக்கடலை விதை சுத்திகரிப்பு இயந்திரம், உணவு பகுதி களாக்கும் இயந்திரம், நிலக்கடலை பருப்பு பிரித்தெடுக்கும் இயந்திரம் என்பவற்றை வழங்கியது.

ILO நிறுவனத்தினால் நெல் சேமிப்பு களஞ்சியம் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கர நேசனால் நிலக்கடலை பருப்பு பிரித்தெடுக் கும் இயந்திரம் வழங்கப்பட்டது.

இங்கு பெண்களைத் தலைமைத்துவ மாகக் கொண்ட குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு கூடுதலாக வழங்கப்படுவதோடு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத் தவும் இச் சங்கம் ஊக்கமளிக்கின்றது.

எனவே இதுபோன்ற சங்கங்கள் மாவட்ட ரீதியாக அமைக்கப்படுவதன் மூலம் விவசா யிகளின் விதைப் பொருட்கள், விளை பொரு ட்கள் ஆகியவற்றை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பு அதிகரிக்கும். இதனால் விவசாயிக ளின் வாழ்வாதாரமும் உயர்வடையுமென அவர் மேலும் தெரிவித்தார். (2-300)

# மூத்த பிரஜைகளின் அனுபவங்களின் ஊடாக இளையோர் நிறையவே கற்க வேண்டியுள்ளது

## ஆனந்தன் எம்.பி தெரிவிப்பு

எமது மண்ணின் மூத்த பிரஜைகளின் பட்டறிவு, அனுபவங்களிலிருந்து இன்றுள்ள இளைய சமூகத்தினர் நிறையவே கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. அந்த அனுபவங் களை முழுமையாக பகிர்ந்து பெற்றுக் கொள் வதன் ஊடாக வீட்டிலும் சமூகத்திலும் இன்று இருக்கக்கூடிய பல்வேறுபட்ட பிரச்சினைக ளுக்கு சுமுகமான தீர்வு காணக்கூடிய வழி முறைகள் இருந்தும் இன்றைய இளம் தலை முறையினர் அதில் எந்தளவுக்கு கவனம் செலுத்துகின்றனர் என்பது மிகப் பெரிய வினாவாக எம் முன்பு உள்ளதாக கூட்ட மைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித் துள்ளார்.

வவுனியா ஈச்சங்குளம் கிராம சேவை யாளர் பிரிவில் அண்மையில் நடைபெற்ற மூத்த பிரஜைகள் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூர்மையான அறிவு பெற்றிருந்தபோதும், மனிதப்பண்பு இல்லாதவர்கள் எப்போதுமே மனிதர்களாக மதிக்கப்படமாட்டார்கள். அறி வையும், பண்பையும் கைவரப்பெற்றுள்ள மூத்த பிரஜைகளிடமிருந்து கற்றுக் கொள் ளாமையே இன்று குடும்பங்களுக்குள்ளும் சமூகத்துக்குள்ளும் சமூக பொருளாதார ஏற் றத்தாழ்வுகளும், முரண்பாடுகளும் பெருகி வருவதற்கு முக்கியமான காரணமாக அமை கின்றது.

ஆகவே நாம் மூத்த பிரஜைகளிடமிருந்து அவர்களுடைய அனுபவங்களை கற்றுக் கொள்ளும் அதேவேளை அவர்களின் முது மைககாலத்தில் உணவு, உடை உறைவிடம், சுகாதாரம் இந்த அத்தியாவசிய தேவைகளை வழங்கி அவர்களை மகிழ்ச்சியான சூழலில் பராமரிக்க வேண்டியது ஒவ்வொரு பிரஜை களினுடைய கடமையாகும்.

இன்று இந்த மூத்த பிரஜைகள் தினத்தில் கலந்துகொண்டுள்ள மூத்த பிரஜைகளில் பலர் போர்க்காலச் சூழ்நிலையில் உங்களு டைய பிள்ளைகளை இந்த நாட்டுக்காக இழந் திருக்கிறீர்கள்.

இன்னும் பலர் உங்கள் உறவினர்கள், நண்பர்களை இழந்திருக்கிறீர்கள். உங்களு டைய வாழ்க்கை காலம் முழுவதும் போர்ச்சூழல, குடும்பச்சுமை, பொருளாதார நெருக்கடிகளால் மிகுந்த மன அழுத்தங்களோடு சீவித்திருக் கின்றீர்கள் என்பதை நாம் நன்கு அறிவோம்.

இந்த இழப்புகள், வலிகள், துயரங்களுக்கு பிரதி உபகாரமாக நிரந்தர அரசியல் தீர்வை கண்டறிய வேண்டும் என்பதே எங்கள் எல் லோருடைய விருப்பமும் அவாவும் ஆகும் என்றார். (2)

# புகையிரதம் மோதி நால்வர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, கரடிப்போக்கு சந்தியில் பாதுகாப்பற்ற புகையிரதக்கடவையினூடாக கடக்க முற்பட்ட வாகனமொன்றை புகை யிரதம் மோதியதால், இவ்வாகனத்தில் பய ணித்த நான்கு பேரும் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலி ஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி நேற்று முன்தினம் இரவு பயணித்த இரவுநேர தபால் புகையிரதம், புகையிரதக் கடவையினூடாக கடக்க முற்பட்ட இந்த வாகனத்தை தூக்கி எறிந்துள்ளது.

விபத்தால் நிறுத்தப்பட்ட இந்தப் புகை யிரதம், சிறு தாமதத்தின் பின்னர் பயண த்தை தொடர்ந்ததாகவும் பொலிஸார் கூறி னர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிறுவர் அரங்கம்

1017

## வீரதீர பராக்கிரமன் யார்?

...நமது ராஜ்யத்தில் இவ்வாறு தீயசக்திகள் உருவாவதைப் பொறுக்க முடியாமல், இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சியளித்து அவர்களைத் தவறான வழியில் ஈடுபடுத்த முயன்ற பயிற்சியாளனை அம்பெய்திக் கொன்று விட்டேன்.

என்னுடைய கடமையை



நிறைவேற்றியதற்காகப் பெருமைப்படுகிறேன்" என்றான்.

அடுத்து வந்த விஜயன், "நான் தென்திசை நோக்கிப் பயணம் சென்றேன்.

தென்திசைப் பகுதிகளில் சட்டம், ஒழுங்கு சரியான முறையில் இல்லை என்பதை அறிந்தேன்.

அங்குள்ள அரசாங்க அதிகாரிகள் மெத்தனமாக இருப்பதே இதற்குக் காரணம் என்று அறிந்தேன்.

எங்கு பார்த்தாலும் வழிப்பறி கொள்ளைகள் நடந்து கொண்டிருந்தன.

அங்கிருந்த இளைஞர்களுக்குக் கொள்ளைக்காரர்களை எதிர்த்துப் போரிட தைரியம் இல்லை.

அந்த நிலைமையை மாற்ற எண்ணிய நான் அங்கிருந்த இளைஞர்களைத் திரட்டி அவர்களுக்கு வாற்சண்டை கற்றுக் கொடுத்தேன்.

இப்போது அங்குள்ள இளைஞர்கள் எனது முயற்சியினால் வீரம் மிகுந்தவர்களாக மாறி விட்டனர்." என்றான்

அடுத்து, மூன்றாமவன் கௌதமன் முன் வந்து, "நான் கிழக்கு திசையில் பயணம் சென்றேன்.

ராஜ்யத்தின் கிழக்குப் பகுதி சுபிட்சமாகவும், அமைதியாகவும் இருந்தது.

அதனால் என்னுடைய போர்கலைகளைப் பயன்படுத்த வேணடிய அவசியம் ஏற்படவில்லை.


ஒருநாள் அங்குள்ள கோயில் ஒன்றில் வடித்திருந்த சிற்பத்தின் விரல்களுக்குள் ஒரு பல்லி சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது.

எப்படி சிக்கியது என்று தெரியவில்லை.

ஆனால், அந்த இடத்தை விட்டு மீள முடியாமல் தவித்ததைக் கண்டேன்.

அப்போது ஓர் அதிசயக் காட்சியைக் கண்டேன். மற்ற பல்லிகள் தங்கள் வாயில் உணவைக் கவ்விக் கொண்டு வந்து சிக்கிக் கொண்டிருந்த பல்லிக்கு அளித்துக் கொண்டிருந்தன.

ஓரறிவு படைத்த சாதாரண பல்லிகளுக் குள் நிலவிய அந்த



நலலிணக்கத்தைக் கண்டு வியந்த நான், ஒரு சிற்பியை வரவழைத்து, சிற்பங்களின் விரல்களை உடைத்து, அது தப்பிக்க வழி செய்தேன்.

திரும்பி வரும் வழியில், ஒரு காட்டில் கிணற்றினுள் ஒரு யானைக குட்டி விழுந்திருந்ததைக் கண்டேன்.

நான் காட்டுவாசி மக்களை அங்கு அழைத்து வந்து, அந்த யானைக் குட்டியை கிணற்றிலிருந்து வெளியே மீட்க ஏற்பாடு செய்தேன்.

பிறகு, அந்த ஆட்களிடம் பல்லிகள், யானைகள்போன்ற மிருகங்கள் தங்களுக்குள் உதவி செய்து கொள்வதை சுட்டிக்காட்டி, மனிதர்களாகிய நாமும் அதிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேணடும் என்று உபதேசம் செய்தேன்.

பொறாமை, பேராசை ஆகியவற்றின் காரணமாக, மக்கள் ஒருவருக்கொருவர் சண்டையிடுவது எத்தகைய அறிவீனம் என்பதை எடுத்துரைத்தேன்" என்றான்.

உடனே, மன்னரும், மந்திரியும் தனியே சென்று தங்களுக்குள் கலந்து ஆலோசித்தனர்.

தாங்கள் தேடிக் கொண்டிருந்த வீரமும், பராக்கிரமும் ஜெயனிடமும், விஜயனிடமும் பரிபூரணமாக இருந்ததைக் கண்டு, அவர்களில் ஒருவனையே இளவரசனாகத் தேர்வு செய்ய வேணடுமெனத் தீர்மானித்தபின், குரு வித்யாசாகரின் கருத்தினை அறிய அவரிடம் சென்றனர்.

வித்யாசாகர் மன்னரை நோக்கி, "மகாராஜா! என்னுடைய அபிப்பிராயப்படி மூவரில் கௌதமன் தான் உங்களுடைய வாரிசாகத் தகுதியானவன்.

அவனிடம் வீரம், பராக்கிரமம் ஆகியவற்றுடன், மனித குலத்திற்குத் தேவையான ஜீவ காருண்யமும் நிரம்பியுள்ளது. அத்தகைய ஜீவகாருண்யச் சிந் தனை உள்ளவனே எதிர்கால மன்னனாகத் தகுதியானவன்" என்றார்.

குருவின் கருத்தினைக் கேட்ட மன்னரும், மந்திரியும் மிகுந்த ஆச்சரியப்பட்டனர். நீண்ட நேரம் யோசித்த பிறகு மன்னர், "குருதேவரே! உங்கள் கருத்தினை ஏற்கிறேன்" என்று சொல்லிவிட்டு, மந்திரியுடன் திரும்பிச் சென்றார்.

(முற்றும்)

## 12.2014 19 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

✦ 324 - லிசீனியஸ் ரோமப் பேரரசன் பதவியைத் திறந்தான்.

✦ 1154- இங்கிலாந்தின் இரண்டாம் ஹென்றி முடிசூடினான்.

✦ 1606 - ஐக்கிய அமெரிக்காவின் 13 குடியேற்ற நாடுகளில் முதலாவதான வேர்ஜீனியாவின் ஜேம்ஸ்டவுன் நகரில் இங்கிலாந்திலிருந்து மூன்று கப்பல்களில் ஆங்கிலேயர்கள் வந்திறங்கினர்.

✦ 1871 - யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக கத்தோலிக்க மதகுருப் பதவிகள் (ordination) வழங்கப்பட்டன.

✦ 1916 - முதலாம் உலகப் போர்: பிரான்சில் வேர்டன் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் ஜேர்மனியப் படைகளை பிரெஞ்சுப் படைகள் தோற்கடித்தன.

✦ 1941 - அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனிய இராணுவத் தலைவர் ஆனார்.

✦ 1961 - போர்த்துக்கீச குடியேற்ற நாடான டாமன் டையூ பகுதியை இந்தியா தன்னுடன் இணைத்துக்கொண்டது.

✦ 1967 - இரு நாட்களின் முன்னர் கடலில் நீந்தும்போது காணாமல் போன ஆஸ்திரேலியப் பிரதமர் ஹரல்ட் ஹோல்ட் இறந்து விட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

✦ 1972 - சந்திரனுக்கு கடைசித் தடவையாக மனிதரை ஏற்றிச் சென்ற அப்பல்லோ 17 பாதுகாப்பாக பூமி திரும்பியது.

✦ 1983 - உலகக்கோப்பை காற்பந்துப் போட்டியில் வழங்கப்படும் பரிசுக்கிண்ணம் பிரேசிலில் அந்நாட்டு காற்பந்தாட்ட அமைப்பின் தலைமையகத்தில் வைத்துத் திருடப்பட்டது.

✦ 1986 - சோவியத் எதிர்ப்பாளி அந்திரேய் சாகரொவ் வீட்டுக்காவலிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

✦ 1997 - டைட்டானிக் திரைப்படம் வெளியானது.

### பிறப்புகள்

✦ 1901 - ருடால்ப் ஹெல், ஜேர்மானிய கண்டுபிடிப்பாளர் (இ. 2002)

✦ 1906 - லியோனிட் பிரெஷ்னேவ், சோவியத் ஒன்றியத் தலைவர் (இ. 1982)

✦ 1922 - கே. அன்பழகன், தமிழக அரசியல்வாதி

✦ 1934 - பிரதிபா பாட்டீல், இந்தியாவின் 12ஆவது குடியரசுத் தலைவர்

1974 - ரிக்கி பொன்ரிங், அவுஸ்திரேலியத் துடுப்பாட்டக்காரர்


### இறப்புகள்

✦ 1848 - எமிலி புராண்ட்டி, ஆங்கிலேய எழுத்தாளர் (பி. 1818)

✦ 1927 - ராம் பிரசாத் பிசுமில், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி. 1897)

✦ [illegible] (பி. 1945)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 25

...அரச மரத்தடியில ஊரே கூடி ஒக்காந்திருக்கு.

கருவாச்சி பொழப்பு என்னாகப் போகுதோங்கிற கவலையும் பஞ்சாயத்துல கலகம் வந்து ஒண்ணுக் கெடக்க ஒண்ணு ஆகிப் போயிருமோங்கிற பதட்டமும் திட்டுத் தடிட்டாத் தெரியுது ஊர்காரக மூஞ்சியில.

உருமாப் பெருமாத்தேவரு பெருங் குரலெடுத்துப் பேசுறாரு: இந்தா பாரப்பா கட்டையா... சொன்னதையே சொல்லிக்கிட்டிருக்காம நல்ல முடிவுக்கு வாப்பா.

ஆம்பளைக்கு அருங்கேடு நெனச்சாலும் பொம்பளையப் பெறம் பேசப் படாதப்பா.

நாப்பது வருசத்துக்கப்புறம் சேந்த குடும்பம் சேந்ததாகவே இருக்கட்டும்.

ஊரே ஒண்ணு கூடிச் சொல்றோம். வச்சுப் பொழச்சுக்கப்பா அவள.

உட்கார்ந்திருந்த கட்டையன் விசுக்குன்னு எந்திருச்சான்.

பெருசுக கூடி ஒரு தீர்ப்பச் சொல்லிட்டு நீங்கபாட்டுக்குப் போயிருவீக.

வச்சுவாழப் போறது நானு. ஒரு ஆணுக்கும் பொண்ணுக்கும் கல்யாணம் எதுக்கு? வீடு வெளங்க.

வாரிசு உண்டாக இந்த ரெண்டுக்கும் லாயக்குப் படமாட்டா இந்த ரெண்டுங் கெட்ட சிறுக்கி.

வேணாம் வெலக்கி விட்ருங்க.

இல்லாதது பொல்லாததைச் சொல்லி எம் பிள்ளை பொழப்பக் கெடுத்திர வேணாம்ன்னு சொல்லுங்கப்பா.

அந்தாளு சொல்லுறத நம்பாதிக.

தங்கத் தட்டு மாதிரி போயிச் சல்லடையாத் திரும்ப வந்திருக்கா எம் பொண்ணு.



முந்தானைய ஒதறி இழுத்து இடுப்புல செருக்கிக்கிட்டு தரைய விட்டுப் பந்து மாதிரி உந்திரிச்சு அழுது பேசுறா பெரியமூக்கி.

ஆமா பெரிய மூக்கி சீமையில இல்லாத பொண்ணு. மொளகு ரசம் வையிடின்னா எலிப் புழுக்கையப் அள்ளிபோட்டு இதுதான் மொளகுங்கிற பொண்ணு போன்னா போயிர வேண்டியதுதான...

ஏய் வான்னா வாரத்துக்கு போன்னா போரத்துக்கும் எங்க ஐத்தமக என்ன அவுசாரியாடா?

பொண்ணு கேட்டு வந்தது நீதான?

மொதலாக்கம் பட்டியிலிருந்து பஞ்சாயத்துக்கு வந்திருந்த பெரியமூக்கி அண்ணன் மகனுங்க நாலு பெரும் ஒண்ணும் சொன்னாப்புல எந்திரிச்சிட்டானுக.

தாட் பூட்ன்னு அவன்ங்க தவ்வவும் பல்லக் கடிச்சுக்கிட்டுக் கட்டையன் லேசாத் திரும்பிப் பார்க்கிறான்.

ஆயுதம் பொதைச்ச எடத்துல அடையாளம் வச்சு ஒக்காந்திருந்தா பன்னியான் பேரன், ஒலக்கையன், சலம்பல்பாண்டி மூணு பேரும் லேசாப்பள்ளம் பறிக்கிறான்க.

வாடா போடான்னு பேசுனா ஏடாகூடமாயிப் போயிருமப்பா.

நல்லது கெட்டது பேசத்தான் நாங்க இருக்கமல்ல... ஒக்காருங்க. காவற்காரச் சக்கணன் கையமத்தவும் தோள்ல போட்ட துண்டத் தரையில போட்டு ஒக்காந்திட்டானுங்க நாலு பேரும்.

ஏம்பா... சடையத்தேவா! நீ பெரிய மனுசன்.. நீ என்ன சொல்ற.

நடுவரலையும் சுட்டுவெரலையும் ஒண்ணா வாயில வச்சு அழுத்தி ரெண்டுக்கும் மத்தியில இருக்கிற இடைவெளியில புளுச்சுன்னு எச்சிதுப்பி எச்சிவிழுந்த எடத்துல எடது கையால மண்ணப்போட்டு மூடிக்கிட்டே சடையத்தேவரு சொன்னாரு ...

தவள தண்ணிக் கிழுக்குது ஒந்தி மேட்டுக்கிழுக்குது... பிரிச்சு விட்ருங்கப்பா.

சடையத்தேவா! நீ பிள்ளைக பொழப்ப நெனைக்கல.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

கணவன் சொன்னான் நல்லது! நான் உன்னிடம் கோபமாக இருப்பது போல் நடித்து உன்னை அழ வைத்தேன்! அப்பொழுது அந்த விருந்தாளியும் அங்கு வந்து அவர்களுடன் சேர்ந்து கொண்டு சொன்னார்: நானும் வெளியே செல்வதுபோல் நடித்து விட்டுத் திரும்ப வந்து விட்டேன்.

(சிரிப்பு)

## கவலைகள் இன்றி வாழ்தல்!

நமது எண்ணங்களும் நமது வார்த்தைகளும் வேறு வேறாக இருக்கின்றன.. அதனால் நாம் வாழும் வாழ்க்கையை இழந்து விடுகிறோம். ராமகிருஷ்ணர் சொல்கிறார்: நமது எண்ணங்களையும் வார்த்தைகளையும் ஒன்று சேர்த்தல் ஒரு தவம் செய்வது போலாகும். ஆனால் நாம் என்ன செய்கிறோம். நமது எண்ணங்களைத் திருத்தி வார்த்தைகளாக வெளிக் கொண்டு வருகிறோம். வார்த்தைகள் வெளிவருவதற்கு முன் நிறைய கணக்கீடுகள் செய்யப்படுகிறது. நாம் எதிர்கால இலாப -நஷ்டங்களைப் பார்த்து ஆராய்ந்து பின்னரே பேச ஆரம்பிக்கிறோம். இதனால் நமது புற இயல்பு ஒரு போதும் ஒருங்கிணைக் கப்படுவதில்லை; நாம் பல துண்டுகளாக பிளவுபட்டிருக்கிறோம்.



எப்படி எந்த விதமான தயாரிப்பும் இல்லாமல் மணிக்காணக்காக என்னால் பேச முடிகிறது என்று மக்கள் உன்னிடம் ·கேட்கிறார்கள். பாருங்கள்.. உண்மையை இயல்பாக உள்ளவாறே நான் பேசுகிறேன். அவ்வளவுதான். உண்மையை வெளிப்படுத்துவதில் எனக்கு எந்தவிதக் கவலையும் இல்லை. நான் வார்த்தைகளை ஒருபோதும் திருத்துவதில்லை. எனக்கு எண்ணுவதும் பேசுவதும் ஒன்றுதான். உங்களுக்கு முதலில் எண்ணம் வருகிறது. பிறகு அதை திருத்திய பிறகே பேச்சு வருகிறது. இந்த மொத்த நடைமுறையில் கள்ளம் கபடமற்ற தன்மை இழக்கப்படுகிறது. நீங்களும் நிறைய வார்த்தைகளில் சிக்கிக் கொள்கிறீர்கள்.

நாம் தன்னிச்சையாகப் பேசுவதனால் நீங்கள் என்னுடைய பேச்சை மணிக்கணக்காக அமர்ந்து கேட்க முடிகிறது. இல்லாவிடில் நீங்கள் அமைதியற்றுவிடுவீர்கள். நீங்கள் நேரத்தைப் பற்றிக் கவலைப்படாமல் உட்கார்ந்திருப்பதே இதற்கு போதுமான நிரூபணமாகும். தன்னிச்சையாக நிகழும் பொழுது நீங்கள் எண்ணாமல் வெறுமனே பாய்ந்து கொண்டிருக்கிறீர்கள். இல்லாவிடில் நீங்கள் உங்கள் சொந்த மன அமைப்பிலேயே தேங்கிவிடுகிறீர்கள். நீங்கள் ஒரே வழியில் சிந்தித்துக்கொண்டிருக்கும் குறுகிய மனப்பான்மையுடையவராகி விடுகிறீர்கள்.

## ஆன்மீகம் 109

ஒரு சின்னக் கதை..

அண்டை வீட்டுக்காரரின் நாய்கள் தொடர்ந்து குரைத்துக் கொண்டிருந்ததால் ஒருவரால் எவ்வளவு முயன்றும் தூங்க முடியவில்லை. இது சில இரவுகள் தொடர்ந்தது. இறுதியில் அவர் அவற்றின் சொந்தக்காரரிடம் பேசுவதாக முடிபு செய்தார்.' அடுத்த நாள் அவருடைய வீட்டிற்குச்சென்று அதைப் பற்றிப் புகார் கூறினார். அவரோ அசையவில்லை. என்னால் எதுவும் செய்ய முடியாது. நீ என்ன செய்யப்போகிறாய்? என்று கேட்டார். அதற்கு முதலாமவர் சொன்னார். நல்லது இன்று இரவு அந்த நாய்களை என் வீட்டின் கொல்லைப் புறத்தில் கட்டிப்போட்டுவிடுகிறேன். (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிலைக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்யுங்கள்

## ஜன. 9 ஆம் திகதி நாமனைவரும் பாற்சோறு சாப்பிடுவோம் என்கிறார் மகிந்த



**கொழும்பு**

**எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் நாளாகும். அன்றையதினம் மக்கள் காலையிலேயே வாக்குச் சாவடிக்குச் சென்று வெற்றிலை சின்னத்துக்கு வாக்களித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை அமோக வெற்றி பெறச் செய்யுங்கள்.ஒன்பதாம் திகதி நாம் அனைவரும் இணைந்து பாற்சோறு சாப்பிடுவோம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

பாணந்துறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இப்பிரசாரக் கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி, அரசாங்கத்தை ஸ்திரமற்ற நிலைக்குத் தள்ளி நாட்டின் அமைதியை சீர்குலைக்க முயல்வோரிடமிருந்து நாட்டைப் பாதுகாக்க எதிர்வரும் 8 ஆம் திகதி வெற்றிலைக்கு மக்கள் வாக்களித்து முழுமையான ஆதரவினை வழங்குவது முக்கியம்.

பிரிவினை வாதிக்கும் பயங்கரவாதிகளுக்கும் நாட்டு மக்கள் வழங்கும் உறுதியான பதிலாக இம்முறை தேர்தல் அமையும். பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து நாம் இல்லாதொழித்தாலும் வெளிநாடுகளில் பயங்கரவாதம் தொடர்கிறது. பயங்கரவாதிகள் சர்வதேசத்திலிருந்து இயங்கி வருகின்றனர். தனியான பாராளுமன்றத்தை அமைத்துக் கொண்டு அதற்கு அமைச்சரவையையும் நியமித்து செயற்பட்டு வருகின்றனர். இது தொடரபில் நாம் அவதானமாக செயற்பட வேண்டும்.

நாட்டிற்கு எதிராகச் செயற்பட்டு அரசாங்கத்தை ஸ்திரமற்றதாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எதிர்காலத்திலும் நாம் மிக அவதானமாக செயற்பட வேண்டியுள்ளது. நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் நாள் எதிர வரும் ஜனவரி மாதம் 8ஆம் திகதியாகும்.

அன்றைய தினம் மக்கள் காலையிலேயே வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களிக்க வேண்டும். வெற்றிலைக்கு வாக்களித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை அமோக வெற்றி பெறச் செய்யுங்கள். ஒன்பதாம் திகதி நாம் அனைவரும் இணைந்து பாற்சோறு சாப்பிடுவோம். நாம் பாற்சோறு உண்ண இப்போதிருந்தே தயாராவோம்.

நாட்டை பயங்கரவாதத்திடமிருந்து மீட்டு அபிவிருத்தியில் கட்டியெழுப்பியுள்ளோம். நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு நாம் முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களை தொடர்ந்தும் எதிர்காலத்தில் முன்னெடுப்பதற்கு மக்களின் பூரண ஆதரவு அவசியம்.

நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்களை தொடர்ந்து எதிர்காலத்திலும் முன்னெடுப்பதே எமது திட்டமாகும் எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ-5)

## மாட்டில் கூட விளம்பரம் மகிந்த அரசு ஒட்டுகிறது

### மைத்திரிபால சிறிசேன கிண்டல்

ஜனாதிபதி தற்போது தங்களது ஆதரவினை தேடுவதற்கு இராணுவம், பொலிஸ் மற்றும் அரச அலுவலர்கள் என அனைவரையும் தங்களுக்கு சார்பாக பாவிக்கின்றார் என்று மைத்திரிபால சிறிசேன குற்றம் சுமத்தியுள்ளார்.

என்னை விமர்சனம் செய்யும் மகிந்த தான் செய்த குற்றங்களுக்கு புத்த பெருமானே இலங்கையை விட்டு வெளியே சென்றுவிட்டார்.

அரசு நீதியான தேர்தலை நடத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்காது என்பது தற்போது தெரிகின்றது.



தங்களுக்கு மக்கள் மத்தியில் ஆதரவு இருக்குமானால் எதற்காக மக்கள் பணத்தில் விளம்பரப் பதாகைகள் அடிக்க வேண்டும்.

பாதையால் ஒரு மிருகம் கூட போக முடியவில்லை. மாட்டைக் கண்டால் மாட்டிலும் ஒரு விளம்பரம் ஒட்டுகின்றனர்.

தங்களது ஆதரவினை தேடுவதற்காக என்னை விமர்சிக்கின்றனர். கடந்த 4 வருடங்களுக்கு முன் நடந்தவற்றை தற்போது கூறுகின்றனர்.

இன்று அரசாங்கம் சாத்திரம், சம்பிரதாயம் என மக்கள் பணத்தை வீண் விரயம் செய்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## பௌத்தர்களுக்கு சாவுமணி நிச்சயம்

### பொதுபல சேனா எச்சரிக்கை

மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து ஊடாக இலங்கைக்கு எதிரான சதித்திட்டம் முன்னெடுக்கப்படுவதோடு கோடிக்கணக்கான பணமும் பொது எதிரணிக்கு வந்து சேர்கிறது. எனவே ஜனாதிபதித் தேர்தலில் இவ் அணி வெற்றி பெற்றால் அது சிங்கள பௌத்தர்களுக்கு சாவுமணியாக அமையும் என எச்சரிக்கை விடுக்கும் பொதுபல சேனா ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இலங்கையிலும் தலைதூக்கலாம். எனவே உளவுப் பிரிவினர் உஷாராக இருக்க வேண்டுமென்றும் அவ் அமைப்பு தெரிவித்தது.

அவ்வமைப்பின் கொழும்பு கிருலப்பனையிலுள்ள பொதுபல சேனா அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு உரையாற்றிய பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்,

சந்திரிகாவின் ஈ திட்டத்தின் கீழ் சர்வதேசம் மற்றும் தேசிய சதிகாரர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டு நாட்டின் சமாதானத்தை சீர்குலைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பொது எதிரணியை சுற்றி முஸ்லிம், கிறிஸ்தவ அடிப்படைவாதச் சக்திகளே உள்ளன.புத்தர் மனித மாமிசம் உட்கொண்டார் என பிரசாரம் செய்த தௌஹீத் ஜமாத் அமைப்பு உட்பட முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புக்களும் கிறிஸ்தவ அடிப்படைவாத அமைப்புக்களுமே பொது எதிரணிக்கு ஆதரவு வழங்குகின்றன.

இது மிகவும் பயங்கரமானது இவ் அணி வெற்றி பெற்றால் சிங்கள பௌத்தர்களுக்கு அதுவே சாவுமணியாக அமையும்.அது மட்டுமல்லாது பொது எதிரணியின் வேட்பாளர் மைத்திரிபால கூறுகின்றார் 100 நாட்களுக்குள் நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படுமென்று.

மறுபுறம் ரணில் சொல்கிறார் ஜே.ஆரின் அரசியலமைப்பு முழுமையாக ஒழிக்கப்படமாட்டாது. திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்கிறார்.இவ் அணியில் ஒரே கொள்கையுடைய தலைவர் இல்லை. பலரும் பல்வேறு கொள்கைகளை கொண்டுள்ளனர்.இவர்களால் எப்படி நாட்டுக்கு தலைமைத்துவத்தை வழங்க முடியும்.இந்த ஜனாதிபதி தேர்தல் நாட்டுக்கு தீர்க்கமானது. சர்வதேச, உள்நாட்டு சதிகாரர்களால் நாடு சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

மலேசியா, இங்கிலாந்து, சிங்கப்பூர் ஊடாகவே இச்சக்தி முன்னெடுக்கப்படுவதோடு அந்நாடுகள் ஊடாக பல கோடி ரூபாய் இவ் அணிக்கு வந்து சேர்கின்றது.இந்தியாவிலும் உலகிலும் ஐ.எஸ்.ஐ.எஸ். முஸ்லிம் பயங்கரவாதம் வியாபித்துக் கொண்டு வருகின்றது. இலங்கையின் கிழக்கில் முஸ்லிம் பயங்கரவாத அமைப்புக்கள் தலைதூக்கி வருவதாக அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏ. யும் எச்சரிக்கை விடுத்துள்ளது. தொழில் செய்யாமல், கஷ்டப்படாமல் பணம் உழைக்கக் கூடியதுதான் பயங்கரவாதம். எனவே எமது உளவுப் பிரிவினர் உஷாராக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## கைதிகளை தேர்தல் பிரசாரப் பணிகளில் ஈடுபடுத்துவது மனிதவுரிமை மீறலாகும்

சிறைச்சாலை திணைக்களத்தின் கீழ் இருக்கும் கைதிகளை அரசாங்கத்தின் அரசியல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தை மாத்திரமல்ல சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமை இணக்கப்பாடுகளையும் மீறும் செயல் என ட்ரான்ஸ்பேரன்ஸி இண்டர்நேஷனல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதனால், அரசாங்கத்தின் இந்த செயலை வன்மையாக கண்டிப்பதாகவும் இது குறித்து உரிய விசாரணைகளை மேற்கொள்



ளுமாறும் அந்த அமைப்பு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திடம் எழுத்து மூலம் கோரியுள்ளது.


மேலும் அரசாங்கம் தனது தேர்தல் பிரசாரத்திற்காக கட்சியினரை ஏற்றிச் செல்ல இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்துகளை பயன்படுத்தி வருவதுடன் ஒரு வேட்பாளருக்கு மாத்திரம் பக்கச்சார்பான சுவரொட்டிகளை ஒட்டி தேர்தல் சட்டத்தை மீறும் செயலை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் ட்ரான் ஸ்பேரன்ஸி இண்டர்நேஷனல், போக்குவரத்துச் சபை மற்றும் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ஆகியோரிடம் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசடிகள் நடந்தது என்பதை உறுதிப்படுத்தினால் ஓய்வூதியம் பெறாது பதவியிலிருந்து விலகுவேன்

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

வாக்குச்சாவடிகளில் வாக்களிக்கும் போதோ, வாக்குகளை எண்ணும் போதோ தேர்தல் முடிவுகளில் மாற்றங்கள் ஏற்படும் வகையில் பாரிய மோசடிகள் ஏற்பட்டதாக எவராவது சாட்சியங்களுடன் உறுதிப்படுத்தினால், ஓய்வூதியம் பெறாமலேயே பதவியில் இருந்து விலக தயார் என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல முடிவுகளில் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய மோசடிகள் ஏற்படாது என்பதற்கான வாக்குறுதியை வழங்குவதற்காகவே அவர் இதனை கூறியுள்ளார். வாக்கு எண்ணிக்கை கூட்டும் போது தவறுகள் ஏற்படலாம். உதாரணமாக 841 வாக்குகள் அளிக்கப்பட்ட வாக்குச் சாவடியின் பொறுப்பாளர் அறிக்கை தரும் போது 891 பேர் வாக்



களித்தனர் என கூறமுடியும். இது தவறு என்று உணரும் போது வாக்குகளை மீண்டும் எண்ணுமாறு உத்தரவிடப்படும்.

அதே வேளை பேருந்துகளில் வாக்கு பெட்டிகள் மாற்றப்படுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கு பதிலளித்த தேர்தல் ஆணையாளர் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள இலக்கம் மற்றும் சீல் முறைகளுக்கு அமைய அப்படியான முறை கேடுகளை செய்ய முடியாது எனக் கூறியுள்ளார். இதனிடையே ஐரோப்பிய ஒன்றியம் பக்கச்சார்பாக நடக்கும் என்ற நிலைப்பாடு காரணமாகவே சிலர் ஐரோபபிய ஒன்றிய கண்காணிப்பாளர்கள் வருவதை எதிர்ப்பதாகவும ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருதது வெளியிட்ட தேர்தல் ஆணையாளர் பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இலங்கை அங்கம் வகிப்பதால், அந்நாடு களின் கணகாணிப்பாளர்களை அழைக்க எவரிடமும் கேட்க வேண்டிய அவசியமில்லை. ஐரோப்பிய ஒன்றியத்தில் இலங்கை அங்கம் வகிக்கவில்லை என்பதால், அங்கிருந்து கண்காணிப்பாளர்களை அழைக்கும் போது அது குறித்து போட்டியிடும் வேட்பாளர்களின் அனுமதியை பெற வேண்டும் என தெரிவித்துள்ளார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 120 | 150 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 500 | 450 | 600 |
| தக்காளி | 180 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 140 | 150 | 160 |
| கரட் | 180 | 180 | 240 |
| பூசணி | 40 | 40 | 60 |
| புடோல் | 140 | 100 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 80-160 |
| பெரிய வெங்காயம் | 110 | 110 | 120 |
| பாகற்காய் | 350 | 400 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 80 | 80 |
| பயற்றங்காய் | 180 | 200 | 200 |
| லீக்ஸ் | 260 | 300 | 300 |
| பீற்றூட் | 180 | 150 | 200 |
| கறிமிளகாய் | 350 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 500 | — | — |
| போஞ்சி | 200 | 240 | 140 |
| கத்தரிதம்புள்ள | 140 | 100 | 140 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 50 |
| தேசிக்காய் | 120 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30 | 30-40 |
| இராசவள்ளி | 140 | 150 | 160 |

# பொலிஸாருக்கு ரி-56 ரக துப்பாக்கி

தேர்தல் நாளில் பொலிஸாருக்கு ரி-56 ரக துப்பாக்கிகள் வழங்கப்பட உள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 8ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ரி-56 ரக துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளன. பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ள சகல பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் ஆயுதங்கள் வழங்கப்படவுள்ளன.


ஒவ்வொரு வாக்களிப்பு நிலையததிற்கும் இரண்டு ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களும் ஒரு பெண் பொலிஸ் உத்தியோகத்தரும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிககப்படுகிறது.


ஒவ்வொரு நான்கு வாக்குச் சாவடிகளை உள்ளடக்கும் வகையில் விசேட பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 227


சதீஸ் சியானி





கஜீவன் ஜெயச்சந்திரன்




சக்தி வேல்




கீர்த்து கரன்




நிலானி நிலா





இரத்தினசபாபதி பாலராஜா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் தலையாய கடமை



மத்திய அரசின் கேந்திரியப் பள்ளிக் கூடங்களில், தற்பொழுது ஜேர்மன் மொழி மூன்றாவது மொழியாகப் பயிற்சி வழங்கப்படுகிறது. அதற்குப் பதில் மூன்றாவது மொழி யாக சம்ஸகிருதம் இருக்கும் என்று சென்ற மாதம் (நவம்பர் 14), மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சரகம் அறிவித்துள்ளது.

இந்திய வரலாற்றில், 19 ஆவது நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கில மொழியை மக்கள் கற்பதற்கான வழி ஆரம்பித்தது. இது ஒரு வரலாற்று முக்கியமான சம்பவம் ஆகும்.

ஆயினும் இந்திய மக்களுக்கு அரசு கல்வியறிவு தர வேண்டும் என்று இங்கிலாந்து அரசு தந்த உத்தரவின்படி, அப்பொழுது இந்தியாவிலிருந்த ஆங்கில அதிகாரிகள் இந்துக்களுக்கு சம்ஸ்கிருத மொழியிலும், இஸ்லாமியர்களுக்கு உருது மொழியிலும் பள்ளிகளை ஆரம்பித்தார்கள்.

இதை ராஜா ராம்மோகன் ராய் மிகவும் கடுமையாகக் கண்டித்து கவர்னர் ஜெனரல் ஆம்ஹெர்ஸ்ட்டுக்கு 11 டிசம்பர், 1823 திகதி ஒரு மனு அனுப்பினார்.

சம்ஸ்கிருத - உருது பள்ளிகளை அமைப்பதன் மூலம், இந்திய மக்களை என்றென்றைக்கும் அறியாமையில் வைத்திருப்பதுதான் இங்கிலாந்தின் நோக்கம் என்று தோன்றுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் இருந்த நிலைமைக்கு இந்திய மாணவர்களைத் தள்ளுகிறது.

இங்கிலாந்தும் மற்ற மேலை நாடுகளும் வளர்ச்சியடைந்திருப்பதற்கான முக்கியமான காரணம், விஞ்ஞானம், கணிதம், தத்துவம், தொழில் முறைகள், ஆராய்ச்சி அறிவு ஆகிய வையாகும். இந்தியாவின் வளர்ச்சிக்கு ஆங்கில மொழியில்தான் கல்வி தரப்பட வேண்டும். அவர் எழுதிய கடிதம் கவர்னர் ஜெனரல் அலுவலகத்தில் எத்தகைய கவனத்தையும் ஏற்படுத்தவில்லை.

மாறாக, இந்து தர்மத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ராஜா ராம்மோகன் ராய் ஈடுபட்டிருப்பதாக அவதூறுகள் பல எழுந்தனவாம். எதற்கும் அஞ்சாமல், 1816 இல் அவரது சொந்த முயற்சியில் ஆங்கிலக் கல்வி தரும் இந்து காலேஜ் ஆரம்பிக்கப்பட்டது. அதில் பெருவாரியான மாணவர்கள் சேர்ந்தார்கள்.

மோகன் ராய் போன்று, ஆங்கில அரசின் உயர் அதிகாரியாக இருந்த ஆலன் ஆக்டேவி யன் ஹியூம் என்பவரும் இந்தியர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டவர். அவரும் ஆங்கிலப் பள்ளிகளைத் தமது பணத்திலிருந்து உருவாக்கினார்.

அப்பொழுது நிலவிய கவர்னர் ஜெனரல் ஆட்சியில் இந்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை அவர் வெளிப்படையாக கண்டித்ததோடு, தமது பதவியை விட்டு, 1885, டிசம்பர் 28 - 30 திகதிகளில் மும்பையில் இந்திய தேசிய காங்கிரஸ உருவாக்கினார், மேலும் 1885 முதல் 1906 வரை அவர் தேசிய காங்கிரஸ் அமைப்பின் பொதுச்செயலாளராகவும் பணியாற்றினார்.

ஆங்கிலக் கல்வியின் மூலமாகத்தான் இந்தியாவில் தேசிய உணர்வும் விடுதலைப் போராட்டமும் வளர்ச்சி அடைந்தன என்பதை தீவிரமான சுதந்திரப் போராட்டத் தலைவராக விளங்கிய லோக்மான்ய பாலகங்காரத் திலகர், 1885இல் எழுதிய கட்டுரையில் தெரிவித்தார். இன்று நாம் தேசிய உணர்வுடன் செயறபடுகிறோம் என்றால், அதற்கு முதன்மையான காரணம் ஆங்கில மொழிப் பயிற்சிதான்.

1920 முதல் மகாத்மா காந்தி தொடக்கிய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர களில் பெரும் பாலோர் ஆங்கில மொழியில் சிறப்பான பயிற்சி பெற்றவர்களாக இருந்தனர்.

இந்திய அரசியலில ஒவ்வொரு மாநிலத்திலும் பல்வேறு சமுதாய - அரசியல் அமைப்புகள் தோன்றி தத்தம் பண்பாடு - கலை - மொழி உரிமைகளுக்குப் போராடியதற்கு ஆங்கிலக் கல்வி உதவியிருக்கிறது.

தமிழ் நாட்டில் 1937 இல் காங்கிரஸ் ஆட்சியில் முதல்வராக இருந்த சக்ரவர்த்தி ராஜகோபாலாச் சாரியார் (ராஜாஜி) ஹிந்தி மொழியைப் பள்ளிகளில் பாடமாக்க கட்டாயப்படுத்திய பொழுது தான், ஹிந்தி எதிர்ப்பு இயக்கம் தோன்றியது.

அதில் காங்கிரஸ் தலைவர்க்ள் உடபட் பலரும் ஒருங்கிணைந்து போராடினார்கள். காலப் போக்கில் தேசிய ஆட்சி மொழியாக ஹிந்தி வருவதற்கு தமிழ்நாட்டிலும், தென் மாநிலங்களில் மட்டுமல்லமால் இந்தியாவின் பல மாநிலங்களிலும் கடுமையான எதிர்ப்பு வளர்ந்தது.

இந்திய அரசமைப்புச் சட்டப்படி, 1965 ஜனவரி 26 முதல் ஹிந்தி மட்டும்தான் ஆட்சி மொழியாக ஆகும் என்பதை அப்பொழுது உள்துறை அமைச்சராக இருந்த குல்ஜாரிலால் நந்தா அறிவித்தார்.

கழகத் தலைவராக இருந்த அண்ணா முன்கூட்டியே 1965 ஜனவரி 8 இல் கழகத்தின் செயற்குழுவைக் கூட்டி விவரமாக விவாதித் தார். 1965 ஜூன் 26 அன்று துக்க தினமாகக் கருப்புக் கொடிகளை ஏற்றி, தமிழ்நாட்டின் கண்டனத்தைத் தெரிவிப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது.

அதனையொட்டி. 1965 ஜனவரி 17 ஆம் நாள் திருச்சியில் ஹிந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடு நடத்தப்பட்டது. அதற்கு கி.ஆ.பெ.விசு வநாதம் தலைமை வகித்தார். மாநாட்டைத் துவக்கி வைத்தவர் ராஜாஜி.

அவர், "என்னுடைய உள்ளத்திலேகூட பிரிவினை உணர்வு தோன்றிவிட்டது. பிரிவினை கூடாது என்று மத்திய அரசு முன்பு சட்டம் போட்டது. இப்பொழுது பிரிவினை மனப்பான்மையை உண்டாக்குவதற்குச் சட்டம் போட்டுள்ளது. ஹிந்தியை ஆட்சி மொழி ஆக்குவதற்கு வழி செய்கிறது. அந்த விதிமுறையைத் தூக்கிக் கடலில் போடுங்கள்" என்றார்.

ராஜாஜிக்கே உரிய அமைதி, அழுத்தம், நுண்ணறிவு மாநாட்டில் பெரும் ஆரவாரத்தையும் முழக்கத்தையும் ஏற்படுத்தியது. கடைசியில் மாநாட்டிற்கு வந்திருந்த செய்தியாளர்கள் ராஜாஜியைச் சந்தித்துக் கேட்டார்கள், "நீங்கள் தானே 1937 இல் கட்டாய ஹிந்தியைத் தமிழ்நாட்டில் கொண்டு வந்தீர்கள" என்று. அதற்கு மிகவும் அமைதியுடன் ராஜாஜி பதிலளித்தார் "ஒரு செயறபாடு தவறு என்று தெரிந்ததும் அதை விட்டு நல்வழிக்குச் செல்வதுதான் நல்ல பண்பாடு".

1965 ஜனவரி 25 இரவில் அறிஞர் அண்ணா உள்பட பல்லாயிரக்கணக்கானவர்கள் தமிழ்நாட்டில் சிறையில் தள்ளப்பட்டனர்.

1956 ஜூலை மாதத்தில் ஹிந்தி ஆட்சி மொழி ஆவதற்கான முடிவுகளை எடுத்திட மகாராஷ்டிர முதலமைச்சராக இருந்த பி.ஜி. கெர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அதில் உறுப்பினராக இருந்த டாக்டர் சுநீதி குமார் சட்டர்ஜி, கெர் குழுவின் முடிபுகளை எதிர்த்து தமது மாறுபட்ட கருத்தை வெளியிட்டார்.

அவர் குறிப்பிட்டதாவது: "ஹிந்தி ஆட்சி மொழியாக ஏற்கப்பட்டால், இந்திய மக்கள் இரண்டு பிரிவுகளாக ஆகிவிடுவார்கள். ஹிந்தி மொழியினர் முதல்தர வகுப்பினர், இந்தி பேசாத மக்கள் இரண்டாம்தர வகுப்பினர் என ஆகிவிடுவார்கள்.

அகில இந்திய வேலைவாய்ப்புகளில் ஹிந்தி பேசுபவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு ஹிந்தி அறியாத மக்களுக்குக் கிடைக்காது. ஹிந்தி மொழியைவிட வளர்ச்சி அடைந்த, நீண்டகால இலக்கியப் பண்பாடுகளை உடைய பல மொழி கள் இந்தியாவில் இருக்கின்றன.

தமிழ்நாட்டிலிருந்து உறுப்பினராக இருந்த டாக்டர் சுப்பராயனும் தமது கண்டனத்தைத் தெரிவித்தார். ஆங்கிலத்தைப் புறக்கணித்து இந்தியா வளர்ச்சி அடையாது. அதன் அடிப் படைச் சட்டமான அரசமைப்புச் சட்டம், போடப்படும் அன்றாடச் சட்டங்கள், நீதித் துறையில் தரப்படும் தீர்ப்புகள் எல்லாம் ஆங்கிலத்தில்தான் தரப்படவேண்டும்.

இன்றுள்ள நிலைமையில் மாநிலங்களுக் கும் - மத்திய அரசுக்கும் உள்ள தொடர்புக்கும், உலகளாவிய செயறபாடுகளுக்கும் ஆங்கிலம் தேவையான ஒன்று.

கெர் குழுவில் இருந்த குஜராத் வித்யா பீடத்தின் தலைவர் மகன்பாய் தேசாய், மேற்கு வங்க முதல்வர் டாக்டர் பி.சி. ராயைச் சந்தித்து, ஹிந்திதான் ஆட்சி மொழி என அரசமைப்புச் சட்டத்தில் முடிவாகிவிட்டது. அதை எதிர்ப்பதில் என்ன பலன்? உடனடியாக டாக்டர் பி.சி. ராய், நீங்கள் சொல்கிறபடி ஆட்சி மொழியாக ஹிந்தி கட்டாயமாக ஆக்கப்பட்டால், நான் இந்திய தேசத்திலிருந்து பிரிந்துவிடத் தயங்கமாட்டேன் என்றார்.

1959, ஆகஸ்ட் 7, மக்களவையில் ஆட்சி மொழி பற்றிய விவாதத்தில், பிரதமர் ஜவாஹர்லால் நேரு, மொழிப் பிரச்சினையில் கட்டாயம் என்பது இருக்காது. ஹிந்தி பேசாத மக்கள் முடிவு எடுக்கும்வரை தற்பொழுது உள்ளபடி ஆங்கிலம் நீடிக்கும் என்ற உறுதிமொழியைத் வழங்கினார். 1965 ஆம் ஆண்டிலும் மேற்குறிப்பிட்ட உறுதிமொழியிலிருந்து தாம் மாற்றம் அடையவில்லை என்று சொன்னார்.

மகன்பாய் தேசாய், கெர் ஆட்சிமொழிக் குழுவின் அறிக்கையில் டாக்டர் பி.சி.ராய் பெயரைக் குறிப்பிடாமல், ஒரு மாநில முதல்வர் ஆட்சி மொழியாக ஹிந்தி கட்டாயப்படுத்தப்பட்டால், இந்தியாவை விட்டு பிரிந்துவிடத் தயங்கமாட்டேன் என்று கூறியதாக எழுதி இருந்தார். எனினும், பி.சி.ராய் பெயரை வெளிப்படையாக்கியவர் டாக்டர் சுநீதி குமார்தான்.

பி.சி. ராய் இங்கிலாந்து சென்று எப்.ஆர்.சி.எஸ்., எம்.ஆர்.சி.பி. ஆகிய உயர்மட்ட அறுவை - மருத்துவப் பட்டங்களைப் பெற்றார். அவ்வாறு இரு முனைகளிலும் ஒருவரே உயர் பட்டங்கள் பெறுவது கடினம. இந்தியாவுக்குத் திரும்பியதும், காங்கிரஸ் கட்சியில் இணைந்து, மகாத்மா காந்தியின் நண்பராகவும் மருத்துவராகவும் ஆனார். 1930 இல் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு அலிப்பூர் சிறையில் வைக்கப்பட்டார்.

1947 சுதந்திர இந்தியாவில் காந்தியாரின் சொற்படி, மேற்கு வங்க முதல் மந்திரியாக ஆனார். 1961 இல் அவருக்குப் பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. 80 ஆவது வயதில் அவர் இறந்தார். இந்த அளவுக்கு விளங்கிய பி.சி.ராய் ஹிந்தி மொழி கட்டாயம் ஆக்கப்பட்டால், இந்தியாவிலிருந்து பிரிந்துவிடுவேன் என்று கூறியது மத்திய ஆட்சியினரிடமும், ஹிந்தி மொழியினரிடமும் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. 1957 ஆகஸ்டு 4, தமது ஆங்கில வார ஏடான "ஹோம்லாண்ட்" தலையங்கத்தில் அண்ணா ஒரு நாட்டுக்கு அதன் தாய்மொழி எவ்வளவு முக்கியமானது என்பது பற்றி எழுதினார்.

ஐரீஷ் நாட்டின் சுதந்திரத்தை நிலைபெறச் செய்த டி வாலேரா சொன்னதாவது: "இந்த உலக வாழ்விலிருந்து நான் சென்றுவிட்டால், அயர்லாந்து மக்களுக்கு ஒன்று கூறுவேன் உங்களுடைய அயர்லாந்து நீடிக்கவேண்டும் என்றால், ஐரீஷ் மொழியைக் காப்பாற்றி வைத்துக் கொள்ளுங்கள்". அதைப்போல் தமிழ்நாடு நீடிக்கவேண்டும் என்றால், தமிழ்மொழியைக் காப்பாற்றி வைத்துக் கொள்ள வேண்டியது தமிழரகளின் தலையாய கடமை ஆகும்.

-தினமணி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மையினர் வெட்கப்படுகின்றனர்

## கோத்தபாய கூறுகின்றார்

**நாட்டில் போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று இலங்கையில் உள்ள பிரசித்தி பெற்ற சிலர் கூறுவதன் மூலம் சிங்கள இனம் மற்றும் இலங்கையர்கள் வெட்கப்படுகிறார்கள் என்று பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரை யாற்றிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரி விக்கையில்,

இலங்கை அரசாங்கம் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற் காகவே விடுதலைப் புலிகளுட னான போரை முன்னெடுத்தது.

எனினும் சனல்-4 போன்ற தொலைக்காட்சிகள் ஒளிப்பரப்பிய பொய்யான ஆவணப் படங்களை பார்த்த இலங்கையர்கள் சிலர், இலங்கை படையினர் போர்க் குற்றம் புரிந்ததாக கூறுகின்றனர்.


இது சிங்களவர் என்ற அடிப் படையிலும் இலங்கையர் என்ற அடிப்படையிலும் வெட்கப்பட வேண டிய செயலாகும்.


இலங்கையின் போரின் போது அதற்கு உதவியளித்த நாடுகள் பின்னர் அந்தப்போரை இடையில் நிறுத்த அழுத்தம் கொடுத்தன.

இதன்பின்னர் போர் முடிந்த பின்னர் போர்க்குற்றத்தை ஜெனீ வாவில் முன்வைத்துள்ளன.

போரின் போது 6 ஆயிரம் படை யினர் கொல்லப்பட்டனர். 25 ஆயிரம் பேர் கடும் காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்தநிலையில் சிலரின் அரசி யல் நோக்கங்களுக்காக படையி னரின் அர்ப்பணிப்புகளை அடகு வைக்க முடியாது என்றும் கோத்தபாய மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)





மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதியான உபாலி அபேரத்ன உயர் நீதிமன்ற புதிய நீதிபதி யாகவும் திருமதி ஷெரீன் மடவல மேன் முறையீட்டு நீதிமன்ற புதிய நீதிபதியாகவும் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

# அரசாங்கத்தின் மோசடிகளை அம்பலப்படுத்த முழு ஆவணங்களும் தங்களிடமுள்ளனவாம்

(கொழும்பு)

அரசாங்காத்தின் மோசடிகள் குறித்து அம்பலப்படுத்துவதற்கான சகல ஆவணங்களும் எங்களிட முள்ளன என ஐக்கிய தேசிய கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார். இதுகுறித்த அவர் மேலும் தெரி வித்துள்ளவை வருமாறு,

இலங்கை வெளிநாட்டுக் கட னில் மூழ்கியுள்ளது. நாட்டின் வருமானத்தை விட கடன் வீதமே அதிகரித்துள்ளது. அபிவிருத்தி என்ற பெயரில் அரசாங்கம் மேலும் மேலும் கடன்படுகின்றது. கடன்கள் மற்றும் வட்டிகளைச் செலுத்திக் கொண்டு நாட்டின் அபிவிருத்தியில் கவனம் செலுத்த முடியாத நிலை யில் அரசாங்கம் உள்ளது. இதே வேளை அரச தலைவர்கள் தமது ஆடம்பர மாளிகைகள் போன்ற வற்றுக்காக பெருமளவு பணத்தை செலவிடுகின்றனர். சர்வதேச வங் கிகள் அமெரிக்க டொலருக்காக 4 வீத வட்டியை அறவிடுகையில், இலங்கையின் அரச வங்கிகள் 9 வீத வட்டிக்கு மில்லியன் கணக்கில் கடன்களைப் பெறுகின்றன. இந்த பணம் எங்கிருந்து வருகின்றது, எங்கு செல்கின்றது? எவையுமே தெரியாதுள்ளன. எனினும் இவ ர்கள் குறித்த எல்லா ஆவ ணங் களும் எம்மிடமுள்ளன. இவரகள் சட்டத்தின்முன் நிறுத்தப்படுவார் கள் என அவர் மேலும் தெரிவி த்தார். (இ-5)

# பல பிரதேசங்களில் கடும்மழை தொடரும்

நிலவும் சீரற்ற காலநிலையால் நாட்டின் பல பாகங்களிலும் மழை யுடன் கூடிய காலநிலை நிலவும் என வளிமண்டளவியல் திணை க்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்தி, கிழக்கு, தெற்கு மற்றும் ஊவா மாகாண ங்களில் விட்டு விட்டு மழை பெய் யும்.

அத்துடன் சில பிரதேசங்களில் கடும் மழை அல்லது இடி, மின் ன்லுடன் கூடிய மழை பெய்யலாம்.

சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகும் எனவும் அந்த திணை க்களம் குறிப்பிட்டுள்ளது.

இடி, மின்னலால் ஏற்படும் தாக்கங்களில் இருந்து தம்மை பாதுகாத்து கொள்ள அவதானமாக செயற்படுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## தொண்டு

ஒரு ஊரிலே பாதிரியார் ஒருவர் இருந்தார்.

அவர் ஒருநாள் மடத்தில் உள்ள சமையல் அறை யில் பாத்திரங்களைக் கழுவி சுத்தப்படுத்திக் கொண் டிருந்தார். அச்சமயம் ஒரு தேவதூதன் அவர் முன்னால் வந்து நின்று,

"ஆண்டவர் என்னை உங்களிடம் அனுப்பியுள் ளார். பரலோகத்திலே வாசம் செய்வதற்கு உங்க ளுக்கு நேரம் வந்து விட்டது" என்று கூறினார்.

"ஆண்டவருக்கு என்னுடைய ஞாபகம் வந்தத ற்கு நன்றி. ஆனாலும் இப்போது இங்கே நீயே பார்... 'எவ்வளவு மட்பாண்டங்கள் சுத்தப்படுத்து வதற்கு உள்ளன. இவ்வளவையும் நான் சுத்தப்படு த்த வேண்டும். இந்தப் பணியை முடிக்கும் வரை க்கும் என் பரலோக வாழ்வைத்தள்ளி வைக்க முடியுமா?" என்று-கேள்வி எழுப்பினார்.

தேவதூதன் தனக்குரித்தான விவேகத்தோடு, அன்பாக பாதிரியாரைப் பார்த்தான்.

"சரி... என்ன செய்யலாம் என்பதை பின்னர் சொல்கிறேன்" என்று கூறி விட்டு புறப்பட்டு போய் விட்டான்.

இன்னொரு நாள்... வைத்தியசாலையிலே நோயா ளிகளைக் கவனிக்கிற வேலையிலே ஈடுபட்டிருந் தார் அந்தப் பாதிரியார். ஒரு நோயாளியின் தாகத் திற்கு தண்ணீர் கொடுத்துவிட்டு நிமிர்ந்து பார்த்த போது, தேவதூதன் மறுபடியும் அவர் முன்னால் தோன்றினார்.

இந்தத் தடவை பாதிரியார் தன்னலமற்றவராக, பேரன்பைக் காட்டக்கூடிய வகையிலே தன்னுடைய இரு கைகளையும் உயர்த்திய படி தேவதூதனின் கவனத்தை பிணியால் வாடிய நோயாளிகளின் பக்கம் திருப்பினார்.

தேவதூதன் எதுவுமே கூறவில்லை. தன்னை மறைத்துக் கொண்டார். பின்னர் தனது மடத்திற்கு சென்று அறையினுள் இளைப்பாறினார். சற்று யோசித்துப் பார்த்தார். தேவதூதனையும் அவரது விருப்பத்தையும் தள்ளிப் போட்டுக் கொண்டு வந் ததையும் நினைத்துப் பார்த்தார். திடீரென தான் முதுமை அடைவதையும் சோர்வடைவதையும் உணர்ந்தார். மறுபடியும் ஆண்டவரை நினைத்து "கடவுளே! உம்முடைய தூதனை மறுபடியும் என் னிடம் அனுப்பினால், நான் அவரை சந்திப்பதற்கு ஆவ லாக இருக்கிறேன்" – என்று கூறுவதற்கு முன்பா கவே தேவதூதன் அவர் அருகில் வந்து நின்றான்.

பாதிரியார் நிமிர்ந்து பார்த்தார்.

"நீங்கள் இப்போதே என்னை அழைத்தால், நான் பரலோகம் வரத் தயார்" என்று கூறினார்.

தேவதூதன் மறுபடியும் பாதிரியாரை அன்போ டும் விவேகத்தோடும் பார்த்தார்.

"நீங்கள் இதுவரைக்கும் வேறு எங்கேயோ இருந்ததாக நினைக்கிறீர்கள். தொண்டு செய் வதைவிட பெரிய காரியம் வேறு எதுவுமே இருக்க முடியாது.

ஆனால், இந்தக் காலத்திலே நாம் தொண்டு செய்கிறோம் என்று நினைத்து, ஏதாவது செய்ய ஆரம்பித்தால் கூட அதை ஒரு மாதிரியாக சுற்றி நின்று வேடிக்கை பார்க்கும் கூட்டம்தான் அதிகம் காணப்படுகிறது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



திவிநெகும தேசிய அபிவிருத்தி பாடசாலை விவசாய வேலைத்திட்டத்தின் கீழ் பழக்கன்று நடும் தேசிய விழா யாழ். இந்துக்கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. கல்லூரியின் விவசாய ஆசிரியர் க. மகேந்திரன் ஒழுங்கமைத்த இந்நிகழ்வில் கல்லூரியின் பிரதி அதிபர், பகுதித் தலைவர் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (படம்:மானிப்பாய் செய்தியாளர்)



யாழ்.வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினரால் வட்டு மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட 80 மாணவர்களுக்கு 80 ஆயிரம் ரூபா பெறுமதியான காலணிகள் அண்மையில் வழங்கப்பட்டன. இதன்போது வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் பொருளாளர் க.ரகுமான் காலணிகளை மாணவர்களுக்கு வழங்கி வைப்பதையும் பெற்றுக் கொண்ட மாணவர்களையும் படத்தில் காணலாம்.






கொக்குவில் றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டிதா வித்தியாசாலையின் மாணவர்களின் நன்மை கருதி கற்றல் உபகரணங்கள் அண்மையில் அன்பளிப்பு செய்யப்பட்டன. இதில் றோட்டரிக் கழகத்தின் மாவட்ட ஆளுநர் கலந்து கொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கி வைப்பதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :–மானிப்பாய் செய்தியாளர்)




யாழ்.அரியாலை சரஸ்வதி கோயிலில் வெளியீடு செய்யப்பட்ட ஒலிப்பேழையை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலிகாமம் கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வெளியிட்டு வைப்பதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களமும் (GTZ) பாடசாலை அபிவிருத்திப் பிரிவும் இணைந்து நடத்திய பாடசாலைகள் பாதுகாப்புப் போட்டியின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்ற போது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் போட்டியில் வெற்றியீட்டிய பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மாணவி ம.மதுஷாவிற்கு வடக்கு மாகாண கல்வியமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். இராதாகிருஸ்ணன் விருது வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:– தும்பளை செய்தியாளர்)







கோண்டாவில் பிரதேச வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக ஞான வீர சன சமூக நிலையத்தினால் குடிநீர் சுத்திகரிப்பு சாதனம் அண்மையில் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்...


## நிழல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8000 தீவிரவாதிகளுக்கு பாக். தூக்குத் தண்டனை!

## பிரதமர் நவாஸ் ஷெரீப் அதிரடி உத்தரவு

**பாகிஸ்தானில் இராணுவப் பாடசாலையில் தலிபான் தீவிரவாதிகள் ஆடிய வெறியாட்டத்தால் 141 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக அந்நாட்டில் தீவிரவாத செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய் யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள 8 ஆயிரம் பேருக்குத் தூக்குத் தண் டனை விதிக்க அந்நாட்டு பிரதமர் நவாஸ் ஷெரீப் உத்தர விட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.**



தீவிரவாத சம்பவங்கள் தொடர்பான வழக்குகளில் மரண தண்டனைக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை பாகிஸ்தான் நேற்று முன்தினம் விலக்கிக் கொணடது

பெஷாவர் நகரில் இராணுவம் நடத்தும் பாடசாலை ஒன்றில் தலிபான் தீவிரவாதிகள்புகுந்து 132 மாணவர்கள் உட்பட 148 பேரை கண் மூடித்தனமாக சுட்டுக்கொன் றனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து, அமைச்சர்கள் குழு அளித்த ஆலோசனையின் பேரில் இத்தடை விலக்கிக் கொள்ளப்படுவதாக பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் அறிவித்தார்.

இதன்மூலம்மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ள தீவிரவாதிகளின் தண்டனை இனி நிறைவேற்றப்படும் என்று தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் தீவிரவாதம் தொடர்பான குற்றங்களில் மரண தண்டனைக்கு 2008 ஆம் ஆண்டு தடை விதிக்கப்பட்டது. நவாஸ் ஷெரீப் அரசு கடந்த ஆண்டு ஜுலை மாதம் இத்தடையை நீக்க விரும்பியது. ஆனால் சர்வதேச அளவிலான நிர்ப்பந்தம் காரணமாக இம் முடிவை நவாஸ் ஷெரீப் பின்னர் கைவிட்டார்.

ஐரோப்பிய யூனியன் நாடுகளுடனான சலுகை வர்த்தக ஒப்பந்தம் இரத்தாகும் என்ற அச்சத்தாலும் நவாஸ் ஷெரீப் இத்தடையை நீக்கவில்லை.

உள்துறை அமைச்சக புள்ளி விபரப்படி பாகிஸ்தானில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மரண தண்டனை விதிக்கப்பட்டு, தடை காரணமாக தண்டனை நிறைவேற்றப் படாமல் உள்ளனர்.

பெஷாவர் தாக்குதலுக்குப் பிறகு தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கை தொடர்பாக அரசுக்கும் இராணுவத்துக்கும் நெருக்குதல் அதிகரித்துள்ள நிலையில், இத் தடை நீக்கப்பட்டுள்ளது.

இதனிடையே பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையில் பெஷாவர் நகரில் அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற்றது. இதில் பெஷாவர் தாக்குதல் மட்டுமன்றி நாடு எதிர்நோக்கியுள்ள பிற சவால்கள் குறித்து தலை வர்கள் விவாதித்தனர்.

இக்கூட்டத்தில் நவாஸ் ஷெரீப் பேசும்போது, "இந்தத் தாக்குதல் காட்டு மிராண்டிகள் கட்டவிழ்த்து விட்ட தேசிய துயரம். நமது குழந்தைகளின் தியாகம் வீணாவதை அனுமதிக்க மாட்டோம். தலிபான்களுடன் நடத்திய பேச்சு வார்த்தையில் எவ்வித பலனும் ஏற்படவில்லை. தீவிரவாதத்தை எதிர்த்து பாகிஸ்தான் நீண்டகாலமாக போரிட்டு வருகிறது. இது நாட்டின் பொருளாதாரத்தையும்பாதித்துள்ளது.

தற்போது சிறையிலுள்ள தீவிரவாதத்துடன் தொடர்புடைய 8 ஆயிரம் தீவிரவாதிகளுக்கும் மரண தண்டனை விதக்கப்படும் "தீவிரவாதத்தை எதிர்த்துப் போரிட எல்லா கட்சிகளும் ஒன்றுபட்டு நிற்கின்றன. தீவிரவாதத்தைவேரோடு ஒழிப்பதற்கான வழிமுறைகள் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்படும்" என்றார். (இ-5)




### பான் கீ மூன் வரவேற்பு

அமெரிக்கா கியூபா இடையே மீண்டும் உறவு ஏற்பட்டுள்ளதை ஐநா பொதுச் செயலாளர் பான் கீ மூன் வரவேற்றுள்ளார்.

50 ஆண்டுகளுக்குப்பிறகு, இரு நாட்டு உறவையும் இயல்பு நிலைக்கு கொண்டு வர அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மற்றும் கியூபா ஜனாதிபதி ரவுல் காஸ்ட்ரோ எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவிப்பதாக பான் கீ மூன் கூறியுள்ளார்.

இதன் மூலம் இரு நாட்டு மக்களிடையே நட்பு மலரும் என கூறியுள்ள பான்கீ மூன், இந்த முயற்சியில் ஐ.நா. அவை துணை நிற்கும் எனவும உறுதி அளித்துள்ளார். (இ-5)

## பாகிஸ்தான் தலிபான்களுக்கு ஆப்கான் தலிபான் கண்டனம்

பாகிஸ்தானில் உள்ள பெஷாவர் பாடசாலை ஒன்றில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 132 மாணவர்கள் உட்பட 141 பேர் பலியான சம்பவத்திற்கு ஆப்கான் தலிபான்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அப்பாவி மாணவர்களைக் கொல்வது இஸ்லாமுக்கு விரோதமானது என்று அவர்கள் கண்டித்துள்ளனர்.

வடக்கு வஜிரிஸ்தான் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் மேற்கொள்ளும் தாக்குதலுக்கு பதிலடியாகவே இத் தாக்குதல் நடத்தியதாக பாகிஸ்தானின் தெஹ்ரிக்-இ-தலிபான் அமைப்பு கூறியிருந்தது.

இதனையடுத்து ஆப்கான் தலிபான்கள் தனது கண்டனத்தில் கூறும் போது, "ஆப்கான் இஸ்லாம் எமிரகம் அப்பாவி மாணவர்கள் மற்றும் மக்களைக் கொல்வதை எதிர்க்கிறது.

அப்பாவி மக்கள், குழந்தைகளை வேண்டுமென்றே கொல்வது இஸ்லாமிய கொள்கைகளுக்கு விரோதமானது. ஒவ்வொரு இஸ்லாமிய அரசும், இயக்கமும் அடிப்படை சாராம்சத்தின் படி நடக்க வேண்டும்.

ஆப்கான் இஸ்லாமிய எமிரகம், இந்தத் தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதோடு, மாணவர்களை இழந்து தவிக்கும் பெற்றோருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது" என்று தனது அறிக்கையில் தெரிவித் துள்ளது.

ஆப்கானில் தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் பலியாவதற்கு பிரதானமான காரணம் தலிபான்கள் மற்றும் பிற தீவிரவாதக் குழுக்களே என்று ஐ.நா. ஏற்கனவே குறிப்பிட்டுள்ளதையடுத்து பெஷாவர் தாக்குதலுக்கு ஆப் கான் தலிபான்கள கண்டனம் தெரிவித்துள்ளனர். (இ-5)

## பாகிஸ்தானில் பிரதமருக்கு எதிரான போராட்டத்தை கைவிட்டார் இம்ரான்

பாகிஸ்தானில் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு எதிராக நடத்தி வந்த போராட்டத்தைக் கைவிடுவதாக முன்னாள் கிரிக்கெட் வீரரும், தெஹ்ரி இ இன்சாப் கட்சித் தலைவருமான இம்ரான் கான் அறிவித்துள்ளார். இதன மூலம் பாகிஸ்தானில் நடைபெற்று வந்த 4 மாத கால தொடர் போராட்டங்கள் முடிவுக்கு வந்துள்ளன.

பெஷாவர் பாடசாலையில் தலிபன் பயங்கரவாதிகள் நிகழ்த்திய தாக்குதலைத் தொடர்ந்து பிரதமர் நவாஸ் ஷெரீப் அனைத்துக் கட்சித் தலைவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தினார். இதில் பங்கேற்ற இம்ரான் கான், பின்னர் செய்தியாளர்களை சந்தித்து தனது முடிவினை அறிவித்தார். நாட்டின் தற்போதைய சூழலை கருத்தில் கொண்டும் தீவிரவாதத்திற்கு எதிரான போரில் அரசு கவனம் செலுத்த ஏதுவாகவும் தனது போராட்டத்தை கைவிடுவதாகக் கூறியுள்ளார். எனினும், தேர்தல் முறைகேடுகள் தொடர்பாக தான் முன்வைத்த குற்றச்சாட்டுகளை அரசு விசாரிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். இம்ரான் கானின் இந்த முடிவை வரவேற்றுள்ள பிரதமர் ஷெரீப் விரைவில் அது தொடர்பாக விசாரணை ஆணையம் அமைக்கப்படும் என மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## இரக்கமற்றவர் இதயங்களில் இறைவன் குடிகொள்ளட்டும்

போப்பாண்டவர் பிரான்சிஸ், வாடிகனில் செயின்ட் பற்றர் சதுக்கத்தில் நேற்று முன் தினம் பல்லாயிரக் கணக்கான பொதுமக்களை சந்தித்தார்.

அப்போது அவர் பாகிஸ்தான, அவுஸ்திரேலியா, ஏமன நாடுகளில் நடந்த தீவிரவாத தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், "கடந்த சில நாட்களாக பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, ஏமன் நாடுகளில் நடந்துள்ள மனித நேயமற்ற தீவிரவாத தாக்குதல்களில் பலியானவர்களுக்காக உங்களுடன் பிரார்த்தனை செய்ய விரும்புகிறேன்" என்றார்.

மேலும், "பலியானவர்களின் ஆன்மா இறைவனில் அமைதி அடையட்டும். பலியானவர்களின் பெற்றோருக்கு கடவுள் ஆறுதலை தரட்டும். குழந்தைகளைக்கூட விட்டு வைக்காத வன்முறையாளர்களின் இதயங்களிலும் இறைவன் மாற்றத்தை ஏற்படுத்தட்டும் என உருக்கமுடன் தெரிவித்தார். (இ-5)

## அமெரிக்காவின் வான்வழித் தாக்குதலால் தலிபான் தீவிரவாதிகள் 11 பேர் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானில் பெரும்சவாலாக இருக்கும் தலிபான்களை குறி வைத்து அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நேட்டோ படையினர் தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

அமெரிக்கா அடிக்கடி வான் வழி தாக்குதல் மூலமாக நாசவேலைகளில் ஈடுபட்டு வரும் தீவிரவாதிகளை ஒடுக்கி வருகிறது.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தானின் கிழக்கு பகுதியில் நேற்று முன்தினம் அமெரிக்கா வான்வழி ஏவுகணை தாக்குதல் நடத்தியது.

அப்போது ஒரு லொறி மீது ஏவுகணை வீசப்பட்டதில் அதில் இருந்த 4 பாகிஸ்தான் தலிபான் தீவிரவாதிகள் உட்பட 11 பேர் பலியானார்கள். இந்த தகவலை நன்கார்ஹர் மாகாணத்தைச் சேர்ந்த ஷெர்சாத் ஆளுநர் உறுதிப்படுத்தியுள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷ - சிறிசேன சபாஸ் சரியான போட்டி

### ..சிறிசேனவின் வெளிப்படுத்தல்கள்

கூட்டத்தில் பேசிய அபேட்சகர் சிறிசேன ஆர்வத்திற்குரிய சில விடயங்களையும் வெளிப்படுத்தியிருந்தார். தனது கூட்டாளி சுசில் பிறேம ஜயந்தவையும் தன்னையும் தங்களது பணி நடைமுறைகளின்போது, கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மகிந்த ராஜ பக்ச கரகரத்த குரலில் அச்சுறுத்துவது போன்றதொரு தொணியில் கௌரவக் குறைவாகவே நடத்துவதுடன் அவரது பேச்சுபாணி விரும்பக்கூடியதாகவும் இருப்பதில்லை என தனது பழைய நினைவுகளிலிருந்து கூறினார். சிறிசேனா இங்கு வலியுறுத்த முயற்சிக்கும் விடயம் என்னவென்றால், அரசிலுள்ள ஏனைய சில உறுப்பினர்களுங்கூட இவ்விதமான நிலைமை காரணமாக சோர்வுற்று அதிருப்தியுடன் இருப்பதாகவும்முன்னணிக்குவந்துவிடயங்களில் ஆழமான ஆர்வத்துடன் ஈடுபட அவர்களுக்கு சந்தர்ப்பமளிக்கப்படுவதில்லை எனவும் கூறினார். இருந்தும் தான் எடுத்துக்காட்டிய விதமான சிக்கல்களில் மாட்டிக்கொண்டிருக்கும் அந்த எண்ணிக்கையினருங்கூட அமைச்சரவைக் கூட்டங்களில் பெருமளவில் மௌனமாயிருக்கும் காரணங்களை அங்கு அவர் பகிரங்கப்படுத்தவில்லை.

### முக்கியத்துவமிழந்த முன்னாள் இராணுவ ஜெனரல் பொன்சேகா

யுத்தகால வருடங்களை நினைவுகூர்ந்து ஆபத்துக்கள் பற்றி எடுத்துக்காட்டிய ஜெனரல் பொன்சேகா, கொழும்பிலிருந்து போரை நடத்தியவர்கள் அந்த நேரங்களின்போது அஞ்சி நடுங்கிக்கொண்டிருந்ததாகவும் கூறினார். அவரது பேச்சின்போது பெருமளவில் அங்கு மௌனம் நிலவியது பற்றி காரணங் கூறிய அவதானிப்பாளர் ஒருவரது கூற்றுப்படி, ராஜித செனாரத்னவின் பேச்சுப் போல் பொன்சேகாவின் பேச்சில் ஆற்றல் இருக்கவில்லை. எப்படியும் ஜெனரல் அவர்களது செயல் ஆற்றல் பற்றி முன்னாள் ஜனாதிபதி குமாரதுங்க அவர்கள் எடுத்துக்கூறியபோது இயல்பானதொரு பாராட்டு மக்கள் கூட்டத்திலிருந்து உரத்து வெளிப்பட்டது. இதிலிருந்து போர் வெற்றிக்கு மக்களிடையே பாராட்டும் மதிப்பும் பொன்சேகாவிற்கு இருப்பினுங்கூட அரசியல் தலைமைத்துவத்திற்குரிய ஒருவராக அவரை மக்கள் கண்டுகொள்ளவில்லை என்பதை நிச்சயமாக அவர் அறிந்துகொள்ள முடியும்.

### பொன்சேகாவும் போர்க்குற்ற விசாரணைகளும்

வருகின்ற தேர்தலில் தமது வாக்குகளை யாருக்கு அளிப்பது என்பதை வாக்காளர் தீர்மானித்துக்கொள்வதற்கு அவர்களுக்கு உதவியான அத்தியாவசிய காரணியொன்று பற்றி பொன்சேகாவினால் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அனைத்துக் கட்சிகளாலும் கருத்திற்கொள்ளப்பட்ட விடயங்கள் பற்றிப் பேசப்பட்டபோது நாட்டினது இறைமைக்கு குந்தகம் ஏற்படுத்தக்கூடிய எந்த வித முயற்சியும் சகித்துக்கொள்ளப்படலாகாது என ஏற்கனவே நிச்சயித்துக் கொள்ளப்பட்டிருந்தது போர்க்குற்றச்சாட்டுக்களைப் பற்றிய பேச்சிற்கே இடமிருக்கக் கூடாது என்பதையிட்டு பொன்சேகா தெளிவாகவே இருந்தார். குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க வேண்டியவராக அவரே இருக்கிறார் என்று கூறிய பொன்சேகா. அப்போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவராக ராஜபக்சவை முன்னிறுத்துவதற்கான முயற்சியொன்றும் இடம்பெறுவதாக ராஜபக்ச சகோதரர்களால் பகிரங்கமாக எடுத்துக்கூறப்படுவதானது, உண்மையான பிரச்சினையிலிருந்து வாக்காளர்களின் சிந்தனையை திசைதிருப்புவதற்கான தந்திரோபாயமே எனவும் தொடர்ந்து வலியுறுத்தியிருந்தார். நாட்டுத் தலைவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் சர்வதேச நீதியயற் சட்ட ஒழுங்குகள், விதிகள் பற்றி எதுவுமே பேசாத பொன்சேகா வெளிநாடுகளில் தற்போதும் செயற்பட்டுவரும் சர்வதேச தமிழர் அரங்கங்களின் சிறிதும் விட்டுக்கொடுக்காத முயற்சிகள் பற்றி பேச்சுக்கும் எடுக்கவில்லை.

பொன்சேகா தனது பறிக்கப்பட்ட இராணுவ பதவிநிலை அடையாளங்கள், ஓய்வூதியம் மற்றும் பதவிநிலைப் பெயர் போன்றவற்றை மீளவும் பெற்றுக்கொள்வார்



தற்போதைய ஜனாதிபதியின் கீழ் ஜெனரல் பொன்சேகா இழந்து போயிருந்த மேற்படி சகல உரிமைகளுடன் அவரது சிவில் உரிமைகள் சொத்துக்கனைத்தும் அவருக்கு திரும்பவும் கொடுக்கப்படுமெனை மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார். அவருக்கு இழைக்கப்பட்ட தவறை சீர்செய்யும் எளிதான முறையில் முற்றிலும் நிபந்தனையற்ற விதமாக ஜனாதிபதியின் மன்னிப்பை முதலில் வழங்குவதன் மூலம் சிறிசேன இதனை சாதிப்பார். மைத்திரிபால சிறிசேனவுடனும் ஏனைய எதிரணி உறுப்பினர்களுடனும்சந்திரிகாமேற்கொண்டதாக வெளிப்படுத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் போது பொன்சேகாவுக்கு தங்களால் அளிக்கக்கூடியதான குறைந்தளவு அனுசரனை என்ற மட்டில் எதிரணி உறுப்பினர் அனைவரும் இணைந்த விதமாக இதற்கு இணங்கியிருந்தனர். எப்படியும் ஓய்வுபெற்ற ஜெனரல் சரத்பொன்சேகாவுக்கு அவர்களது தேசிய பட்டியலில் இடமொன்று கிடைப்பதற்கான சாத்தியம் இருப்பதாக தெரியவில்லை. எந்தவொரு எதிர்கால பாராளுமன்ற தேர்தலிலும் அதற்கான உறுப்புரிமைக்கு போட்டியிட்டு வெற்றிபெறுவது அவரைப் பொறுத்த விடயம் எனவும் பொன்சேகாவை ஏதாவது ஒரு அமைச்சு செயலாளராக நியமிக்கலாம் என்ற யோசனையொன்றும் முன்வைக்கப்பட்டது. பதவியொன்றிலிருந்து அகற்றப்பட்டு தனிமைப் படுத்தப்பட்டவரான தனுன திலகரட்ண என்ற பொன்சேகாவின் மருமகன் மீது உள்ள வழக்கு விலக்கிக்கொள்ளப்பட்டு மகளும் மருமகனும் சுயாதீனமாக விடப்படுவரென்பது அவருக்கான மற்றுமொரு சலுகையாகும்.

பொன்சேகாவின் கட்சியை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தி வந்த ஒரே நபரான ஜயந்த கெற்றகொடவும் கட்சி தாவி UPFA உடன் இணைந்ததைத் தொடர்ந்து தனது அந்த ஒரே பிரதிநிதித்துவத்தையும் அவர் இழந்துபோனவரானார்.

### எதிரணி மூலோபாயம்

SLFP சதித்திட்டம் எனப்படும் அந்த நடவடிக்கைகளுக்குப் பின்னணியில் முன்னாள் ஜனாதிபதி குமாரதுங்கவே இருந்து நடத்தியதாக தகவல் வெளிவந்தது. பதினொரு வருடங்களுக்கு சற்று கூடிய வருடகாலம் அதிகாரத்திலிருந்த காரணத்தால் ஊடக விடயங்கள் சம்பந்தமாக- போதிய அறிவு தனக்கு இருப்பதாகவே அம்மையார் கருதுகிறார் போலும். அவரது பதவிக்காலத்தில் விக்ரமதுங்க ஜனாதி பதியர்கள் மீது உடல்ரீதியில் மேற்கொள்ளப்பட்ட கடுமையான தாக்குதல் பற்றியும் அதன் பின்னணியில் அப்போது பதவியிலிருந்த சந்திரிகா அம்மையாரின் பாதுகாப்புபடைப் பணியினரே இருந்ததாகவும், தன்மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள் அதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டதற்குப் பதிலாக அவர்கள் மீதான வழக்கு வாபஸ் பெறப்பட்டது போன்ற விடயங்கள் காலப்போக்கில் ஓரளவு மறக்கப்பட்டிருந்தது. இருப்பினும் தற்போதைய நிலையில் பழைய அந்த நிலைமைகள் வசந்த விக்ரமதுங்கவின் ஆவியின் அச்சுறுத்தலாக அவரது மனக்கண்ணில் நிழலாடிக்கொண்டிருந்தது. இப்படியானதொரு ஊடகப்பின்னணி அனுபவங் காரணமாக வருகின்ற தேர்தலுக்கான ஊடகப்பிரச்சார இயக்கச் செயற்பாடுகளுக்கான பொறுப்பினைத் தன்னிடம் விடும்படி அவர் ரணில் விக்ரமசிங்கவைக் கேட்டிருந்தார். இதனை முற்றாகவே நிராகரித்த ரணில், பதிலுக்கு சுகத் சந்திரசேகர மற்றும் இர்வின் வீரக்கொடி இருவரையுமே அதற்கான பொறுப்பில் அமர்த்தியதாக அறியவருகிறது. முன்னர் இதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்றிருந்த கிருஷாந்த் கூரேயுங்கூட அவரது பொறுப்புகள் குறைக்கப்பட்ட நிலையில் ஓரங்கட்டப்பட்டதாகவே தெரிகிறது.

இதனை இத்துடன் நிறுத்திக்கொண்டு ஒன்றுபட்ட ஒரே எதிரணியாகப்பார்ப்போம். இந்த எதிரணியானது தனது தேர்தல் மூலோபாயத்தை உருவாக்கிக்கொள்வதற்காக பிரபல்யம்வாய்ந்த முன்னணி ஊடகவியலாளரான விக்டர் இவானுடன் சர்வதேச செய்தி தகவல் சேகரிப்பு சேவை நிறுவனமொன்றுக்கு பணிபுரியும் மற்றுமொரு சிரேஷ்ட பத்திரிகையாளரையும் அணுகி குறிப்பான 18 விடயங்களை உள்ளடக்கும் விதத்திலான ஊடக முலோபாயமொன்றினை உருவாக்கித் தரும்படி கேட்டிருந்தது. குமாரதுங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கு இவான்ஸ் அவர்களுடைய முன்னைய மூலோபாயம் வெற்றிகரமாக உதவியதென்ற மட்டில் அதற்கு பெரும் மதிப்பளிக்கப்பட்டு இரகசியமாகவும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இருவர் கொண்ட இந்த இவான் குழுவானது, இப்போது சிறிசேனாவை ஜனாதிபதியாக உருவாக்கும் விக்ரமசிங்க-குமாரதுங்க இணை முயற்சியின் சாதுர்யமிக்க தேடலுக்குரிய புதிய கோட்பாட்டாளர்களாக மீண்டும் உருவெடுத்துள்ளனர்.

பல்வேறு விதமான கட்சிபேதங்கள் கொண்ட எதிரணி உறுப்பினர்களை பரஸ்பர நன்மைகள் மற்றும்பொது இலட்சியத்தின் பொருட்டு ஒன்றுபட்ட பேரணியாக செயற்படுத்துவதென்பது மலையேறுவது போன்றதொரு முயற்சியே என்பதை UNP யின் மூத்த உறுப்பினர் ஒருவர் ஏற்றுக்கொண்டுள்ளார். மிகுந்த சிரமத்துடன் தமது செயற்பாடுகளில் இறங்கியிருக்கும் எதிரணியினர்களது பிந்திய மூலோபாயம் என்பது பொதுவாக திட்டங்களை பரகசியப்படுத்தாமல் 6 நருக்கமான முறையில் செயற்படுவதேயாகும். எதிர்பார்க்கப்பட்ட நவீன் திஸ்ஸ நாயக்கவின் கட்சித்தாவலுக்குப் பிற்பாடு மேற்கொண்டும் அப்படியான ஒன்று இடம்பெறவில்லை. கட்சித் தாவல்கள் ஒவ்வொன்றாக மெதுவாக மேற்கொள்ளப்படுமென டாக்டர் ராஜித சேனரட்ண ஏற்கனவே குறிப்பிட்டுக்கூறியிருந்தார். முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த கெட்டிக்காரர் ஒருவர் இது பற்றிக் குத்திக்காட்டும் விதத்தில் ''எதிரணிக்குத் தாவும் விடயம், பல் பிடுங்குவது போல் அதற்கு ஒவ்வொரு நாளும் கூடுதல் நோவை மேலும் மேலும் ஏற்படுத்துவதாய் இருக்கிறது என்று அந்த பல் வைத்தியர் கூறாதுவிட்டுவிட்டார்'' என்று சற்றுக் கேலியாகவே கூறியிருந்தார்.

முஸ்லிம் காங்கிரஸின் நிலைமை கூடுதல் கடினமாகிக்கொண்டே இருக்கிறது. முஸ்லிம் வாக்காளர்களை திருப்திப்படுத்துமளவிற்கு உண்மையானதும் அர்த்தமுள்ளதுமான பயனுள்ள திட்டங்களை செயற்படுத்துவதான வாக்குறுதிகளெதனையும் UPFA முஸ்லிம் காங்கிரஸுக்கு அளித்தாலன்றி மற்றும்படி கடைசி நேரத்தில் ரவூப் ஹக்கீம் ஒன்றுபட்ட எதிரணியுடன் சேர்ந்துகொள்வார் என்பதே பெருமளவில் சாத்தியமானதாயிருக்கும் என, மூத்த மூஸ்லிம் அரசியல்வாதியொருவருடன் தொடர்புபட்ட வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. எப்படியும், சிறுபான்மையினர் தமக்கு பெருமெண்ணிக்கையில் வாக்களிப் பர் என்ற நம்பிக்கை ஜனாதிபதி ராஜபக்சவுக்கு இல்லை.

ஜனாதிபதி பதவியை கூடுதல் நம்பகத்தன்மை வாய்ந்த ஒன்றாக ஆக்குவதுடன் பிரதம மந்திரிக்கே கூடுதல் அதிகாரம் அளிப்பது என்ற இலட்சியத்திற்காக செயற்படுவது என்ற சிறி சேனாவின் வேறுபட்ட கொள்கைப்பிடிப்பையே UNP வாக்காளர்கள் விருப்பத்துடன் நோக்குகின்றனர் என்ற உண்மையே எதிரணிக் கூட்டினருக்கு ஆறுதலளிப்பதாக இருக்கிறதென அக் கட்சியின் தலைவருக்கு நெருக்கமான ஒருவர் வெளிப்படுத்துகிறார். போர் நிலைமைகள் மற்றும் அதன் பெறுபேற்றிலுமிருந்தே தனக்கான அனுகூலத்தினைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாகத் தோன்றும் சரத் பொன்செகா அதே நேரத்தில் நாட்டுத் தலைமைத்துவத்திற்கு ஏற்புடையதாக அல்லாத விதத்தில் தனது தனிப்பட்டவிதமான வார்த்தைப் பிரயோகங்கள் மூலம் தனக்கு இருக்கும் பெயரைக்கூட கெடுத்துக்கொள்கிறார் என்றும் அவர்களே சுட்டிக்காட்டுகின்றனர்.

இதற்கு எடுத்துக்காட்டாக ராஜபக்ச குடும்பத்திற்கெதிராக அவர் பயன்படுத்தும் வார்த்தைப் பிரயோகங்களை கூறலாம். ஒன்றுபட்ட ஒரே சக்தி என்ற தோழமை உணர்வுடன் UNP இணைந்த விதமாகவே செயற்படும் என்ற செய்தியை வாக்காளர்களுக்கு சரியான முறையில் அளிப்பதே எதிரணியினருக்கு பாரிய பணியாக இருக்கும் என்றே கூற வேண்டும். இவ்விதமான ஒன்றை அவர்கள் இதுவரை வெற்றிகரமாக செய்ததில்லை என்பதுடன் UNP மீது ரணில் விக்ரமசிங்க செலுத்தி வந்த அதிகாரத்துவ ரீதியான தலைமைத்துவப் போக்கு மேற்படியான ஒரு இணைந்த செயற்பாட்டை மேலும் கடினமான தொன்றாகவே செய்யும். இன்னமும் கிளம்ப இருக்கும் விடயங்கள் பற்றி ஏற்கனவே வெளிப்பட்டிருந்த அறிகுறிகளின்படி, அம்மையார் ஜனாதிபதி பதவியில் கடைசியாக இருந்தபோது நிறைவேற்று அதிகார முறைமையில் மாற்றங்கள் கொண்டுவரவேண்டும் என்ற தனது முயற்சிக்கு ஆதரவு தரும்படி ரணிலிடம் தான் இரந்து கேட்காதது ஒன்றுதான் குறையாகும் என CBK உரிமை பாராட்டிக் கூறிய கூற்றினை இப்போது ரணில் மறுக்கவேண்டியவராக இருக்கிறார்.

எதிரணியினர் ஒன்று சேர்ந்து ஒரேயணியாக இணைந்து செயற்படாவிடின் கடந்த அண்மைக்காலத்தில் செய்த மற்றும் பெற்றுக் கொண்ட நன்மைகள் அனைத்து விழலாவது திண்ணம். ஒரு சில மாகாணசபைகளில் இருக்கும் அதிகார சமநிலையை மாற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளுங்கூட இப்போது பயன்படுத்தப்படும் மற்றுமோர் சதித்திட்டமாகும். இருப்பினும் ஜனாதிபதிக்கு நெருக்கமான உதவியாளர் ஒருவர், ''இது ஜனாதிபதித் தேர்தல் ஒன்றாகவே இருப்பதுடன் எதிரணியினரும் கட்சித் தாவல்கள் பற்றிய பலவிதமான எண்ணங்களில் உள்ளனர். ஆனாலும் இது அழுத்தந்திருத்தமான சாதனைப் பட்டியல்கள் கொண்ட ஒரு ஜனாதிபதிக்கும் பெரிதாக எடுத்துக்காட்டுவதற்கு எதனையும் கொண்டிராத மற்றுமொரு அபேட்சகருக்கும் இடையிலான போட்டியொன்றேயாகும்'' என்றே கூறியிருந்தார. உண்மையில் இதுபோன்ற மிகமிக எளிதான ஒரு விடயமே இதுவாகும்.

(முற்றும்)

**தமிழில்-யோகர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை பெண்ணின் கோரிக்கையை பரிசீலிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு

இலங்கை அரசாங்கத்திடம் இருந்து வந்துள்ள அழைப்புக்கு இணங்கி தாம் இலங்கையில் சென்று குடியேற விரும்புவதாக இலங்கைப் பெண்ணொருவர் விடுத்துள்ள கோரிக்கையை மீளவும் பரிசீலிக்குமாறு சென்னை மேல் நீதிமன்றம், தமிழக அரசாங்கத் துக்கு உத்தரவிட்டுள்ளது.

பரிசீலனை இரண்டு வாரத்துக்குள் இடம்பெற வேண்டும் என்று தமிழக அரசாங்கத்திற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது கணவரை விடுவித்து தாமும் அவரும் இலங்கையில் சென்றுகுடியேற அனுமதிக்க வேணடும் என்று கோரி இலங்கைப் பெண்ணான பிரசாந்தி என்பவர் நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் 15ஆம் திகதியன்று இதுதொடர்பான மனுவை அவர் தாக்கல் செய்தார். அதில், இலங்கையில் போர் இடம்பெற்ற காலப் பகுதியில் தமது கணவர் தப்பி வந்து தமிழகத்தில் குடியேறியதாக மனுதார பெண் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் தமக்கு திருமணமாகி இரண்டுமாதங்களே சென்ற நிலையில் தமது கணவர் விடுதலைப்புலி என்ற சந்தேகத்தின் பேரில் 2012ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கைது செய்யப்பட்டு திருச்சி சிறையில் அடைக்கப்பட்டார். இதேவேளை, இலங்கை அர சாங்கத்திடம் இருந்து வந்துள்ள அழையபுக்கு இணங்கி தாம்இலங்கையில்சென்று குடியேற விரும புவதாக மனுதாரர் கோரியுள்ளார். (இ-5)




# ஜெயலலிதாவின் பிணையை மேலும் நீடித்தது நீதிமன்றம்

**இந்தியாவில் நடப்பாண்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் (அம்மா) செல்வி ஜெயலலிதா ஜெயராம் தொடர்பான சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு வழங்கப்பட்ட நான்கு பேரின் பிணைக்காலம் மேலும் நான்கு மாதம் நீடிக்கப்பட்டுள்ளது.**

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகிய நால்வருக்கும் மேலும் 4 மாத காலம பிணை நீட்டித்து உச்ச நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவுக்கு 4 ஆண்டு சிறை தண்டனை மற்றும் ரூ.100 கோடி அபராதம் விதித்து பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் கடந்த செப்டெம்பர் 27ஆம் திகதி தீர்ப்பளித்தது. ஜெயலலிதாவின் பிணை மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஹெச்.எல்.தத்து தலைமையிலான அமர்வு கடந்த ஒக்டோபர் 17ஆம் திகதி பிணை வழங்கியது. மேலும் டிசெம்பர் 17ஆம் திகதிக்குள் சொத்துக் குவிப்பு வழக்கின் மேல் முறையீடுக்கான அனைத்து ஆவணங்களையும் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும. மேல் முறையீடு விசாரணையை 3 மாதங்களுக்குள் முடிக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனையடுத்து, கடந்த 8ஆம் திகதி ஜெய லலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் மேல் முறையீடு தொடர்பான சுமார் 2.15 இலட்சம் பக்கங்கள் கொண்ட ஆவணங்கள் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.



இந்நிலையில், ஜெயலலிதாவின் வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஹெச்.எல். தத்து தலைமையிலான அமர்வு இந்த வழக்கை விசாரித்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள் சொத்துக் குவிப்பு வழக்கில், தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உள்ளிட்ட நால்வருக்கும் மேலும் 4 மாத காலம் பிணை நீட்டிக்கப்படு கிறது.

ஜெயலலிதாவின் மேல்முறையீட்டு மனுவை விசாரிக்க கர்நாடக உயர் நீதிமன்றம் சிறப்பு அமர்வு அமைக்க வேண்டும். மேல்முறையீட்டு மனு விசாரணையை மூன்று மாதங் களுக்குள் முடிக்க வேண்டும். வழக்கு விசாரணை தினசரி மேற்கொள்ளப்பட வேண்டும்"என உத்தர விட்டனர் என்பது குறிப்பிடத் தக்கது. (இ-5)

## வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது ஜி.எஸ்.எல்.வி.மார்க்-3 ரொக்கெட்

ஜிஎஸ்எல்வி மார்க் - 3 ரொக்கெட், ஸ்ரீஹரிகோட்டாவில இருந்து நேற்றுக் காலை 9.30 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

இஸ்ரோவின் விண்வெளி ஆராய்ச்சிக்கு மனிதனை விண்ணுக்கு அனுப்பும் திட்டத்தின் அடுத்த மைல் கல்லாக கருதப்படும் இந்த முயற்சி வெற்றி பெற்றது. இதில் பெருமிதம் அடைகிறேன். சாதனை வெற்றியை நிகழ்த்த உதவிய அனைவருக்கு என் மனமாரந்த நன்றி. திட்டமிட்டபடி மாதிரி விண்கலம் வங்கக்கடலில் இறக்கப்பட்டது என இஸ்ரோ தலைவர் கே.ராதாகிருஷ்ணன் கூறினார்.

**மாதிரி விண்கலம் திட்டமிட்ட படி கடலில் விழுந்தது.**

விண்ணில் ஏவப்பட்ட ரொக்கெட் சுமார் 126 கி.மீ தூரம் வரை சென்ற பிறகு, மனிதன் பயணிப்பதற்கான மாதிரி விண்கலம மட்டும் சுமார் 19 ஆவது நிமிடத்தில் திட்டமிட்ட படி அநதமான் அருகே கடலில் விழுந்தது.

அதை கொண்டுவர அப்பகுதியில் கடற்படையும், விமானப்படையும் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன. கடலில் இருந்து மீட்கப்படும் விண்கலம் ஆய்வுக்கு உட்படுத்த ப்படும் என இஸ்ரோ தெரிவித்து ள்ளது.



**விண்வெளி ஆராய்ச்சியில் மைல்கல்:** இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் (இஸ்ரோ) விண்வெளி ஆராய்ச்சிக்காக மனிதனை ரொக்கெட் மூலம் விண்ணுக்கு அனுப்ப பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒருபகுதியாக இஸ்ரோ வரலாற்றில் முதல் முறையாக 630 தொன் எடை கொண்ட ரொக்கெட்டை உருவாக்கியுள்ளது. இந்த ரொக்கெட், 3ஆயிரத்து 735 கிலோ எடை கொண்ட, விண்வெளி ஆராய்ச்சிக்கு மனிதன் பயணிக்கும் மாதிரி விண்கலத்தை சுமந்து செல்லவிருக்கிறது. இது மனிதன் விண் ணுக்குச் சென்று மீண்டும் பூமியை வந்தடைவதற்கான பரி சோதனையே.

இநத ரொக்கெட், ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து நேற்றுக் காலை 9.30 மணிக்கு விண்ணில் ஏவப்பட்டது.

முன்னதாக ரொக்கெட்டின் அனைத்து பாகங்களும், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள பாகங்களை பொருத்தும் மையத்தில் பொருத்தி முழுமையான ரொக்கெட் உருவாக் கப்பட்டது.

அப்போது மனிதன் பயணிக்கும் மாதிரி விண்கலமும் அதில் பொருத்தப்பட்டது. பின்னர் முழுமையடைந்த ரொக்கெட், ரொக்கெட் ஏவுதளத்துக்கு பாதுகாப்பாக கொண்டு செல்லப்பட்டது.

இதைத தொடர்ந்து 24 மணி நேர கவுண்ட்டவுன் நேற்று காலை 9.30 மணிகக தொடங்கியது. அதையடுதது, ரொக்கெட்டில் திரவ எரிபொருள நிரப்பும பணி மாலை 6 மணிக்கு நிறைவடைந்தது [illegible] 9.30 மணிக்கு ஏவப்பட்டது. (இ-5)




## இந்திய மக்கள் அனைவரும் பகவத்கீதை படிக்கவேண்டும்

ஐதராபாத்தில் ஆன்மீக சமூக அமைப்பான பகவத்கீதா பவுண்டேசன சார்பில் பகவத்கீதை தொடர்பான குறும்படம் வெளியிடப்பட்டது.

இதில் பிரபல பாடகரும் எழுத்தாளருமான காங்காதர சாஸ்திரி கீதையின் 700 சுலோகங்களை பாடினார்.

ஆந்திரா தெலுங்கானா மாநில ஆளுநர் நரசிம்மன் விழாவில் கலந்து கொண்டு குறும்படத்தை வெளியிட்டார். அதனை பாடகி அனுராதா பெற்றுக்கொண்டார்.

விழாவில் ஆளுநர் நரசிம்மன் உரையாற்றும் போது ,அர்ஜுனனுக்கு ஸ்ரீகிருஷ்ணர் போதித்த அறிவுரை களை காவியமாக இதில் தீட்டி உள்ளனர். இது ஒரு மதம் தொடர்பான விடயமல்ல. சந்தோஷமான வாழ்க்கைக்குத்தேவையான அம்சங்கள் இதில் உள்ளது.

இந்தியர்கள் அனைவரும் பகவத கீதை படிக்க வேண்டும். தினமும் ஒரு புதிய பாடத்தை கற்க வேண்டும்.

இதை படிப்பதன் மூலம் மனித வாழ்க்கையில் ஏற்படும் கவலைகள், குழப்பங்களுக்கு நல்ல தீர்வு ஏற்படும என அவர் மேலும் தெரிவித்தார்.

விழாவில் பங்கேற்ற சாரதா சீடம் மடாதிபதி சொரூபனந்தா சுவாமிகள் பேசும் போது, பகவத் கீதை அற்புத வாழ்க்கைக்கான வழி முறையை தெளிவுபடுத்தும் அற்புத காவியம் என தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இ.போ.சபை பேருந்துகளின் சேவை நேற்று இடைநிறுத்தப்பட்டமையால் பயணிகள் அவதி

(கிளிநொச்சி)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார கூட்டத்திற்கு பொதுமக்களை ஏற்றுவதற்காக கிளிநொச்சி டிப்போவிற்குச் சொந்தமான இ.போ.ச பேருந்துகள் சேவையில் ஈடுபட்டதன் காரணத்தால் சகல கிராமங்களுக்குமான உள்ளூர் சேவைகள் இடைநிறுத்தப்பட்ட நிலையில் நாளாந்தம் பயணத்தைத் தொடருவோர் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்ததாக தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியின் தேர்தல் பிரசார கூட்டம் நேற்று பிற்பகல் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டு வரும் சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு மக்களை அழைத்து வருவதற்காக கிளிநொச்சி டிப்போவிலிருந்து கிராமங்கள், பிற மாவட்டங்களுக்குச் செல்லும் இ.போ.சபைக்குச் சொந்தமான 28 பேருந் துகள் தமது அன்றாட சேவையை இடை நிறுத்தி இப் பணியில் ஈடுபடுவதற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

இதனால் கிராமங்களில் இருந்து தமது தேவையின் நிமிர்த்தம் பயணிக்கும் பொது மக்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் நீண்ட நேரம் கால்கடுக்க பேருந்து தரிப்பிடங்களில் காத்து நின்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

சிலர் குழந்தைகளுடன் நீண்ட நேரம் வெயிலில் பேருந்தின் வரவிற்காக காத்திருந்தனர்.

அத்துடன் அரச உத்தியோகத்தர் அலுவலகங்களுக்கு நேரத்திற்கு சமுகமளிக்க முடியாத நிலை காணப்பட்டது.

கிராமங்களுக்கான பேருந்துகளின் சேவை நேற்றைய தினம் மட்டும் இடைநிறுத்தப்பட்டமையால் தமது வெளியூர் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது இருந்ததாக அம்மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (2-277)

# பொலிஸ் உத்தியோகத்தர் சிகிச்சை பலனின்றி மரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் வாகன விபத்தில் படுகாயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மொனராகல தலுக்கட்டிய செவனகல வைச் சேர்ந்த பண்டாரலாகே புண்ணியரத்தின (வயது-25) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 13 ஆம் திகதி மாலை பூநகரி பொலிஸ் நிலையத்திலிருந்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற வேளை விபத்தில் சிக்குண்டார்.

உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை யாழ்.போதனா வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (இ)






2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இதற்கான தேர்தல் பரப்புரைகள் நாடளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றன. அதன்பிரகாரம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதலாவது வடக்கிற்கான பரப்புரை கூட்டம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதற்கான முதலாவது தேர்தல் பரப்புரை கூட்டத்தை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளரா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுக்காலை முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தினார். இவ்விளையாட்டு மைதானத்திற்கு உலங்கு வானூர்தி மூலம் வருகைதந்த ஜனாதிபதியை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பொன்னாடை போர்த்தி வரவேற்பதைப் படங்களில் காணலாம்.

# தீம்தனனா...III பரத நடன நிகழ்வுகள்

யாழ். இந்தியத் துணைத்தூதரகமும் திருமறைக்கலாமன்றமும் இணைந்து நடத்தும் தீம்தனனா….III பரத நடன நிகழ்வுகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு மன்னார் நகரசபை மண்டபத்தில் யாழ். இந்திய துணைத்தூதரக பிரதி துணைத்தூதுவர் சு.தட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

யாழ். திருமறைக்கலாமன்றம், மன்னார் திருமறைக்கலாமன்றம், முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் ஆகியவற்றின் மாணவர்களினால் ஆற்றுகை செய்யப்படும் மாபெரும் நடன நிகழ்ச்சியாக இது அமையப் பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவண மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக வடமாகாண மீன்பிடி, போக்குவரத் து, வர்த்தக வாணிபம் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் மற்றும் மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.தேசப்பிரிய ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நடன நிகழ்வில் மேடையேற் றப்படும் நடனங்களாக வரவேற்பு நடனம், புஷ்பாஞ்சலி, தமிழர்களின் கிராமிய நடனம், கூத்து வழி நடனம் மற்றும் தில்லானா எனும் வரிசையில் ஒரு அங்கமாக ஆழிப் பேரலை அனர்த்தத்தின் பத்தாவது ஆண்டு நினைவைக் குறிக்கும் முகமாக யாழ்.திருமறைக்கலாமன்றத்தினால் வழங்கப்படும் "சுனாமி" எனும் தலைப்பில் ஓர் புத்தாக்க நடனம் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மீனவர்களின் வாழ்வியலையும், ஆழிப் பேரலையின் ஆக்ரோஷத்தையும், அதன் விளைவுகளையும் இசை மற்றும் நடனத்தினால் மாணவர்கள் அளிக்கை செய்யவுள்ளனர்.

யாழ். இந்தியத் துணைத்தூதரகமானது இந்திய அரசின் கலாசார அமைச்சின் அனுசரணையுடன் வடமாகாணத்தில் கடந்த மூன்று வருடங்களாக கலை நிகழ்வுகளை நடத்தி வருகின்றது.

உள்ளூர் நுண்கலை மாணவர்களுக்கும் மற்றும் கலைஞர்களுக்கும் களம் அமைத்துக் கொடுக்கும் நோக்கில், இவ்வருடமும் செப்டெம்பர் 2014 முதல் பெப்ரவரி 2015 வரையுள்ள காலப்பகுதியில் மூன்று கலை நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளது. பாரம்பரிய சாஸ்த்திரீய நடனம் மற்றும் இசையை வடமாகாணத்தில் பயிற்றுவிக்கும் நுண்கலை நிறுவனங் களூடாக இவ் வகையான கலை நிகழ்வு களை யாழ்.இந்தியத் துணைத்தூதரகம் ஒழுங்கு செய்துள்ளது. (2)

# கௌரவிப்பு நிகழ்வு

பூநகரி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சிறுவர், முதியோர், மாற்றுத் திறனாளிகள் தின விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பூநகரி மத்திய கல்லூரி மண்டபத்தில் பூநகரி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் உதவி மாவட்ட செயலர் ச.கிருஸ்ணேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலர் வே.தபேந்திரன், பூநகரி கோட்டக் கல்வி அலுவலர் சு.தரமரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கலை நிகழ்வுகளுடன் சிறுவர், முதியோர், மாற்றுத் திறனாளிகள் கௌரவிப்பும் நடைபெறவுள்ளது.

வரவேற்புரையை பூநகரி பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் சு.சுரேந்திரா நிகழ்த்தவுள்ளார். (2-254)

# சிங்களமொழி கற்பிப்பதற்கு தமிழ் ஆசிரியர்களுக்கு பயிற்சி

(கிளிநொச்சி)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் வடமாகாண மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் சிங்களமொழி கற்பிப்பதற்கான தமிழ் ஆசிரியர்களுக்கான ஐந்து நாட்கள் கொண்ட வதிவிட பயிற்சியொன்று அண்மையில் கிளிநொச்சியில் அமைந்துள்ள சோலைவன விருந்தகத்தில் நடைபெற்றது.

வடமாகாண பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 35 ஆசிரி யர்கள் இதில் பங்கேற்றனர்.

இப் பயிற்சியின் முடிவில் மொழி வளவாளர்களாக 20 ஆசிரியர்கள் சித்தியடைந்தனர்.

இப் பயிற்சியின் நிறைவில் பங்கேற்ற ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கப் பட்டன.

இவர்கள் எதிர்காலத்தில் அரச உத்தி யோகத்தர்கள், மொழிச்சங்க உறுப்பினர்கள் ஆகியோருக்கு சிங்கள மொழியினை போதிக்கவுள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் மாவட்ட இணைப்பாளர் அறிவித்துள்ளார். (2-277)

# 482 வணிக, கைத்தொழில் நிறுவனங்கள் இயங்குகின்றன

## கிளிநொச்சி மாவட்ட புள்ளிவிபரத் திணைக்களம் தகவல்

கிளிநொச்சி மாவட்டத்தில் 482 வணிக, கைத்தொழில் மற்றும் சேவை நிறுவனங்கள் இருப்பதாக மாவட்ட செயலகத்திலுள்ள குடித் தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொருளாதார தொகை மதிப்பீட்டு தேவைக்காக நாடெங்கும் மாவட்ட ரீதியில் வணிக நிறுவனங்களின் கணக்கெடுப்பு முன்னெடுக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட செயலாளர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரனின் வழிகாட்டலின் அடிப்படையில் இத் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

நாட்டின் வணிக, கைத்தொழில் சேவை துறைகள் எவ்விதம் செயற்படுகின்றன உடைய தாகவுள்ளது என் பதை அறியும் நோக்குடன் காலத்துக்கு காலம் இந்த தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் வன்னி யுத்தத்துக்கு பின்னர் இந்தளவு வணிக நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றமை முன்னேற்றகரமான நடவடிக்கை என புள்ளி விபரத் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சில் உரமின்றி நேர்மைத் திறனுமின்றி
வஞ்சனை சொல்வாரடி–கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி. – பாரதி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ்க் கட்சிகள் கவனிக்காத வேட்பாளர் நியமனங்கள்

தனி மனித ஆளுமைகள் இந்த உலகில் சாதித்தவை ஏராளம். இதன் காரணமாகவே உலக வரலாற்றில் சில தனி மனிதர்கள் மகா மேதைகளாக, தத்துவ ஞானிகளாக, விந்தை மிகு மனிதர்களாகப் போற்றப்படுகின்றனர்.

அமெரிக்க நாட்டின் ஆபிரகாம்லிங்கன், இந்திய தேசபிதா மகாத்மா காந்தி, அன்னை திரேசா, தத்துவஞானி சோக்கிரட்டீஸ், சுவாமி விவேகானந்தர் போன்றவர்கள் உதாரணத்திற்கு முன்னிறுத்தப்படக் கூடியவர்கள்.

எனவே தனித மனித ஆளுமைகள் மிகவும் முக்கியமானவை என்பதை இதில் இருந்து உணர முடியும். எனினும் எங்கள் அரசியலில் தனி மனித ஆளுமைகளுக்கு நிறைந்த பஞ்சம் இருப்பதை உணரமுடிகிறது.

சேர்.பொன் இராமநாதன், சேர்.பொன் அருணாசலம், தந்தை செல்வநாயகம், தளபதி அமிர்தலிங்கம், சட்டமேதை ஜீ.ஜீ.பொன்னம்பலம், அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம், இரும்பு மனிதன் நாகநாதன் போன்ற தமிழ் அரசியல் தலைவர்கள் எங்கள் இனத்தின் பெருமைக்கும் கௌரவத்திற்கும் காரணமாக இருந்தனர். இவர்களை சிங்களத் தலைவர்களும் மிக உயர்ந்த அரசியல் தலைவர்களாகக் கருதினர். உரிய மதிப்பையும் அளித்தனர். இவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றுகின்ற உரைகளுக்கு நிறைந்த பெறுமதி கொடுக்கப்பட்டது.

இவர்களைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உலகத் தமிழர்களின் வீரத்தலைமகனாக கி.ஆ.பெ.விசுவநாதம் போன்ற தமிழ் அறிஞர்களால் போற்றப்பட்டார். அந்தப் போற்றுகை இன்று உலகம் முழுமையிலும் நிதர்சனமாகியுள்ளது.

எனினும் எங்கள் இனத்தில் கெடுகாலமாக தற்போது தமிழ் அரசியல் தலைமையில் ஒரு பெரும் இடைவெளி ஏற்பட்டுப்போயுள்ளது.

ஆம், காலத்திற்குக் காலம் மிகச் சிறந்த தமிழ் அரசியல் தலைவர்கள் நேர்மைத்திறத்துடன் இருந்து நிர்வாகம் நடத்திய போதிலும் தற்போது நல்ல–நேர்மையான–உலகம் போற்றக்கூடிய ஆற்றல் மிக்க தமிழ்த் தலைவர்களுக்கு எமது அரசியலில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது.

இதன் காரணமாக எவரும் அரசியலில் நுழையலாம் என்ற நிலைமை உருவாகிற்று.

எனக்குத் தெரிந்தவரை; எனக்காக வாக்குக் கேட்கக் கூடியவரை; எனக்காகப் பிரசாரம் செய்யக் கூடியவரை; எனது குடும்ப உறுப்பினரை அரசியலில் ஈடுபடுத்துவதே எனது நலனுக்கு நல்லது என்று நினைத்த போது– அதனை அமுலாக்கிய போது புத்திஜீவிகள், தமிழ் பற்றுள்ளவர்கள், விசுவாசமானவர்கள் ஓரம் கட்டப்பட்டனர்.

இதன் காரணமாக தமிழ் அரசியல் பிரதிநிதிகளாக எவரும் வரலாம் என்றாயிற்று. இதன் விளைவு கூட்டங்களில் ஒப்பாரி, சண்டை சச்சரவு, குழப்பம், குத்துவெட்டு என்ற கேவலங்கள் அடிக்கடி அரங்கேறுவது தவிர்க்க முடியாததாகின்றது.

தமிழ் அரசியல் தலைமையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் பொருட்டு தமிழ் மக்கள், உலகம் மதிக்கக் கூடிய ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை வடக்கின் முதல்வராக்கி தமிழ் அரசியல் தலைமையை பலமாக்கப் பாடுபட்டபோது, முதலமைச்சருக்கு கை ஓங்கிக் காட்டும் காட்டுமிராண்டித்தனங்கள்; அவரை அவமதிக்கும் உரைகள், ஒரு கௌரவமான மனிதனால் எதுவும் செய்ய முடியாது என்ற நிலையை தோற்றுவித்து விடுகிறது.

எனவே அடுத்த தேர்தலில் காட்டுமிராண்டித் தனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க தமிழ் மக்கள் தயங்கினால் எங்கள் எதிர்கால நிலைமை படுமோசமாகி விடும்.

# தலிபான் தீவிரவாதிகள் மீது பாக்.விமானங்கள் தாக்குதல்

## 57 பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பெஷாவர் நகரில் இராணுவ பாடசாலைக்குள் புகுந்து தெக்ரிக் இ தலிபான் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 132 பாடசாலை மாணவர்கள் உட்பட 141 பேர் பலியானார்கள். இந்த சம்பவத்தை தொடர்ந்து பாகிஸ்தான் அரசு கடும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இது குறித்து கூறிய பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் பாகிஸ்தானில் கடைசி தீவிரவாதியை வீழ்த்துகிற வரையில், தீவிரவாதிகளுக்கு எதிரான போர் தொடரும். தீவிரவாதிகளுக்கு எதிரான போர், நமது போராகும். இதற்கான வரைவுத்திட்டம் தேவைப்படுகிறது.

இதற்காக உள்துறை அமைச்சர் சவுத்ரி நிசார் தலைமையில் பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து கட்சிகளும் அங்கம் வகிக்கிற ஒரு குழுவை அமைக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இந்த குழு, ஒரு செயற்றிட்டத்தை தேசிய தலைமையிடம் (பிரதமரிடம்) ஒரு வாரத்தில் அளிக்கும் எனக் கூறியிருந்தார்.

இந்த நிலையில் நேற்று தீவிரவாதிகள் மீது நடைபெற்ற தாக்குதலில் 57 தீவிரவாதிகள் கொல்லபட்டு உள்ளனர்.

கைபர் பழங்குடியினர் பகுதியில் டைரா பள்ளத்தாக்கில் தலிபான்களின் மறைவிடங்கள் மீது பாகிஸ்தான் இராணுவம் 20 வான்வழி தாக்குதல் நடத்தியது. இதில் 57 தீவிரவாதிகள் பலியானார்கள். இத்தகவலை பாகிஸ்தான் இராணுவ செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (இ-5)

# சிரியாவில் ஒரே இடத்தில் 230 பேரின் சடலங்கள்

## ஐ.எஸ்.ஐ.எஸ்.அராஜகம் அம்பலம்

சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தினரால் கொல்லப்பட்ட 230 பேரின் உடல் ஒரே இடத்தில் புதைக்கப்பட்டிருப்பதை அங்குள்ள கண்காணிப்புக்குழு கண்டறிந்துள்ளது.

ஈராக் மற்றும் சிரியாவில் ஆக்கிரமிப்பு செய்துவரும் ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தினர் சன்னி பிரிவினரின் தலைமையிலான தனி இஸ்லாமிய நாடு அமைக்கும் நோக்கத்தோடு ஷியா பிரிவு மக்களை நோக்கி தாக்குதல் நடத்திவருகின்றனர்.

இந்த நிலையில் சிரியாவில் போர் சூழல் குறித்து கண்காணித்து வரும் ஐ.நா. மனித உரிமை ஆணையம் சிரியாவின் கிழக்கே உள்ள அல்-காஷ்யாவில் சுமார் 230 பேரின் உடல்கள் குவியலாக புதைக்கப்பட்டிருப்பதை அங்கு உள்ள பழங்குடியின மக்கள் கண்டுபிடித்துள்ளதாக அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

மேலும், ஷியா பிரிவைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பழங்குடியின மக்கள் மாயமாகி உள்ளதாகவும் அதன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இராக்கின் வடக்கே ஸ்வாத் மற்றும் கிழக்கு சிரியா பகுதிகள் பலவற்றை ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தீவிரவாதிகளை எதிர்த்து போரிட மறுத்த 54 இராணுவ வீரர்களுக்கு மரணதண்டனை

(லண்டன்)

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போஹோஹராம் தீவிரவாதிகள் அரசுக்கு எதிராக போராடி வருகிறார்கள். அவர்கள் பல்வேறு இடங்களை கைப்பற்றி வைத்துள்ளனர். அடிக்கடி தாக்குதல் நடத்தி மக்களை கொன்று குவித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் போஹோஹராம் தீவிரவாதிகள் பிடித்து வைத்திருந்த 3 நகரங்களை மீட்பதற்காக இராணுவ படை அனுப்பப்பட்டது. அப்போது இராணுவ வீரர்கள் சிலர் எங்களிடம் தீவிரவாதிகளை எதிர்த்து போரிட போதிய ஆயுதங்கள் இல்லை என்று கூறி போருக்கு செல்ல மறுத்தனர். அவர்களை அரசு கைது செய்தது. இது தொடர்பான விசாரணை நீதிமன்றில் நடந்து வந்தது.

அதையடுத்து போரிட மறுத்த 54 இராணுவ வீரர்களுக்கு நீதிமன்று மரண தண்டனை விதித்து தீர்ப்பு கூறியது. இதில் 5 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த செப்டெம்பர் மாதம் இராணுவ வீரர்கள் சிலர் இராணுவ அதிகாரி ஒருவரை கொலை செய்ய முயற்சித்தனர். அவர்களில் 12 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளின் படத்தை வெளியிட்டது தலிபான்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பாடசாலைக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி 132 மாணவர்கள் உட்பட 141 பேரைக் கொன்ற தீவிரவாதிகளின் படத்தை தலிபான்கள் வெளியிட்டுள்ளனர்.

தங்கள் அமைப்பின் மீது இராணுவத்தினர் நடத்திய தாக்குதல்களுக்குப் பழிவாங்கவே இத்தாக்குதலை நடத்தியதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள புகைப்படங்களில், ஒரு புகைப்படத்தில் 6 தீவிரவாதிகள் ஆயுதங்களை ஏந்தியபடி அமர்ந்துள்ளனர். மற்றொரு படத்தில், தீவிரவாதிகள் உள்ளூர் தீவிரவாதத் தலைவருடன் அமர்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பாகிஸ்தான் தலிபான் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் முகமது கொரசானி இராணுவ நிறுவனங்களிலிருந்து அனைத்துப் பொதுமக்களும் விலகி விட வேண்டும்.

அங்கு மேலும் இது போன்று பல தாக்குதல்களை நடத்து வோம் என எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ-5)

## தாக்குதலில் சிக்கி 32பேர் உயிரிழப்பு

நைஜீரியாவில் போகோஹராம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 32 பேர் பலியாகினர். மேலும் பெண்கள், குழந்தைகள் உட்பட பலர் கடத்தப்பட்டதாக தெரியவந்துள்ளது.

நைஜீரியாவின் மேற்கு பகுதியில் உள்ள கும்சுரி கிராமத்தில் போகோஹராம் தீவிரவாதிகள் நேற்று திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் 32 பேர் பலியாகினர்.

மேலும் தாக்குதல் நடத்தி அங்கிருந்த பெண்கள் மற்றும் குழந்தைகள் என நூற்றுக்கணக்கானோரை கடத்திச் சென்றதாக அந்த கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (இ-5)

# அமெரிக்காவின் முடிவுக்கு கியூபா ஜனாதிபதி வரவேற்பு

கியூபா உடனான உறவை புதுப்பித்துக் கொள்ளும் அமெரிக்காவின் முடிவுக்கு, கியூபா ஜனாதிபதி ரவுல் காஸ்ட்ரோ வரவேற்பு தெரிவித்துள்ளார்.

கடந்த 50 ஆண்டுகளாக கியூபா மீது விதிக்கப்பட்டுள்ள வர்த்தகத் தடையை நீக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ள ரவுல் காஸ்ட்ரோ, வர்த்தக தடையினால் கியூபாவிற்கு பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

எனினும் கியூபா மீதான வர்த்தக தடையை நீக்கும் அதிகாரம் அமெரிக்க நாடாளுமன்றத்திடமே உள்ளது. கியூபாவில் கடந்த 1960ஆம் ஆண்டு ஏற்பட்ட புரட்சியை அடுத்து காஸ்ட்ரோ தலைமையிலான கம்யூனிஸ ஆட்சி மலர்ந்தது.

இதனை தொடர்ந்து, கியூபா உடனான உறவை முறித்துக் கொண்ட அமெரிக்கா அந்த நாட்டின் மீது வர்த்தக தடை விதித்தது. (இ-5)

**அமைதியின் சொற்கள்**

வாழ்க்கை என்பது ஒருமுறை ஏற்ப வெற்றி பெறு. ஒவ்வொரு மூச்சும் ஒருமுறை நிகழும் நிகழ்வே.

*(பிரேம் ராவத்)*

**இஸ்லாம் ஆன்மீக சிந்தனை**

**வெற்றி பெற வழி**

★ பிறருடைய பொருளை பொய் சாட்சியம் கூறி அபகரிப்பவனை சொர்க்கத்தின் வாடையைக் கூட நுகரமுடியாத படி அல்லாஹ் தடுத்து விடுவான்.

★ மனிதர்களைப் பார்த்து வெட்கப்படுவதைவிட, அல்லாஹ்வுக்கு வெட்கப்படுவதே உயர்வானதாகும்.

★ நீங்கள் எவர்களுடன் சேர்ந்து வாழுகின்றீர்களோ; அவர்களுடனே நாளை மறுமையிலும் சேர்ந்து இருப்பீர்கள்.

★ உன் நாவை அடக்கி வைத்துக் கொள். உன் வீட்டை, விருந்தினர் வரும் தலமாக ஆக்கிக் கொள். நீ செய்த பாவங்களை எண்ணி எண்ணி கண்ணீரைச் சிந்து. உன் வாழ்வில் வெற்றி பெறுவாய்.


★ இவ்வுலக வாழ்வில் மதி மயங்காமல்வாழு. அல்லாஹ்உன்னை நேசிப்பான்.

★ எவன் பேசும்போது கோபம் கொண்டானோ, அவன் நம்மைச் சேர்ந்தவன் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் ஆஸி 221 ஓட்டங்கள் குவிப்பு






இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாள் முடிவில் அவுஸ்திரேலியா 4 விக்கெட் இழப்பிற்கு 221 ஓட்டங்களை பெற்றுள்ளது.

இந்திய அவுஸ்திரேலிய அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் நடைபெற்று வருகிறது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியா துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. இப்போட்டிக்கான இந்திய அணியில் சகா, க்ரன் சர்மா, சமி ஆகியோருக்கு பதிலாக டோனி, அஸ்வின் மற்றும் உமேஷ் யாதவ் ஆகியோர் சேர்க்கப்பட்டனர்.

முதல் நாளான நேற்று முன்தினம் ஆட்ட நேர இறுதியில் இந்திய அணி 4 விக்கெட் இழப்புக்கு 311 ஓட்டங்களை எடுத்திருந்தது. நேற்று மீண்டும் ஆட்டம் தொடங்கிய போது ஸ்கோருடன் மேலும் 97 ஓட்டங்கள் சேர்த்து 408 ஓட்டங்களுக்கு இந்திய அணி ஆட்டமிழந்தது.

இதனையடுத்து முதல் இனிங்சை தொடங்கியது அவுஸ்திரேலிய அணி. தொடக்க ஆட்டக்காரர்களாக ரோஜர்சும், வார்னரும் களமிறங்கினர். அதிரடியாக ஆடி ஓட்ட குவிப்பில் ஈடுபட்ட வார்னரை 29 ஓட்டங்களில் வெளியேற்றினார் உமேஷ் யாதவ். அதன் பின்னர் வாட்சன் ரோஜர்சுடன் ஜோடி சேர்ந்தார். அவரும் அதிரடி ஆட்டத்தையே கடைப்பிடித்தார். தன் பங்குக்கு 25 ஓட்டங்கள் குவித்து வாட்சன்நடையை கட்டினார்.

இதனால் கப்டன் ஸ்மித் களமிறங்கி ரோஜர்சுடன் இணைந்தார். ஸ்மித் களமிறங்கிய சிறிது நேரத்தில் அரை சதம் கடந்த ரோஜர்ஸ் 55 ஓட்டங்களில் அவுட்டானார். பின்னர் ஷான் மார்ஷ் களமிறங்கினார். அவரும் ஸ்மித்தும் இணைந்து பொறுப்புடன் விளையாடி ஓட்ட எண்ணிக்கையை உயர்த்திக்கொண்டே வந்தனர். இந்த நிலையில் 32 ஓட்டங்கள் எடுத்திருந்த மார்ஷ் உமேஷ் யாதவ் வீசிய பந்தை அடித்து ஆட அது நேராக ஸ்லிப்பில் நின்றிருந்த அஷ்வின் தலைக்கு மேலே சென்றது.

நல்ல உயரம் கொண்ட அஸ்வின் அந்த பந்தை காற்றில் மேலே பாய்ந்தவாறு அற்புதமாக கேட்ச் பிடித்து மார்ஷை வெளியேற்றினார். அடுத்து மிட்சல் மார்ஷ் கப்டன் ஸ்மித்துடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் பொறுமையாக ஆடி வந்த நிலையில் போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது. இதையடுத்து இரண்டாவது நாள் ஆட்டம் முடிவடைந்ததாக அம்பயர்கள் அறிவித்தனர். அப்போது அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட் இழப்புக்கு 221 ஓட்டங்கள் எடுத்திருந்தது. கப்டன் ஸ்மித் 65 ஓட்டங்களுடனும், மிட்சல் மார்ஷ் 7 ஓட்டங்களுடனும களத்தில் உள்ளனர். போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

SPORTS
விளையாட்டுச் செய்திகள்

## ஐ.எஸ்.எல்.காற்பந்து இறுதிப் போட்டியில் கொல்கத்தா




ஐ.எஸ்.எல். காற்பந்து தொடரின் இறுதிப்போட்டிக்கு கொல்கத்தா அணி முன்னேறியது.


இந்தியன் சுப்பர் 'லீக்' (ஐ.எஸ்.எல்.) காற்பந்து போட்டியில் சென்னையின் எப்.சி., கோவா, அட்லெடிகோ கொல்கத்தா, கேரளா பிளாஸ்டர்ஸ் ஆகிய 4 அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெற்றன.

அரையிறுதியில் மோதும் அணிகள் உள்ளூர், வெளியூர் என இரண்டு முறை மோத வேண்டும். அதன்படி கடந்த 13 ஆம் திகதி கொச்சியில் நடந்த முதல் சுற்று அரையிறுதியில் சென்னைக்கு எதிராக கேரளா 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதையடுத்து சென்னையில் நடந்த 2ஆவது போட்டியில் சென்னை அணி 4 கோல்கள் அடிக்க வேண்டிய கட்டாயத்துடன் களமிறங்கியது. ஆனால், 3 கோல்கள் மட்டுமே அடித்ததால் கேரளா அணி வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

இதேபோல் மற்றொரு அரையிறுதி முதல் சுற்று ஆட்டத்தில் கோவா கொல்கத்தா அணிகள் மோதின. இந்த ஆட்டம் கோல் எதுவுமின்றி சமனிலை ஆனது. இதையடுத்து இரு அணிகளும் நேற்று கோவாவில் மீண்டும் மோதின. இப்போட்டியின் ஆட்ட நேரம் முடியும் வரையில் இரு அணிகளும் கோல்கள் எதுவும் அடிக்கவில்லை. கூடுதல் நேரத்திலும் இரு அணி வீரர்களின் கோல் முயற்சி பலன் அளிக்கவில்லை. இதையடுத்து பனால்டி ஷூட் அவுட் வாய்ப்பு கொடுக்கப்பட்டது. இதில், 4-2 என்ற கோல்கணக்கில் கொல்கத்தா அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

கொச்சியில் 20 ஆம் திகதி நடைபெற உள்ள இறுதிப் போட்டியில் கொல்கத்தா-கேரளா அணிகள் பலப்பரீட்சை நடத்த உள்ளன.(க)

## நியூசிலாந்து வெற்றி




பாகிஸ்தான்- நியூசிலாந்து அணிகள் மோதிய 4ஆவது ஒரு நாள் போட்டி அபுதாபியில் நேற்று முன்தினம் பகல்-இரவாக நடந்தது.

முதலில் விளையாடிய நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 299 ஓட்டங்கள் குவித்தது.

கப்டன் வில்லியம்சன் அபாரமாக விளையாடி சதம் அடித்தார். அவர் 105 பந்தில் 12 பவுண்டரியுடன் 123 ஓட்டங்களும், குப்தில் 58 ஓட்டங்களும் பிரவுன்லி 42 ஓட்டங்களும், எடுத்தனர். முகமது இர்பான் 2 விக்கெட்டும், சோகைல் தன்வீர், அப்ரிடி, அன்வர் அலி தலா 1 விக்கெட்டும் எடுத்தனர்.

பின்னர் விளையாடிய பாகிஸ்தான் அணி வெற்றி இலக்கை நோக்கி முன்னேறியது. ஆனால் கடைசியில் அந்த அணியால் முடியவில்லை. 50 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 292 ஓட்டங்களை எடுத்தது. இதனால் பாகிஸ்தான் 7 ஓட்டங்களில் தோற்றது.

முன்னாள் கப்டன் யூனிஸ் கானின் சதம் பலன் அளிக்காமல் போனது. அவர் 103 ஓட்டங்களும். (117 பந்து, 4 பவுண்டரி, 2 சிக்சர்). அப்ரிடி 25 பந்தில் 49 ஓட்டங்களும் (5 பவுண்டரி, 2 சிக்சர்) எடுத்தனர். வெட்டோரி 3 விக்கெட்டும், ஹென்றி மிலின், மெக்லன், ஆண்டர்சன் தலா 1 விக்கெட்டும் எடுத்தனர்.

இந்த வெற்றி மூலம் 5 போட்டி கொண்ட தொடரை நியூசிலாந்து 2-2 என்ற கணக்கில் சமன் செய் தது. இரு அணிகள் மோதும் கடைசி 5ஆவது மற்றும் கடைசி ஆட்டம் அபு தாபியில் இன்று நடைபெறவுள்ளது.

தலிபான் தீவிரவாதிகள் தாக்குதலில் பெஷாவரில் 132 பாடசாலை மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து போட்டியில் விளையாடும் மனநிலை பாகிஸ்தானுக்கு இல்லை என்று யூனிஸ்கான் தெரிவித்து இருந்தார். போட்டி தொடங்குவதற்கு முன்பு இரு அணி வீரர்களும் 2 நிமிடம் மட டும் மௌன அஞ்சலி செலுத்தினர். (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகிந்த வென்றாலும் உடனடியாக பதவியேற்கார்

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெற்றியீட்டினாலும் உடனடியாக அவர் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ள மாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வென்றால், மூன்றாவது பதவிக் காலத்துக்கான பதவியேற்பு சத்தியப்பிரமாணத்தை 2015ஆம் ஆண்டு நவம்பர் 19ஆம் திகதி செய்து கொள்வார்.

எதிர்க்குழுவினர் கூறுவது போல இரண்டாவது பதவிக்காலத்துக்கான 6 வருடங்கள் முடிந்த பின்னர அல்ல என அரசாங்கம் நேற்று முன்தினம் புதன்கிழமை கூறியது.

ஜனாதிபதி ராஜபக்ஷ வெற்றி பெற்றதும் பதவியேற்கக்கூடாது. அவர், ஐந்து வருடங்களுக்கு முன்னர் தனது இரண்டாவது பதவிக் காலத்துக்கான பதவியேற்ற தினமான நவம்பர் 19இலே தான் பதவியேற்பார் என அமைச்சர் டிலான் பெரேரா, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கூறினார்.

ஜனவரி 8 இல் மைத்திரிபால வெற்றி பெற்றால், என்ன நடக்குமென ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மக்கள் தீர்ப்புக்கு தலை வணங்கும் தலைவர் என அவர் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் பதவிக் காலம் தொடர்பில் பிரச்சினை எழுந்தபோது இந்த விடயத்தில் உயர் நீதிமன்றம் ஒரு தீர்ப்பைக் கொடுத்துள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பாக எழும் பிரச்சினைகளுக்கு முன்னாள் பிரதம நீதியரசர் வழங்கிய தீர்ப்பு பிரயோகிக்கப்படும் என அவர் கூறினார். (செ-11)

# மகிந்த உலக சாதனை-ஜே.வி.பி

அரச வளங்களை தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்துவதில் அரசாங்கம் உலக சாதனை படைத்துள்ளதாக ஜே.வி.பியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தளவுக்கு அரச அதிகாரத்தை அரச வளங்களும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும் முன்னர் இருந்தே மகிந்த ராஜபக்ஷ தேர்தல் சட்டங்களை மீறும் நடவடிக்கைகளை ஆரம்பித்தார்.

வீதிகளில், மின்கம்பங்களில் கட்அவுட்கள் கட்டப்பட்டன. வீதிகளை மூடும் அளவுக்கு கட்அவுட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

சமூகத்தில் ஏற்பட்ட எதிர்ப்பும், சட்டத்தரணிகள் சங்கம் சட்ட நட வடிக்கை எடுக்க தயாரானதும் கட் அவுட களை அகற்ற வேண்டிய நிலைமை அரசாங்கத்திற்கு ஏற்பட்டது.

அத்துடன் பல அரச நிறுவனங்களில் கட்அவுட்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# ஜனாதிபதித்...

மானது, இப்போது நடைபெறவுள்ள தேர்தல் நடைமுறைகள் குறித்து சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அமையும் என நாங்கள் கருதுகின்றோம். நேற்றையதினமே இந்தச் சம்பவம் குறித்து உடனடியாகவே தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தோம் என்றார் கீர்த்தி தென்னக்கோன்.

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் மட்டுமல்லாமல் மேற்கு மாகாணத்திலும் தேர்தல் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டிருப்பது தொடர்பாக எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் கபே அமைப்பு கூறுகிறது.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு இராணுவத்தினரைப் பயன்படுத்துவதையோ, இராணுவத்தினர் மத்தியில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதையோ எந்தக்காரணத்தைக்கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது. இத்தகைய தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பில் தேர்தல் திணைக்களமே பொறுப்பு கூற வேண்டும் என்றார் கபே எனப்படும் நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன்.

இந்த விடயம் தொடர்பாக தங்களுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது என்பதை தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய உறுதிப் படுத்தினார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட மேலதிக தேர்தல் ஆணையாளர் எம்.எம்.மொகமட், தேர்தல் சட்டமீறல் சம்பவம் ஒன்று இடம் பெறுமானால், அது குறித்து, அந்தப் பிரதேசத்தில் உள்ள தேர்தல் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள முறைப்பாட்டு நிலையத்திற்கு உடனடியாக முறையிட வேண்டும் எனவும் அதன் பின்னர் தேர்தல் திணைக்களத்திற்குத் தெரி வித்தால், அந்தச் சம்பவம் குறித்து அங்குள்ள அதிகாரிகள், சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை நடத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

அவ்வாறில்லாமல், தேர்தல் திணைக்களத்திற்கு அறிவித்தால், சம்பவம் நடைபெறுகின்ற இடத்தில் உடனடியாக விசாரணைகளை நடத்துவது இயலாத காரியமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இராணுவத்தினரை தேர்தல் பணிகளில் ஈடுபடுத்துவதோ, அவர்கள் மத்தியில் அரசியல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதோ சட்டம் அனுமதிக்கவில்லை என்றும் மேலதிக தேர்தல் ஆணையாளர் எம்.எம்.மொகமட் கூறினார்.

# மேசைப்பந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஆசிய் ஜேர்மன் விளையாட்டு பரிமாற்ற நிகழ்ச்சி ஒத்துழைப்புடன் யாழ்.மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கம் மற்றும் வவுனியா மேசைப் பந்தாட்ட சங்கம் ஆகியவற்றின் கூட்டு ஏற்பாட்டில் மேசைப்பந் தாட்டப் போட்டிகள் இன்று காலை 8.00 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அத்தோடு சர்வதேச மேசைப் பந்தாட்ட சம்மேளனத்தின் பயிற்சியாளர் தரம் -1 ற்கு தேர்ச்சி பெற்ற 20 பயிற்சியாளர்கள் சான்றிதழ் பெறும் நிகழ்வும் மற்றும் யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த 13 பாடசாலைகளுக்கு மேசைப்பந்தாட்ட உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார். (கு)

# காணி அபகரிப்பு...

இராணுவம் பொது மக்களின் காணிகளினை பிடித்த வண்ணம் உள்ளது. இது தொடர்பில் சர்வாதிகாரமாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் இராணுவத்திடம் பேசிக் கொண்டிருக்க முடியாது.

எனினும் இது தொடர்பில் இராணுவத்திற்கு கடிதம் மூலம் தெரியப்படுத்திக் கொண்டுதான் உள்ளோம்.

இராணுவத்தினரோடு நேரடியாக பேசும் சந்தர்ப்பம் கிடைத்தால் இவ் அபகரிப்புக்கள் தொடர்பில் வெளிப்படுத்த முடியும்.

யாழ்.மாநகர சபை ஊழல் விசாரணை அறிக்கை வெளிவந்தவுடன் மேலதிக நடவடிக்கையெடுக்கபப்படும்.

வல்வெட்டித்துறை நகரச சபை ஊழல் தொடர்பில் இவ் வருட முடிவிற்குள் நடவடிக்கை எடுக்கப்படும்.

நெல்சிப் திட்ட ஊழல் விவகாரம் கொழும்பு திணைக்கள அதிகாரிகளின் விசாரணை அறிக்கை கிடைத்த பின் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் மத்திய அரசிடம் இருந்து முதலமைச்சர் அமைச்சுக்கு 1499.05 மில்லியன் ரூபாயினை மொத்த ஒதுக்கீடாக வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் 272 மில்லியன் ரூபாவினையே வட மாகாண சபைக்கு வழங்கியதாக முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

மொத்த ஒதுக்கீட்டை 1499.05 மில்லியனாக வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் கடந்த வருடத்தை விட 93 மில்லியன் ரூபாயே அதிகரிக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் குற்றம் சாட்டியுள்ளார். (செ-4)

# பெண்ணின்...

கண்டு பிடிக்கப்பட்டது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் இப் பகுதியில் குவிக்கப் பட்டிருந்த பொச்சுக்களுக்கிடையில் சடலம் போட்டு எரிக்கப்பட் டு இருக்கலாம் எனவும்.

உடல் சரியாக எரியாத நிலையில் அவை நாய்களினால் வெளியில் கொண்டு வரப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

சடலத்தின் முள்ளந்தண்டுப் பகுதியில் ஈரத்தன்மை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. குறித்த எலும்புக் கூட்டைக் கண்ட இராணுவத்தினர் அது தொடர்பாக நெல்லியடி பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுமத் பெரேரா தலைமையிலான குழுவினர் பார்வையிட்டதுடன் பருத்தித்துறை மாவட்ட நீதிபதிக்கு தெரியப்படுத்தியுள்ளனர். (செ-60)

# இலங்கையை...

றும் அவர் தெரிவித்தார்.

முள்ளியவளை மற்றும் கிளிநொச்சி தேர்தல் பரப்புரை கூட்டங்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சர், அமைச்சர் பிரபா கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கனகரட்னம், கிளிநொச்சி மாவட்டத்தின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கியஸ்தர் திருமதி கீதாஞ்சலி நகுலேஸ்வரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (செ-11)

# ரூபாய் 5 ஆயிரத்து...

வேறு வழிகளிலும் சொல்லொணாத் துயரங்களையும் கடுமையான பாதிப்புக்களையும் எதிர்நோக்கிய மாகாணமாகும். இக் காலப்பகுதியில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள்ச் சேர்ந்த பெரும்பாலான வைத்தியசாலைகள் முற்றாக சேதம் அடைந்ததுடன் ஏனைய மாவட்டங்களில் உள்ள சில வைத்தியசாலைகளும் முற்றாகவோ அல்லது பகுதியாகவோ சேதம் அடைந்திருந்தன.

எனவே போருக்குப் பின்னரான காலப்பகுதியில் மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் அடிப்படைச் சுகாதாரக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான தேவைப்பாடு அதிகமாகக் காணப்பட்டது.

வட மாகாணத்திற்குரிய இந்த முதலாவது மாகாண சபை அமைவதற்கு முன்னர் மத்திய சுகாதார அமைச்சு, அரச சார்பற்ற நிறுவனங்கள், வெளிநாட்டு மூல வழங்கள் மற்றும் மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் உதவியுடன் யுத்தத்தால் சேதம் அடைந்த வைத்தியசாலைகளின் அடிப்படைக் கட்டுமான வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

இருந்த போதிலும் மேலும் பல வைத்தியசாலைகளில் உட்கட்டுமான வசதிகளினை மேம்படுத்த வேண்டிய தேவை இன்னும் உள்ளது என்பதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். கடந்த ஆண்டு இம் மாகாண சபையை நாம் பொறுப்பேற்ற போது இங்கு காணப்படும் 99 வைத்தியசாலைகளில் 40 வைத்தியசாலைகள் நிரந்தர வைத்தியர்கள் இன்றி இயங்கிக் கொண்டு இருந்தன என்பதை நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றோன். இருந்த போதிலும் எமது முயற்சியினாலும் மத்திய அரசாங்கத் தினுடைய அனுசரணையுடனும் இன்று இவற்றின் சில குறிப்பிடத்தக்க வைத்தியசாலைகளிற்கு எம்மால் வைத்தியர்களை நியமிக்க முடிந்துள்ளது.

இருந்த போதிலும் இன்னும் சில வைத்தியசாலைகள் நிரந்தர வைத்தியர்கள் இன்றி இயங்கிக் கொண்டிருக்கின்றன. காலக் கிரமத்தில் மத்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் இக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன.

2014 ஆம் ஆண்டுக்குரிய மீண்டெழும் செலவீனத்திற்குரிய மதிப்பீடு ரூபா 3,532.957 மில்லியன். இவற்றில் 31 ஆம் திகதி நவம்பர் மாதம் 2014 வரையான மொத்த மீண்டெழும் செலவீனம் ரூபா 2, 971, 885, 515. 53 ஆகும். மேலும் 2014 ஆம் ஆண்டுக்குரிய மூலதனச் செலவினத்திற்காக ஒதுக்கீப்பட்ட 1, 396.60 மில்லியன் ரூபாவில் 31 ஆம் திகதி நவம்பர் மாதம் 2014 வரையான மொத்த செலவீனம் ரூபாய் 764, 091, 499.72 ஆகும். மூலதனச் செலவீன ஒதுக்கீடானது மாகாண சபை நியதிசட்டம் 561.61 மில்லியன் ரூபா, மத்திய மாகாண திறைசேரி என்பவற்றினூடாக வழங்கப்படும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதிக்கொடை, பிரமாண அடிப்படையிலான கொடை, சுகாதாரத்துறை சார் அபிவிருத்தித் திட்டம் மற்றும் யுனிசெவ் ஆகியவற்றினையும் மத்திய சுகாதார அமைச்சின் ஊடாக வழங்கப்படும் நிதிக் கொடையினையும் மேலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்படும் நிதிக் கொடைகளையும் உள்ளடக்கியது.

இருந்தபோதும் 2014 ஆம் ஆண்டுக்குரிய மாகாண சுகாதார அமைச்சிற்கான மாகாண திறைசேரியின் ஊடாக அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு 500.3 மில்லியன் ரூபாவாகும்.

இவ்வொதுக்கீட்டிற்காக 30. 11.2014 வரை பெறப்பட்ட கட்டுநிதி 387.216 மில்லியன் ரூபாவில் 275.076 மில்லியன் ரூபா அதாவது கிடைக்கப்பெற்ற கட்டுநிதியில் 71% இது வரை [illegible] அவர் தெரிவித்தார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூபாய் 7 ஆயிர...

ஒதுக்கீட்டின் கீழ் கௌரவமான மாகாண சபை அமைச்சர்களின் நிதி ஒதுக்கீட்டில் அவர்களினால் முன்மொழியப்படும் வேலைத்திட்டங்கள் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் முன்பள்ளி துறைகளில் அமுல்படுத்தப்படவுள்ளன.

குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை மூலதன செலவாக கல்வி, கலாசார விளையாட்டுத்துறைகளில் பின்வரும் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படவுள்ளது.

கல்வித் துறைக்கான ஒதுக்கீடானது பாடசாலைக்கான புதிய கட்டிடங்களை அமைத்தல், புதிய ஆசிரிய விடுதிகளை அமைத்தல், சேதமுற்ற பாடசாலை கட்டிடங்களை திருத்துதல், சேதமடைந்த ஆசிரியர் விடுதிகளைத் திருத்துதல், வலயக் கல்வி பணிமனை நிர்மாணித்தல், பாடசாலை மாணவர்கள் வகுப்பறை தளபாட திருத்த வேலைகள், பாடசாலைகளுக்கான புதிய தளபாட கொள்வனவு, பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவு ஆகியவற்றுக்காக பயன்படுத்தப்படும்.

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலுமுள்ள 12 வலயங்களினாலும் சமர்ப்பிக்கப்பட்ட திட்ட முன்மொழிவுகளிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு திட்டங்கள் அமுல் படுத்தப்படவுள்ளன.

விளையாட்டுத் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மூலதன நிதியானது விளையாட்டு மைதானங்களின் புனரமைப்பு உள்ளக விளையாட்டு மைதானங்கள் அமைப்பு மற்றும் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு போன்றவற்றுககு பயன்படுத்தப்படும்.

கலாசார திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியானது இசைக் கருவிகளின் கொள்வனவுக்காகவும் கலாசார மண்டபங்களின் புனரமைப்பு வேலைகளுக்காகவும ஆவணக் காப்பகத்தை உருவாக்குவதற்காகவும் பயன்படுத்தப்படவுள்ளது.

**மீண்டு வரும் செலவினம்**

**மாகாண கல்வி அமைச்சு**

● வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயற்பாடுகளுக்காக 2015 ஆம் ஆண்டுக்கென கோரப்பட்ட நிதி ரூபா 325 மில்லியன் ஆகும். இதற்காக ரூபா 210 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டில் ரூபாய் 178 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனவே எமக்கு சிபார்சு செய்யப்பட்ட 210 மில்லியனையும் பின்வருமாறு செலவு செய்வதற்கு முன்மொழியப்படுகிறது.

1. மாற்றுத் திறனாளிகளுக்காக ரூபாய் 20 மில்லியன் 2015ஆம் நிதி ஆண்டுக்கு கோரப்பட்டது. ஆனால் ஒதுக்கீடு குறைக்கப்பட்டதால் ரூபாய் 7 மில்லியன் மட்டுமே மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந் நிதியிலிருந்து விசேட தேவைக்குரியவர்களுக்கான உபகரணங்களின் கொள்வனவு இச் செலவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

2. பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான உதவி மானியம் ரூபாய் 4 மில்லியன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இந்நிதி வழங்கப்படவுள்ளது.

3. இளைஞர் விவகாரங்களை கையாளுவதற்கு ரூபாய் 16.7 மில்லியன் எம்மால் கோரப்பட்ட போதும் கோரப்பட்ட நிதி வழங்கப்படாததால் எம்மால் இளைஞர் விவகாரத்திற்கு எவ்வித நிதியும் ஒதுக்கீடு செய்யமுடியவில்லை.

4. மனிதவள முகாமைத்துவத்திற்கு 2014ஆம் ஆண்டிற்கு ரூபாய் 6 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் 2015 ஆம் ஆண்டிற்கு நிதி ஆணைக்குழுவால் ரூபாய் 4.8 மில்லியன் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைவாக வேலைத்திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு மேற்கொள்ளப்படவுள்ளது.

5. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வந்த ரூபாய் 3000 ஊக்குவிப்புக் கொடுப்பனவு 2000 ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. 2014-ல் இதற்காக ரூபாய் 90 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

எனினும் 2015-ல் இவ் ஊக்குவிப்புக் கொடுப்பனவை ரூபாய் 6 ஆயிரமாக உயர்த்த வடக்கு மாகாண சபை அங்கீகரித்தும் கூட நிதி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூபாய் 94 மில்லியன் மட்டுமே என்பதால் அதிகரித்த கொடுப்பனவை வழங்க இயலாதுள்ளது.

ரூபாய் 6 ஆயிரமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்க வேண்டுமாயின் 2015ஆம் ஆண்டுக்கு ரூபாய் 144 மில்லியன் தேவை என்பதை கோரியிருந்தும் நிதி ஆணைக்குழு மேற்குறிப்பிட்ட தொகையையே சிபார்சு செய்துள்ளது. முன்பள்ளி ஆசிரியருக்கு ரூபாய் ஆயிரம் அதிகரித்து ரூபாய் 4 ஆயிரமாக மாதாந்த ஊக்குவிப்புப் படியை வழங்கவே எமது நிதி போதுமானதாக உள்ளது.

6. 2015 ஆண்டுக்கு கலாசார திணைக்களத்திற்காக எம்மால் கோரப்பட்ட தொகை ரூபாய் 68 மில்லியன் ஆகும். இதனால் ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 43 மில்லியன் ஆகும். 2014 ஆம் ஆண்டை விட ரூபாய் மூன்று மில்லியன் குறைவாகவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவின் கலை கலாசார அபிவிருத்திற்கும் சென்ற வருடம் (2014) ரூபாய் 5 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

இவ்வருடம் எதிர்பார்த்த நிதி கிடைக்காமையின் காரணமாக இத் தொகை ரூபாய் 3 இலட்சமாக வழங்கப்பட முடியும். எமது பண்பாடு கலாசார விழுமியங்களையும் பேணிப்பாதுகாப்பதற்கு கலாசார திணைக்களத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்தல் மிக அவசியமானதாகும்.

**மாகாண கல்வித்திணைக்களம்**

● மாகாணக் கலவித்திணைகளத்திற்கு ரூபாய் 7156 மில்லியன் 2015 ஆம் ஆண்டுக்கான மீண்டுவரும் செலவீனங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இது அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் ஆளணி கொடுப்பனவுகளுக்காகவும் மற்றும் தொலைபேசிக் கட்டணம், மின்சாரம், போக்குவரத்துப்படி செலவுகளுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

● 2014 ஆம் ஆண்டு இதற்கென ரூபாய் 6909 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. 2015ஆம் ஆண்டிற்கு எம்மால் மாகாணக் கல்வி திணைக்களத்தில் மீண்டு வரும் செலவினங்களுக்காக ரூபாய் 7227 மில்லியன் கோரப்பட்டிருந்தது. இச் செலவீனங்களுக்காக 7156 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

● இரண்டாம் நிலை கல்விப் பாடசாலைகளின் சிறு திருத்தத்திற்கு ரூபாய் 49 மில்லியனும்.

● ஆரம்ப கல்வி பாடசாலை சிறு திருத்தத்திற்கு ரூபாய் 19 மில்லியனும்.

கட்டட சிறுதிருத்தங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தமாக 68 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டில் ரூபாய் 46 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது.

● இதேபோல் பாடசாலைகளுக்கு மின்சாரம் நீர்க்கட்டணம் செலுத்த ரூபாய் 19.5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்றவருடம் (2014 ரூபாய் 11 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள் பல பாடசாலையில் திறக்கப்பட்ட நிலையில் இந் நிதி போதாமையாக உள்ளமையால் இத் தொகை குறைந்தது நான்கு மடங்காகவேனும் அதிகரிக்கப்பட வேண்டும்.

● மாணவர்களுக்கான புலமைப் பரிசில் கொடுப்பனவு 2014 ஆம் ஆண்டில் ரூபாய் 26 மில்லியனிலிருந்து 2015 ஆம் நிதியாண்டுக்கு ரூபாய் 30 மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனினும் மத்திய அரசின் பாதீட்டில் புலமைப்பரிசில் தொகை அதிகரித்து வழங்கப்பட வேண்டும் என கோரப்பட்டுள்ளதால் இதனை நடைமுறைப்படுத்துவதற்கு மேலும் நிதி தேவைப்படுகிறது.

அதாவது ரூபாய் 500லிருந்து ரூபாய் 1500 ஆக இத்தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதால் தற்போதைய ஒதுக்கீட்டானது மூன்று மடங்காக அதிகரிக்கப்படவேண்டும்.

● மாகாணக்கல்வி திணைக்கள நிர்வாக செலவீனங்களுக்கு ரூபாய் 418 மில்லியனும் விசேட தேவையுடைய மாணவர்களின் மீண்டெழும் செலவிற்காக ரூபாய் 8.5 மில்லியனும் முறைசார கல்விப்பிரிவுக்காக ரூபாய் 11 மில்லியனும் கல்விதிட்டமிடல் அபிவிருத்திக்கு ரூபாய் 8 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

● பாடசாலைகளின் தரமான உள்ளீட்டு நடவடிக்கைகளுக்கு ரூபாய் 194 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டில் ரூபாய் 169 மில்லியன் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் மூலம் கல்வி செயற்பாட்டுக்காக தர உள்ளீடுகள் ஓரளவுக்கு வழங்கப்பட முடியும்.

● பாடசாலை மாணவர்களுக்கிடையே தேசிய ரீதியில் நடைபெறும் போட்டிகளில் வட மாகாணம் 9 ஆவது இடத்திலிருந்து 8,7,6 என முன்னேறி 2014ஆம் ஆண்டு 5 ஆவது இடத்தினைப் பெற்றிருப்பது பெருமையாகும். இம் மாணவர்களின் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளுக்காக ரூபாய் 3 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் எமது மாகாண மாணவர்களின் அடைவு மட்டத்தினை மேலும் அதிகரிக்க முடியும் என்பது உறுதியானதாகும்.

**விளையாட்டுத் திணைக்களம**

● விளையாட்டுத் திணைக்களத்திற்கு 2014 ஆம் ஆண்டு ரூபாய் 36 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டுக்கு எம்மால் ரூபாய் 55 மில்லியன் கோரப்பட்டுள்ளது. குறித்த ரூபாய் 55 மில்லியனும் எமக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

சென்ற வருடத்தைவிட விளையாட்டுத்திணைக்களத்திற்கு ரூபாய் 20 மில்லியன் கூடுதலாக ஒது[illegible]பட்டுள்ளது. இதன் மூலம் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

● மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல், விளையாட்டு வீரர்களுக்காக பயிற்சி செயலமர்வுகள் (Coaching Camp) தேசிய மட்ட போட்டிகளில் கலந்து கொள்ளும் வீர, வீராங்கனைகளுக்காக செலவீனங்கள் விளையாட்டுத் துறையில் சர்வதேச தேசிய மட்டங்களில் சாதனை படைக்கும் வீர, வீராங்கனைகளை கௌரவிக்கும் வர்ண இரவுகள் (Colours Night) நிகழ்வினை நடத்துதல் போன்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளது எனத் தெரிவித்தார். ([illegible]

## இலங்கையை முன்னேற்...

டுள்ளது.

கல்வி, சுகாதாரம், சாலை அபிவிருத்தி என பல துறைகளிலும் இன்று வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

யுத்த காலத்தைப் போலல்லாமல், இப்போது யாரும் நாட்டின் எந்தப்பகுதிக்கும் சென்று வரலாம்.

உயிர்ப் பாதுகாப்பு குறித்து அச்சமடையத் தேவையில்லை. இருபத்தேழு ஆண்டுகளின் பின்னர் வட மாகாணத்தில் ஒரு மாகாண அரசுக்கான தேர்தலை தாங்களே நடத்தினோம். வடமாகாண சபைக்கென பெருமளவு நிதியை ஒதுக்கீடு செய்துள்ளோம்.

கடந்து போன இருண்ட யுகத்திற்கு திரும்பிச் செல்வதற்கு அனுமதிக்க முடியாது. குரோதம் நிறைந்த அந்தக் காலத்தை மறந்து, எல்லா மத மக்களும், எல்லா இன மக்களும், நாம் எல்லோரும் ஒன்றுபட வேண்டும். ஒருவர் மற்றவர்களுடைய கலாசாரத்தை மதத்தை மதித்து வாழ வேண்டும். அதற்காக எனக்கு ஆதரவளிக்க வேண்டும் என மகிந்த கேட்டுக்கொண்டார்.

முள்ளியவளையில் நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் கிளிநொச்சியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்தில் உரையாற்றிய மகிந்த ராஜபக்ஷ, யுத்தகாலத்தின்போது இழந்திருந்த காணிகளையும் விடுதலைப்புலிகளின் வங்கிகளில் அடகு வைத்திருந்த தங்க நகைகளையும் தமது அரசு மக்களுக்கு மீண்டும் திருப்பிக் கொடுத்ததைப் போன்று வடபகுதி மக்களுக்கு என்னென்ன தேவையோ அவற்றையெல்லாம் வழங்குவதற்குத் தாம் தயாராக இருப்பதாக குறிப்பிட்டார்.

வடமாகாண சபையின் ஊடாக வடபகுதி மக்கள் நன்மையடைய வேண்டும் என்றும், அதற்கு பெருமளவு நிதியைத் தாங்கள் ஒதுக்கியிருப்பதாகவும், அவற்றின் மூலமான நன்மைகள் வடபகுதி மக்களுக்குச் சென்றடைய வேண்டும் என்

23ஆம் பக்கம் பார்க்க...

British College of Higher Studies
வழங்கும் மிகக்குறைந்த கட்டணங்களில்
மாணவர்களுக்கான விடுமுறை காலப் பயிற்சி நெறிகள்
அன்பார்ந்த மாணவர்களே,
உங்கள் ஒரு மாத பாடசாலை விடுமுறையினை மிகவும் பயனுள்ளதாக்க விரும்புகிறீர்களா? நீங்களும் ஆங்கிலத்தில் சரளமாக ஒரு மாதத்தில் பேச விரும்புகின்றீர்களா? நவீன தொழில் நுட்ப போதனாமுறையின் கீழ் உங்களை மெருகேற்ற முனைகிறீர்களா? சரளமாக ஆங்கிலத்தில் கதைக்க முடியவில்லையென்று ஏக்கத்துடன் இருக்கின்றீர்களா? கவலையை விடுங்கள் இப்பொன்னான விடுமுறை காலத்தில் உங்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட கற்கை நெறிகளை நாம் வழங்கக் காத்திருக்கின்றோம். உங்களின் நேரத்திற்கேற்ப அனைத்து வகுப்புகளும் ஒழுங்கு செய்து தரப்படும்.
Spoken English with Grammar
Duration : 80 Hrs
Diploma in English
Duration : 50 Hrs
வகுப்புகள் யாவும் நவீனமயப்படுத்தலின் கீழ் Speaking, Reading, Writing & Listening என வகைப்படுத்தி ஒவ்வொரு பிரிவும் பிரத்தியேக விரிவுரையாளர்களினால் நடாத்தப்படும்.
(Tutes, CD Lessons, Dictionaries, etc என்பன இலவசமாக வழங்கப்படும்)
Batches Starts on
Batch I : 20th Saturday 2014
Batch II : 22nd Monday 2014
Batch III : 23rd Tuesday 2014
Batch IV : 25th Thursday 2014
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913,0777222422, 0714299935
(C-9410)

அனைத்து நாடுகளிற்குமான விரைவு பொதிகள் சேவை
எந்த நாட்டிற்கும் உணவு, கருவாடு,எண்ணெய் வகைகள் என எல்லாவகை பொருட்களையும் மிகவும் குறைந்த கட்டணத்திலும் விரைவாகவும் அனுப்பிக்கொள்ளலாம்
யாழ்மாவட்டம்,கிளிநொச்சியில் எந்தபிரதேசமாக இருப்பினும் உங்கள் வீடுகளில் தராசுடன் வந்தே பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்
வீடுகளில் பெற்றுக்கொள்ளப்படும் பொதிகளுக்கு மேலதிக கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது
5Kg க்கு உட்பட்ட பொதிகளுக்கு பெட்டிநிறை சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது
V2 Travels and Tours
யாழ்ப்பாணம் 49A சர்ப்பல் லேன், பொது நூலகம் முன்னால் 0773867257
நெல்லியடி முடக்காட்டுச்சந்தி 0776699892
வல்வெட்டித்துறை யாழ்வீதி - வல்வெட்டி 0776697960
(C-9425)
● மிகவும் குறைந்த கட்டணத்தில் 3 மாத பயிற்சியுடன் சர்வதேச அங்கீகாரமுடைய சான்றிதழ் மற்றும் வேலைவாய்ப்புக்கள்
● [illegible] தொழில்செய்ய விரும்பும் முகவர்கள், தனிநபர்கள் வரவேற்கப்படுகிறார்கள்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible], பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org